# தமிழ்
# தமிழ்
# தமிழ்
# தமிழ்
# தமிழ்
# தமிழ்

கழக வெளியீடு

# தமிழ்

(சொற்பொருள் வரலாறு)

ஆசிரியர் :

கழக இலக்கியச் செம்மல்

**புலவர் இரா இளங்குமரன்**

திருநகர், மதுரை-6.

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
79, பிரகாசம் சாலை (பிராட்வே) சென்னை-108.

1983

© இராமு இளங்குமரன் (1930)

1983 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED

கிளைகள் :

திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
கும்பகோணம்-1 திருச்சிராப்பள்ளி-2

கழக வெளியீடு: கஎச0

முதற் பதிப்பு : செப்டம்பர் 1983

P31v
N83

THAMIZH

அப்பர் அச்சகம், சென்னை-600 108. (I/1)

# பதிப்புரை

தமிழும் சைவமும் தற்கிழமைப் பொருள. தமிழி னின்று சைவத்தையோ, சைவத்தினின்று தமிழையோ பிரித்துக் காணல் இயலாது. ஆகலின் கழகம், தோன்றிய நாளிலேயே தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகக் கொண்டு இனிது பேணுதற் கடனை மேற்கொண்டது. அதனை, என்றும் நின்று நிலையுறுத்தற்கெனத் 'தென்னிந் திய தமிழ்ச் சங்கம்' என்றும் 'தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம்' என்றும் இரண்டு அற நிறுவனங்களை நிறுவித் தொண்டில் தலைப்பட்டது.

சிவநெறி வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பல்லாற்றானும் தொடர்ந்து பணி செய்துவரும் கழகம், தனித் தமிழ்க் கொள்கைக்குப் பரப்பகமாக இயங்கிவருதலும் தமிழ்ப் பற்றாளர் நன்கனம் அறிந்ததேயாம். தவத்திரு மறைமலை யடிகளார் கொள்கைவழியில் தமிழ் வளர்க்கும் கழகம் மொழி ஞாயிறு பாவாணர் வளப்பெருங் கொடையைத் தமிழுலகம் துய்க்க முந்துநின்று முறையாகப் பணிசெய்தது. அவ்வாறே தமிழ் வளர்ச்சிக்குத் தான் தோன்றிய நாள்தொட்டுத் துறைதோறும் நூல்களை வெளியிட்டுத் தொண்டு செய்து வருதல் கண்கூடு!

தமிழ்த் தொண்டுக்கெனவே தம்மை முற்றாக ஆட் படுத்திக்கொண்ட பெருந்தகை, மேனாள் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் ஆவர். அவர்கள் 'தமிழ்' என்னும் பெயரிய இந்நூல் வெளிப்படு தற்கு அவாவினர்; கழகப் புலவர் திருமிகு இரா. இளங்குமரனர்

இதனை எழுதத் தக்காரெனத் தேர்ந்து தூண்டினர்; தனித் தமிழ் உணர்வும் தமிழ் வளர்ச்சியும் தமிழர் கடமையும் வலி யுறுத்தப்பெற்று விழிப்புறுத்த விரும்பினர். அவர்கள் விருப்பை இனிது நிறைவேற்று முகத்தான் இந்நூலைப் புலவர் அவர்கள் எழுதியுதவியுள்ளார்கள். அத்துடன் தாமரைச் செல்வர் அவர்களுக்கு இதனை அடியுறையாக்கி யுள்ளமையும் பாராட்டுதற்கு உரியதாம். இந்நூலினைச் சிறந்த முறையில் எழுதியுதவிய ஆசிரியருக்குக் கழகத்தின் நன்றி என்றும் உரித்து.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**



# படையல்

தவத்திரு மறைமலையடிகளாரால் தோற்றுவிக்கப்பெற்ற தனித்தமிழ் இயக்கத்தைத், தம் புரிவு தெரிந்த நாள்முதல் இறுதி நாள்வரை—நெட்ட நெடுங்காலம், கட்டிக்காத்தும் போற்றி வளர்த்தும், அதன் தனிப்பெருங் கொள்கைப் பரப்பாளராக நினைவாலும் சொல்லாலும் செயலாலும் பல்துறைக் கடன்கள் ஆற்றிய தமிழ்ப் பெரியார், மேனாள் கழக ஆட்சியாளர், தாமரைச் செல்வர் திருமிகு வ. சுப்பையா பிள்ளை அவர்களுக்குத் 'தமிழ்' என்னும் பெயரிய இந்நூலைப் 'படைய'லாக்கிப் பணிகின்றேன்.

தமிழ்த் தொண்டன்,

இரா. இளங்குமரன்.

# நூலாசிரியன் நுதல்வு

தமிழ் என்பது தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழினம், தமிழர் வாழ்வு, தமிழ்க்கலை முதலிய பலவும் தழுவி வழங்கும் சொல்லாகும். இத்தமிழ் என்னும் சொல்தானும் தமிழில்லை என்றும், தமிழ்ச் சொல்லேயாம் என்றும் நெடுங்காலமாக அறிஞர்கள் இருவேறு கருத்தினராய் இகலி வந்துளர். இத்தமிழ் என்னும் சொல்லின் பொருள் குறித்தும், அமைப்புக் குறித்தும் பல்வேறு கருத்துகளையும் அவர்கள் நடமாடவிட்டுள்ளனர். இவற்றையெல்லாம் ஓராற்றான் ஆய்ந்து வெளிப்படுத்தப்பெறும் நூல் தமிழ் ஆகும்.

தமிழ் என்னும் பெயரில் திருமணம் செல்வக்கேசவராய முதலியார் ஒருநூல் இயற்றினார். தனித்தமிழின் தனிமாண்பை உணர்ந்து போற்றவல்ல திறம்வாய்ந்தவராக அவர் இருந்தும், பிறமொழிக் கலப்புப்பற்றிய கருத்தில் சறுக்கினார். 'பரிதிமாற் கலைஞர்' தம் பெயரைத் தனித்தமிழாக மாற்றிக்கொண்டார் எனினும் தனித்தமிழ்ப் பெயர்களாலும், தனித்தமிழாலும் நூல் யாத்தார் அல்லர். மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்கம் கண்டதுடன் தம் நூல்களைத் தனித்தமிழில் யாத்தார். தனித் தமிழ் மாண்பு அறிதற்கு முன்னர்ப் பிறமொழிக் கலப்பு அமைய எழுதிய நூல்களையும், மறுபதிப்பில் தனித்தமிழாக்கி வெளியிட்டார். அவர் வழியைச் சிக்கெனக்கொண்ட பாவாணர் தனித் தமிழைப் பீடுற வளர்த்துப் பெருநிலைப்படுத்தினார்.

நயத்தகு கொள்கை ஒன்று தோன்றுவதற்குமுன் அக் கொள்கையைப்பற்றிக் கருத்தொன்றும் இலராகக் கடனாற்றி னாரைக் குற்றம் சொல்வது முறையன்று; அறமும் அன்றாம். ஆனால் ஒரு நயத்தகு கொள்கை தோன்றி அக்கொள்கைக்கென

ஓர் இயக்கமும் தோன்றிக் கடனாற்றிவரும்போதும் கருத்தின்றிச் செயல்படுவார் உளராயின், அவர் அறியாது செய்வாரல்லர். அறிந்துகொண்டே அக்கொள்கைக்கு எதிரணியில் செயல் படுபவராய் அல்லது அக்கொள்கையை அழித்தொழிப்பதே கடமை எனக் கொண்டவராய் இருத்தல்வேண்டும். அத்தகையர் நாளும் நாளும் பெருக்கமுற்று வருகின்றனர். தமிழால் வாழ்வாரும் தமிழ்க்கேடராய் வாழ்கின்றனர். அவர் செய்கையே தமிழ்த்தொண்டு என்றும் தமிழ் வளர்ச்சி என்றும் முனைப்பும் முறைப்பும் காட்டுகின்றனர். இனித் தமிழ்க்கதை எழுதிப் பேரும் பெருமையும் பெறுவாரும் மொழியைச் சவலைப்படுத்தியும் அம்மைவடுப்படுத்தியும் புற்றுநோய் பற்றும்வண்ணம் புன்மை யுறுத்தும் வருகின்றனர். இத்தகையர் அறிந்துகொண்டு செய்யும் அழிசெயலாலும் இழிசெயலாலும் மொழியின் மரபும், மொழியின் தனித்தன்மையும் விரைவில் கெடுதற்கும், கொச்சை மொழியும் கலப்பு மொழியுமாகிப் புதுமொழியெனக் கிளைத்தற்கும் இடமாகிவிடும் என்னும் முறையான அச்சம், தமிழ்மொழிமேல் உண்மைப் பற்றுடையார்க்கெல்லாம் உண்டாகியுள்ளது. பிற மொழிச் சொற்களை வரைதுறையின்றிக் கலப்பதுடன், பிறமொழி எழுத்துகளை வரைகடந்து செறிப்பதும் பிறமொழித் தொடர்களைத் தமிழ் எழுத்தில் எழுதுவதுடன், பிறமொழி எழுத்தாலேயே பக்கம் பக்கமாக எழுதிக்குவிப்பதும் புதுக் கேடாயிற்று. வடமொழி காட்டிவருகின்ற வல்லாண்மையினும், ஆங்கில வல்லாண்மை விஞ்சவல்லதாய் இக்காலம் வீறிட்டுக் கிளர்ந்துள்ளது. எழுத்துச் சீர்திருத்தம் என்னும் பெயரால் பலர் பலர் கேடுசூழவும் துணிந்துள்ளனர்! இந்நிலையில் இத்தமிழ் என்னும் நூல் உந்தும் உணர்வால் எழுதப்படுவதாயிற்று.

இந்நூலை எழுதுதற்குத் தூண்டியும் ஊக்கியும் உதவிய வர்கள், கழக மேனாள் ஆட்சியர் தாமரைச் செல்வர் திருமிகு

வ. சுப்பையா பிள்ளை அவர்கள் ஆவர். முற்றுகத் தமிழ் வாழ்வுக்கே தம் வாழ்வை ஒப்படைத்துத் தொண்டாற்றிய அப்பெருமகனுர்க்கு நன்றி செலுத்துமுகத்தான் இந்நூல் அவர்கள் திருவடிகளுக்குப் படையலாக்கப் பெற்றுள்ளது.

மருகர் என்னும் தமிழ்ச்சொல்லின் விழுமிய பொருளுக்கு ஏற்பத் தாமரைச் செல்வர் அவர்கள் ஆற்றிய அரும்பொறையைத் தாங்கி, அவர்கள் வழியில் நடையிட முந்துநிற்கும் இந்நாள் கழக ஆட்சியர் திருமிகு இரா. முத்துக்குமாரசாமி அவர்கள் இந்நூலை விழைந்து வெளிப்படுத்தினர். அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

செல்வம், திருநகர்,
மதுரை-6.
22—8—'83

தமிழ்த் தொண்டன்,
இரா. இளங்குமரன்.

# தமிழ்

**தமிழின் தொன்மை :**

தமிழ் என்பது மிகுபழஞ்சொல். ஆசிரியர் தொல்காப்பியனுர்க்கு ஒரு சாலை மாணவராக விளங்கிய பனம்பாரனுர் பாடிய தொல்காப்பியப் பாயிரத்தில், 'தமிழ் கூறு நல்லுலக'த்தைச் சுட்டுகிருர். அவரே, அதே பாயிரத்தில்' 'செந்தமிழ் இயற்கை சிவணிய நிலம்' என்றும் குறிக்கிருர். ஆகலின் தமிழ்மொழி, தமிழ்நாடு, தமிழ் மாந்தர், தமிழ் இலக்கண இலக்கியங்கள் ஆகியவற்றின் தொல் பழமை நன்கு அறியப்பெறும்.[1]

'ழகர' வீற்றுச் சொற்புணர்ச்சிபற்றிக் கூறும் ஆசிரியர் தொல்காப்பியனுர், 'தமிழ்என் கிளவியும் அதனே ரற்றே' என விதி வகுத்துள்ளார். 'தாழ்' என்னும் சொல்லோடு 'கோல்' என்னுஞ் சொல் வருமாயின் 'தாழக்கோல்' என அக்குப்பெற்று வருதலும் உண்டு என்று கூறும் அவர், அந் நூற்பாவைத் தழுவி, 'தமிழ்' என்னும் சொல்லும் 'அக்கு' என்பதைப் பெற்றுவரும் என்ருர். அதற்கு உரை வகுத்தவர்கள், 'தமிழக்கூத்து, தமிழச்சேரி, தமிழத் தோட்டம், தமிழப்பள்ளி' என எடுத்துக் காட்டுக் கூறினர்.

**தமிழின் பொருள் :**

'தமிழ்' என்பது பலபொருள் ஒரு சொல்லாக வழங்குகின்றது. அப் பலபொருள்களுள், தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் மக்கள் என்பவை குறிப்பிடத்தக்கவையாம். இம் முப்பொருள்களிலும் முதற்பொருளாக அமைந்தது எது என்பது ஆராயத் தக்கதாம்.

தமிழ் என்னும் மொழியின் பெயர் அம் மொழி பேசும் மக்களுக்கும் அவர்கள் வாழும் நாட்டுக்கும் ஆயிற்ரு?

---

1. செந்தமிழ் நிலத்து வழக்கு (தொல். எச். 2) செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம் (தொல். எச். 4)

தமிழ் என்னும் நாட்டின் பெயர், அந் நாட்டு மக்களுக்கும் அந் நாட்டு மக்கள பேசிய மொழிக்கும் பெயராயிற்ரு?

தமிழ் என்னும் மக்கட் பெயர், அம் மக்கள் பேசும் மொழிக்கும் அவர்கள் வாழும் நாட்டுக்கும் பெயராயிற்ரு?

நாடு (நிலம்), மக்கள், மொழி என்பவற்றுள் முதன்மையானது நிலமேயாம். நிலந்தான் அவ்விடத்து வாழ்வார்க்கு உயிர்ப்புக்களமும் நிலைக்களமுமாம். நிலம் இல்லையேல் மாந்தர் தோன்றியிரார்; அவரிடத்து மொழியும் தோன்றியிராது. ஆகலின் நிலம், மக்கள், மொழி என்னும் முறையே முறையாய்க் கொள்ளுதல் முறைமையாம். இது, தோற்றத்தின் இயற்கை முறை' ஆகலின், 'முதல், கரு, உரி'யென முப்பொருள் வகுக்கும் தொல்காப்பியர் முதற் பொருளில் முதற் பொருளாகக் குறிப்பது நிலமேயாம்.

> "முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்
> இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

என்பது அவர் கூறும் நூற்பா (950).

**தமிழ்—மொழிப் பெயரே:**

நிலம் முன்னதேனும், அதன்கண்ணேதான் மாந்தரின்தோற்றம் நிகழ்ந்ததேனும், அம் மாந்தரிடத்து மொழித்திறம் அமைந்த பின்னரே பெயரீடு நிகழ்ந்திருக்கும் என்பது வெளிப்படை. ஆதலால், தமிழ் என்பது மொழிப் பெயராய், அதன் பின்னர் அம் மொழியைப் பேசும் மாந்தர் பெயராய், அதன் பின்னரே அவர் வாழும் நாட்டின் பெயராய்ப் பிறபிறவாய் அமைந்திருத்தல் வேண்டும். இவ் வமைதியால் 'தமிழ்' என்பது மொழியின் பெயராக முகிழ்த்தது என்பதே தகும். ஏனை மொழி நிலை எவ்வாருயினும், தமிழ்மொழி நிலைக்கு இம்முறை முற்றிலும் தகும்.

இனித் தொல் தமிழ் நிலப்பரப்பாகிய குமரிக்கண்டம் தமிழ் நாடு என்னும் பெயருடன் இருந்ததில்லை. ஏழ் தெங்கநாடு ஏழ் மதுரை நாடு, ஏழ் முன்பாலை நாடு, ஏழ்பின்பாலை நாடு, ஏழ்

குன்றநாடு, ஏழ்குணகாரை நாடு, ஏழ் குறும்பனை நாடு என்பன வும் பன்மலை நாடு என்பதுமே ஆங்கிருந்த நாட்டின் பெயர் களாய் அறியப் பெறுகின்றன. (சிலப். 8 : 1 - 2 அடியார்க்.)

தென்பகுதி கடல் கொண்ட பின்னரும், தமிழ் வழங்கிய நிலப்பகுதி, 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பெனவே' வழங்கப்பெற்றது. (தொல். 1336) புறப்பாடல்கள் பலவும் தமிழ்நாட்டை மூவருக்கு உடைமையாகப் பகுத்துக் கூறுகின் றனவேயன்றி ஒரு நாடாகக் கூறினவல்ல. (35, 109, 110, 205, 357) புறத்தில் ஒரு பாடல் தமிழ்நிலத்தைத் தமிழகம் என்கிறது. (168) அதுவும் 'தமிழ்மொழி வழங்கும் நிலம்' என்னும் பொருளி லேயே ஆள்கின்றது. எஞ்சிய நூல்களில் 'தமிழகம்' உண் டேனும் ஒரு நாட்டின் பெயராய் வழங்கிற்றில்லை.

பிற்காலத்திலும் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, துளுநாடு, கொங்குநாடு எனப் பகுத்து வழங்கப்பெற்றனவேயன்றித் 'தமிழ்நாடு' என ஒரு நாடாக வழங்கப் பெறவில்லை. தமிழகம், தமிழ்நாடு என்று வழங்கப்பெற்றனவெல்லாம் 'தமிழ்மொழி வழங்கும் நிலம்' என்னும் பொருளிலேயே வழங்கப்பெற்றுள்ளன.

தமிழ் என்னும் சொல் தோன்றிய பின்னரே அம்மொழி பேசுவார் 'அர்' என்னும் ஈறு சேர்ந்து 'தமிழர்' என்னும் பெயர் எய்தினர் என்பது வெளிப்படையாகலின், தமிழ்நாடு என்னும் பெயருக்கும், தமிழர் என்னும் பெயருக்கும் மூலப் பொருளாய் அமைந்தது 'தமிழ்' என்னும் மொழிப் பெயரேயாம்.

**தமிழ்—பலபொருள் ஒரு சொல் :**

'தமிழ்' என்னும் மொழியின் பெயராய் அமைந்த 'தமிழ்' என்னும் சொல்தானும் 'தமிழ்ச்சொல்' இல்லை என்பாரும் உளராயினர். நகைப்புக் குரியதாம் இச் செய்தி எனினும், நன்கு ஆராயத்தக்க அளவுக்குக் கடப்பாடும் உண்டாயிற்று. ஏனெனில், அத்துணைப் பொல்லாப் புனைவுகள் பொருந்தப் புனைய வல்லாரால் நெட்ட நெடுங்காலமாகவே புனைந்து புனைந்து பறையறையப் பெற்றுள.

தமிழ் என்னும் சொல்லுக்கு வழங்கப்பெறும் பொருள்களை யெல்லாம் தொகுத்துக் கண்ட பின்னரே, அப் பொருள் நிலையும், சொல்லமைதியும் நோக்கி ஒரு முடிவுக்கு வருதல் கூடும். ஆகலின் தமிழ் என்னும் சொல்லுக்கு வழங்கப்பெறும் பொருள்கள் இவையென முதற்கண் காணலாம்.

'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபு' என்னும் சிறுபாணாற்றுப் படையும் (66) 'தமிழ் முழுதறிந்தோய்' என்னும் புறநானூறும் (50) 'தமிழ்வரம் பறுத்த' என்னும் சிலம்பும் (8 : 2) தமிழ் என்பதற்குத் 'தமிழ்மொழி' என்னும் பொருளுண்மையைக் குறித்தன.

'தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன்' என்பதிலுள்ள தமிழ், தமிழ் வழங்கும் நாட்டைக் குறித்து வந்தது (புறம். 51)

'அருந்தமிழ் ஆற்றல்' (சிலப். 26 : 161) 'தண்டமிழ் இகழ்ந்த' (சிலப். 28 : 153) என்னும் இடங்களில் வரும் தமிழ், தமிழ் வேந்தரைக் குறித்தது.

'தமிழ் தலைமயங்கிய தலையாலங் கானம்' என்பதும் (புறம். 19) 'வண்டமிழ் மயக்கம்' என்பதும் (சிலப். 25 : 158) தமிழ் என்பதற்குத் தமிழ் வீரர் என்னும் பொருளுண்மை விளக்கின.

தமிழ் என்பது பொருளிலக்கணத்தைக் குறிக்கும் என்பது "தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்' என்னும் பரிபாடலால் (9 : 25) விளங்கும்.

'தமிழ்' 'அகப்பொருள்' என்னும் பொருளைத் தரும் என்பது, "இந்நூல் என் நுதலிற்றோ எனின், தமிழ் நுதலிற்று" எனவரும் இறையனார் அகப்பொருள் உரையால் விளங்கும் (1). அகப்பொருளுள்ளும், களவொழுக்கம் தமிழ் எனப் பெறுதல் பெருங்கதையால் விளங்கும் (4. 17 : 67).

'வடவெழுத்தை விலக்கி வந்த எழுத்தாலே கட்டப் பெற்ற ஒலியளவைக் கூறுபாடும் இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்களும் தமிழ் என்று கூறப்பெறுதல் உண்டு என்பது 'ஆடல் பாடல் இசையே தமிழே' என்னும் சிலப்பதிகாரத்திற்கு

அரும்பதவுரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் எழுதிய உரையால் தெளிவாகும். தமிழ் என்பது தேவாரத் திருப்பதிகத்தைக் குறித்தல் ஆளுடைய பிள்ளையார் பாடல்களில் பயிலக் காணலாம்.

கூத்து என்னும் பொருளைத் தமிழ் என்னும் சொல் தரும் என்பது 'இருவகைக் கூத்தும்' என்னும் சிலப்பதிகாரத்திற்கு அடியார்க்கு நல்லார் வரைந்த உரையால் புலப்படும் (3 : 12). ஓசை வகையுள் 'தமிழ்' என்பதும் ஒன்று என்பதும் அவர் உரை தெரிவிக்கும் (6 : 35).

தமிழ் என்பது தமிழறவோரைக் குறித்துவருதல் 'தண்டமிழ் நல்லுரை' என்பதாலும் (சிலப்: 28. 209), நங்கையாகவும் அரசியாகவும் உருவகித்துவருதல் 'தமிழ்ப்பாவை' என்பதாலும் (சிலப். 12 : 1 : 48 ; மணி. பதி. 25) அறியப்பெறும். தமிழ் வேலியாக (காவலாக) அமைதலைப் பரிபாடல் திரட்டு (8) 'தண்டமிழ் வேலித் தமிழ்நாட்டகமெல்லாம்' என்றுரைக்கும். தமிழ் தெய்வமென்னும் பொருட்டதாதல் 'தமிழணங்கு' என்பதால் வெளியாம்.

இவையெல்லாம் தமிழ் என்னும் சொல்லுக்கு வெளிப்படையாகவும், குறிப்புவகையாகவும், தழுவல்வகையாகவும், சார்புவகையாகவும் அமைந்த பொருள்களாம்.

தமிழ் என்பதற்கு இனிமை, நீர்மை என்னும் பொருள்கள் உண்மை, நிகண்டுகளாலும் இலக்கியச் சான்றுகளாலும் வெளிப்படும்.

*'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'*

என்பது பிங்கலம்.

*'தமிழென்ப தினிமை நீர்மை'*

என்பது சூடாமணி.

தமிழுக்கு இனிமைப் பொருளுண்மையால், 'தமிழ்தழீஇய சாயலவர்' என்றார் திருத்தக்க தேவர் (சீவக. 2026). 'தமிழ்ப்

பாட்டிசைக்கும் தாமரையே' என்றார் கம்பர் (இராமா. பம்பைப். 29).

இன்பம். இயற்கையின்பமும் செயற்கையின்பமும், பேரின்பமும் சிற்றின்பமுமாகப் பகுக்கப்படுதல் உண்டாகலின், தமிழின்பம் எத்தகைத்தெனக் காட்டுவான் விருப்பிய திருத்தக்க தேவர் 'இன்றமிழ் இயற்கை யின்பம்' என்றார் (2063).

'தமிழின்பம், சிற்றின்பம் அன்று; பேரின்பமே' எனக் கண்டோர் 'தமிழென்ப தினிமை முத்தி' என்றனர்.

முத்தியின்பத்திற்கு வித்தாக இருக்கும் 'இறைமை'யே தமிழ் எனக் கொண்டாரும் உளர். அவர், 'தமிழ் சிவம் இனிமையெனும் தனிப்பொருளாம்' எனக், குமரப்பர் பேரிசைச் சூத்திரம் ஒன்றைக்காட்டி நாட்டுவர். 'புல்லாணித் தென்னன் தமிழை' என்பதால் தமிழைத் திருமாலாக்கினார் (பெரியதிருமடல். 131) திருமங்கை ஆழ்வார்.

தமிழ் இனிமையாவதுடன் நெடிதுவாழவைப்பதுமாம் என்பதால் 'அமிழ்த'மெனக் குறிப்பர். இப்பொருளும் இன்பப் பொருள் தழுவியதேயாம். 'தமிழ் தமிழ்' எனப் பல்கால் அடுக்கியுரைக்க 'அமிழ்து அமிழ்து' எனவருதலைச் சுட்டுவர் அவர். 'தமிழுக்கு அமுதென்று பேர்' என்று பாடுவார் பாவேந்தர்.

'நீர்மை' என்னும் பொருளும் தமிழ் என்பதற்குக் கண்டனர் அல்லரோ! நீர்மை என்பது தன்மையாகும். எத்தன்மையோ எனின் தண்மை, நன்மை, தூய்மை, பெண்மை முதலியவாம். நீர்மையின் பொருளாழம், "நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்நீர பேதையார் நட்பு" என்னுங் குறளில்வரும் 'நீர, நீரவர்' என்பவற்றால் புலப்படும்.

தமிழின் நீர்மைகளை ஆய்ந்த மொழிஞாயிறு பாவாணர், தொன்மை, முன்மை, எண்மை (எளிமை), ஒண்மை (ஒளிமை), இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை எனப் பதினாறாய் எண்ணுவார். (தமிழ் வரலாறு - முகவுரை)

தமிழ் என்பதற்கு இவ்வாறெல்லாம் கூறப்பெற்ற பொருள்களுள் தமிழின் - தமிழரின் - தமிழகத்தின் - இயல்புக்கு முரணானது ஒன்றுமில்லையாம். ஆகலின் தமிழ் என்பது தமிழ்ச் சொல்லே என்பதற்கு எள்ளளவும் ஐயமின்றாம். இவ்வாறாகவும், 'தமிழ்' என்பது 'திராவிடம்' என்னும் சொல்லின் வழியாக வந்த சொல் என ஒரு மயக்கத்தைப் புகுத்தி மாற்றத்தை நிலைநாட்டி மனங் களித்தார் பலர். அதனை மறுத்து மறுத்து மறுகினாரும் பலர்.

## தமிழும் திராவிடமும்:

தமிழில் 'பிரயோக விவேகம்' என்பதொரு நூல். அதனை இயற்றியவர் சுப்பிரமணிய தீட்சிதர் என்பார். அவர், "வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இலக்கணம் ஒன்றே'' என்ற அடிப்படை முரண்பாட்டில் நூல் செய்தவர். அந்நூலில் தமிழ் என்னும் சொல்லைத் 'தமிழ்' என்று சொல்வாரா? நூலின் பெயரே 'பிரயோக விவேகம்' ஆயிற்றே! அதன் 'பிரயோகம்' எப்படியிருக்கும்!

வடநூல்களில், தமிழ் 'த்ரமிள' என வழங்கப்பெற்றிருந்தது. தீட்சிதர் பார்வையில் இவ்வழக்குப் பளிச்சிட்டது! 'த்ரமிள' என்பதில் இருந்துதான் 'தமிழ்' வந்தது என 'விவேக'மாக முடிச்சுப்போட்டார். அம்முடிச்சுப்போட்டு முந்நூறு ஆண்டுகட்கு மேலாகியும் இன்னும் அவிழ்க்கமுடியாததாகவே இருக்கிறது. அறிவாளிகள்போடும் முடிச்சிற்கு அவ்வளவு வலிமை!

## தமிழ் - த்ரமிளமானவகை:

'த்ரமிள்' என்பது தமிழையும், 'த்ரமிளர்' என்பது தமிழரையும் 'த்ரமிளம்' என்பது தமிழகத்தையும் குறிக்குமானால், அக்குறிப்புகள் தமிழ்த் தொன்னூல்களில் பயில வழங்க வேண்டுமே! தமிழ்நூல்களில் எல்லாம் தமிழும், தமிழரும் தமிழகமுமே பயில வழங்க, வடமொழி நூல்களில் 'த்ரமிள்' 'த்ரமிளர்' 'த்ரமிளம்' என வழங்கினால் என்ன காரணம்? தமிழ் என்னும் சொல்லைச் செவ்விய நிலையிலே சொல்லவராதாரும், தம் மொழி இயல்புக்கு ஏற்பப் பிறமொழிச் சொற்களை அமைத்துக் கொள்ளவேண்டும் என்னும் மொழிப் புலமையாளரும் தமிழ்

என்னும் சொல்லைத் 'த்ரமிள்' என அமைத்துக்கொண்டனர் என்பதேயாம். மொழிக்கு முன்வராத தனி மெய்யெழுத்தில் சொல் தொடங்குவது ஒன்றே அது தமிழ் மரபுக்கு ஏற்காதது என்பதை வெளிப்படுத்துமே! அன்றியும், வடசொல் மரபுக்கு மெய்ம் முதலாதல் உரியது என்பதும் விளங்குமே! ஆங்குத் தானே 'ப்ரம்மரம்' 'த்யானம்' இன்னவாறாக மெய்ம்முதல் சொற்கள் உண்டு.

**கால்டுவெலர் கருத்து :**

தமிழ் 'உயர் தனிச் செம்மொழி' என உலகுக்கு முதற்கண் வெளிப்படுத்தி நிலைநாட்டிய கால்டுவெல், "தமிழ் என்னும் சொல்லின் ஒலிவடிவிற்கும், திராவிடம் என்னும் சொல்லின் ஒலிவடிவிற்கும் இடையே எத்துணையோ வேறுபாடு காணப் படினும், இரண்டும் ஒரே வேரில் இருந்தே பிறந்ததாகக் கருதுவதற்கு இடமுள்ளது. இக் கருத்து ஒப்புக்கொள்ளப்படின், தமிழ் என்னும் சொல்லே பின்னர்த் திராவிடம் எனத் திரிபுற்றது என்று கூறுவதைக்காட்டிலும், திராவிடம் என்னும் சொல்தான் தமிழ் என்று பின்னர்த் திரிபுற்றது என்று கூறுதல் எளிதும் நேரிதுமாம்" என்று தாம் வரைந்த ஒப்பிலக்கணத்தின் முன்னுரையில் எழுதினார்.

கால்டுவெலார் வரைந்த இக்கருத்தை அவர் காலத்தில் இருந்த தமிழ்ப் புலவர்கள் ஏற்கவில்லை! அவர் கருத்திலுள்ள முரணையும் சுட்டிக்காட்டினர்! அதனை உட்கொண்ட கால்டுவெலார் தம் கருத்துக்கு விளக்கமும் வரைந்தார் :

"இந்திய நாட்டின் தென்பகுதியில் வாழும் ஒரு மக்கட் பகுதியினர் தங்களையே குறிப்பதற்குக்கூடத் தமிழ்மொழியை யொழித்து வடமொழியாகிய திராவிடம் என்னும் சொல்லைக் கையாண்டிருப்பர் என்றோ, அன்றி அவர்தம் நண்பர்களான அயல்நாட்டினரும் அவர்களை அப்பெயராலேயே குறித்திருப்பர் என்றோ கொள்ளுதல் பிழைபாடுடையதாகத் தோற்றக்கூடும். தமக்கெனத் தம் மொழியிற் பெயரொன்றில்லாது பிறமொழிப் பெயரொன்றைத்தேடி அமைத்துக்கொண்டார், ஒரு மக்கட்

பகுதியினர் எனின் யார்தாம் முதலில் எளிதில்நம்ப ஒருப்படுவர்! ஆனால், இதுவே உண்மையென்று கருதவேண்டியதாக உள்ளது. திராவிடநாட்டின் தென்பகுதிக்குப் பாண்டியநாடு என்னும் பெயருள்ளது. அப்பெயர் வடமொழிப் பெயரே. இன்னும் சோழம், கேரளம், ஆந்திரம், கலிங்கம் என்னும் எல்லாம் வடமொழிச் சொற்களாகவே தோற்றுகின்றன. கருநாடகம் என்னும் ஒரு சொல்மட்டும் தனித் தமிழ்ச்சொல்லாகக் கொள்ளப் படும். மேற்குறித்த பெயர்கள் எல்லாம் வடமொழி அகராதிகளிற் காணப்படினும் அவற்றின் வேர்ப்பொருள் என்ன என்பது அவ்வகராதி களிற் குறிக்கப்படவில்லை இதனால் அப்பெயர்கள் எல்லாம் வடமொழிப் பெயர்கள்தாம் என்று துணிந்து கூறுவதற்கும் இயலாது இருக்கின்றது. எனினும், இவை வடமொழிப் பெயர்களாகவே தோன்றுகின்றன என்னும் அளவில் இவ்வாராய்ச்சி நின்றுவிடுகின்றது.''

கால்டுவெல் கொண்ட குழப்பம் எளிமையாகப் புலப்படு கின்றது. அவருக்கே ஐயம் உண்டாகின்றது; வடமொழி அகர வரிசை வேர்ப்பொருள் காட்டாமை குறுக்கீடாகித் தடை செய்கின்றது. எனினும் வடமொழியிலிருந்தே 'தமிழ்' என்னும் சொல் வந்திருக்கவேண்டும் என முடிவு செய்கின்றார்.

கால்டுவெல் ஆய்வுநடாத்திய காலத்தில் (1838-1856) தனித்தமிழ் நூல்களாகிய சங்கநூல்கள் வெளிப்பட்டில. முழு முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தை அவர் காண வில்லை. பிற்கால நன்னூலையும் பிறநூல்களையுமே தொன்னூல் களாகக்கொண்டு ஆய்வு நடாத்தினர். அம்முடிவே தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என்று வரையறுக்க உதவியது எனின், சங்கச் சான்றோர் நூல்களையும், தொல்காப்பியத்தையும் அவர் காண வாய்த்திருப்பின் அவர்தம் ஆய்வின் முடிவு இத்தகைய மயக்கத்திற்கு ஆட்படுத்தி இராது என்பது ஒருதலையாம்.

**திராவிடம் - தமிழ் - பொருள் :**

'த்ராவிடம்' 'த்ரமிளம்' என்பவற்றின் பொருள்தான் என்ன? 'துரத்தப்பட்டது' என்பதே பொருளாம். ஒருவர், தம் முந்தையர் வழிவழியாக-வளப்பெரும் பொருளாக வழங்கிவரும் தாம்

மொழியைத் 'துரத்தப்பட்டது' என்று பெயரிட்டு வழங்குவரோ? அதனைப் பெருமையாகப் பேசிப் பேறுசொல்லித் திளைப்பரோ? அயலவர், பழிக்குமுகத்தான் அமைத்துக்கொண்ட சொல்லே 'த்ராவிடம்' எனல் விளங்கத்தக்கதாம். பின்னாளில் வடுகர் தமிழரை 'அரவர்' எனப் பெயரிட்டுக்கொண்டது போலத் தமிழறியா வடவர் தமிழரைத் 'திராவிடர்' என்றனர் எனக் கொள்ளலாம்.

திராவிடம் என்பதற்கு உள்ள, 'துரத்தப்பட்டது' என்னும் பொருளை அறிந்த சிவஞான முனிவர் அவ்விழிவை விலக்கி உயர்வு சேர்ப்பார்போல, "எவ்வினையும் ஒப்புதலால் திராவிடம் என்று இயல்பாடை" எனப் பாடினர். இது செந்தில்மாநகரில் வழங்கும் 'இலைவிபூதி'க்குக் கூறப்பெறும் காரணம் போல்வதாம். இலையில் தரும் அந்நீற்றை 'இலைவிபூதி' என்றனர். 'தீவினை இலை' 'நோயிலை' 'துயரிலை' என ஆக்குதலால் 'இலைவிபூதி' எனப் பெயரிட்டனர் என்று காரணம் காட்டினர். ஆனால், இப்பொருளில் திருநீற்றுக்கும், தெய்வப்பேற்றுக்கும், அடியார் மனநிறைவுக்கும் ஏற்பப் பெருமைப்பொருள் செய்யப்பெற்றுள்ளது. முன்னதிலோ, 'துரத்தப்பட்டது' என்னும் இழிவுநிலையை மாற்றியமைக்கும் நோக்கே புலப்பட்டதாம்!

**பிறநாடுகளில் தமிழ்:**

வடமொழியாளர் தமிழைத் 'த்ரமிளம்' என வழங்கினராக மற்றைமற்றை நாட்டினர் எப்படி எப்படி வழங்கினர்? 'த்ரமிளம்' என்னும் சாயலில் வழங்கினரா? 'தமிழ்' என்னும் சாயலில் வழங்கினரா?

"கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் எழுந்த பெரிப்புளூசு (Periplus) என்னும் கிரேக்க நூல் தமிராய் (Tamirai) என்று குறித்துள்ளது. பியூத்திங்கர் அட்டவணை (Peutinger Tables) என்னும் உரோம ஞாலப்படங்களில் (Atlas) தமிழகம் 'தமிரிக்கே' (Damirice) எனக் குறிக்கப்பட்டுள்ளது. தாலமி (Ptolemy) என்னும் எகுபதியஞால நூலார் (கி.பி. 139-161) பியூத்திங்கர் அட்டவணையிடப் பெயர்களைப் பெயர்த்தெழுதும்போது, கிரேக்க

டகரத்தை லகரமாகக்கொண்டு 'திமிரிக்கே' (Dymirice) என்னும் பெயரைத் தவறுதலாக 'லுமிரிக்கீ' (Lumriki) என்று எழுதி விட்டார். ஆயினும் அவருக்குப் பின்னர் வந்த ரேவண்ணு (Revenna) ஞால நூலார் 'தமிரிக்கா' (Damirica) எனத் திருத்திக் கொண்டார்.

"தமிழ் என்னுஞ் சொல், கி. பி. 7ஆம் நூற்ருண்டில் இந்தியாவிற்கு வந்த இவென் திசாங் (Hwen Thsang) என்னும் சீன வழிப்போக்கர் குறிப்பில் 'திமொலோ' (Tehi-mo-lo) என்னும் வடிவில் உள்ளது.

"இதைத் 'திமல' (Dimala) அல்லது 'தீமர' (Dimara) என்றும் படிக்கலாம் என்பர் கால்டுவெலார். பாலிமொழியிலுள்ள மகாவமிசம் (Mahavamso) என்னும் இலங்கை வரலாற்றில் 'தமிலோ' (Damilo) என்னும் வடிவமே உள்ளது. ஐரோப்பியர் பொதுவாகத் 'தமுல்' (Tamul) என்றனர். அவருள் தேனிய விடை யூழியர் (Danish Missionaries) மட்டும் 'தமுலிக்க மொழி' (Lingua Damulica) என இலத்தீன் வடிவில் குறித்தனர். ஆங்கிலத்தில் 'தமில்' (Tamil) என்னும் வடிவம் வழங்குகின்றது. மாக்சு முல்லர் தென்மொழிக் குடும்பத்திற்குத் 'தமுலிக்கு' (Tamulic) எனப் பெயரிட்டார்" (தமிழ் வரலாறு. பக். 31-2) எனப் பாவாணர் 'தமிழ் என்னும் சொல்லையொத்த பெயர்களே வெளிநாடுகளில் வழங்கியமை' பற்றி விரித்துரைக்கும் குறிப்புகளைக் காண்பார், பிற நாடுகளில் 'தமிழ்' என்னும் சாயலிலேயே சொற்கள் வழங்கி யுள்ளன என்பதை மறார்.

திராவிடம்—தமிழ்—மறுப்பு:

"முகரம் வடமொழிக் கின்ருகவும் அதனையுடைத்தாய தமிழ் மொழியைத் திரிபென மயங்குவார் உண்மை கண்டார் அல்லர் என்க" என்றும்,

"தமிழ் என்பது திரமிளம் திமிளம் என்பவற்றின் மரூஉ வாயின் இமிழ், சிமிழ், குமிழ், அமிழ், உமிழ், கமழ், சமழ் என்னும் இவைபோன்று பயில்வுறாஉஞ் சொற்கள் எவற்றின் திரிபெனக்

கடாவுவார்க்கு வாயில்லா வடமொழியார்க்கு விடைமொழி இன்மையின் முரணென விடுக்க. திராவிடம் என்பதற்கும் தமிழ் என்பதற்தும் யானைக்கும் பானைக்கும் போன்றதோர் வேறுபாடுகள் இருப்பவும் அவையிற்றை ஓராமே திரிபெனக் கூறுவாராயின், இலக்கண வரம்பும் மரபு முறையும் சிதைந்து பெரிதும் இழுக்காவதோர் தலைதடுமாற்றமுண்டு என்பதை உணர்ந்து அன்னவர் அடங்குவாராக'' என்றும் யாழ்ப்பாணம் நா. கதிரைவேலர் செந்தமிழ் முதல் தொகுதியிலேயே வரைந்தார். (கி.பி. 1902) எனினும் மறுப்பும், மறுப்புக்கு மறுப்புமாக வளர்ந்தே வந்தது!

'த்ரமிளம்' என்னும் சொல்லில் இருந்தே 'தமிழ்' என்னும் சொல்வந்தது என்பவரை நோக்கி "இது பாழை ஆராய்ச்சி இல்லாதவருடைய கூற்றாய் முடியும்'' எனத் துடிசைகிழார் அ. சிதம்பரனுர் விளக்கினுர்.

இனிச் சிலர், 'திரு இடம்' என்ற தொடரே திரமிளமாகித் தமிழாயது என்று புதிய உத்தி ஒன்றனைக் கைக்கொண்டு வட சொல் அன்று என்று நிலைநாட்ட முயன்றனர், அம் முயற்சியும் துடிசைகிழாரால் மறுக்கப்பெற்றது.

''தமிழ் வழங்கும் தென்திசை வளப்பத்தைச் சிறப்பித்து எடுத்து ஓதுவான்போலும் எழுந்த திரு + இடம் என்ற தொடரே திரவிடம், திராவிடம் எனவாயிற்று. திராவிடம் என்ற சொல் டவுக்கு ள வரலாம் என்ற முறைப்படி திராமிளம் என்று வந்ததாகவும், திராமிளம் என்ற சொல் இரண்டாம் எழுத்துக் குறுகித் திரமிளம் என்று வந்ததாகவும் அதன்பின் இரண்டாம் எழுத்துக் கெட்டுத் தமிளம் என்று ஆனதாகவும் தமிளம்தானே அம் கெட்டுத் தமிழ் என்று வந்ததாகவும் சிலர் கூறுவர்.

''இக்கூற்றுச் சிறிதும் கொள்ளற்பாலதன்று. திராவிடம் தமிழ் ஆயிற்று என்பது வடமொழி இலக்கணம். வடமொழி தமிழ்நாட்டில் வருவதற்குப் பன்னூருயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் என்னும் மொழி வழக்குண்மையின் அது சிறிதும் பொருந்தாது.

"மேலும், திரு இடம் என்ற இரண்டு வார்த்தைகளும் தமிழ்ச் சொற்களே. இரண்டு தமிழ்ச் சொற்களின் சேர்க்கையால் உண்டாவது தமிழ்மொழியாக இருக்க வேண்டுமேயொழிய வடமொழிச் சொல்லாக இருக்க முறையில்லை. பறவையும் பறவையும் சேர்ந்தால் மிருகம் பிறக்குமா? அல்லது விலங்கும் விலங்கும் சேர்ந்தால் மனிதக் குழவி உண்டாகுமா? ஒருகாலும் உண்டாகவே உண்டாகாது. அப்படி உண்டானதாகக் கூறுவதும் பொருந்தாது.

"திரு + இடம் = திருவிடம் ஆகும். இது தமிழ்ச்சொல். திராவிடம் என்று ஒருகாலும் ஆகாது. மேலும் தமிழ்ச் சொற்களின் புணர்ச்சிக்கு ஆரிய இலக்கணமுறை கூறுவது தமிழ் மக்களின் மணத்துக்குத் துலுக்கர் வதுவை முறையைக் கையாடுவதுபோலும். இது உலகத்தில் எக்காலத்திலும் இன்று.

"ஆனால் திராவிடம் என்ற வடமொழிச்சொல் எப்படி வந்தது வழக்குக்கு என்றால் கூறுதும் :

"தமிழ் என்ற சொல் ஆரியரால் உச்சரிப்பு முறையில் திராவிடம் என்று உச்சரிக்கப்பட்டு வழக்கத்தில் வந்ததேயொழிய வேறன்று. அது எதுபோல என்றால் தற்காலத்தில் ஆங்கிலேயர், எழும்பூரை - எக்மோர் (Egmore) என்றும், தஞ்சாவூரை - டாஞ்சூர் (Tanjore) என்றும், நாகபட்டினத்தை - நெகபட்டாம் (Negapattam) என்றும், மிளகுதண்ணியை - மிளகுடானி (Milagutanni) என்றும், கோயம்புத்தூரை - கோயம்பட்டுர் (Coimbatore) என்றும் வழங்குவதுபோல.

"ஒரு பாஷையின் சொல் இன்னொரு பாஷையில் வழங்கப் படும்போது அப் பாஷையின் போக்குக்குத் தகுந்தபடி திரிபுபடுத்தப் பட்டுத்தான் வழங்கப்படும். அதனை அறியாது திரிபுச் சொல்லினின்றும் மூலச்சொல் வந்ததென்று கூறுவது பாஷையின் சரித்திரம் தெரியாதார் கூற்றேயாகும்."

'திரு இடம்' என்பது திராவிடம் என்று கூறியவர்களைப் போல வேறுவகையிலும் காரணம் கூறுவாரும் இருந்தனர். அவர், "திரௌ என்னும் வேந்தன் தென்னாட்டை ஆண்டான்

அதனால் திரௌ என்பவன் இடமானதால் திரௌவிடம், திராவிடம் ஆயிற்று என்றனர். இன்னும் "திராமலி" என்ற பெயர்பூண்ட மக்கள் தென்னாடுபுக்க காரணத்தால் திராவிடம் ஆயிற்று என்றனர். மற்றும் மிகுபழங்காலத்தில் மள்ளர் என்பார் பேசியமொழி 'தமிழ் மள்ளம்.' அது திருத்தமிழ் மள்ளமாய்த் திராவிடமாய்ப் பின்னர் தமிழாய்த் திரிந்தது என்றும் சிலர் கூறினர்.

'இவையெல்லாம் சொல்லைக்கொண்டு கதை கட்டுகிறதே ஒழிய வேறு அன்று' என்று துடிசைகிழாரால் மறுக்கப்பெற்றது. (செந்தமிழ்ச் செல்வி (1 : 117-9) 'கம்பர்' என்னும் பெயர் கொண்டு அவர்மேல் எத்தனை எத்தனை கதைகளைக் கட்டியுள்ள நாடு இது! மூலமான இடத்தை விட்டுவைக்குமா?

"பொய்யுடை ஒருவன் சொலல்வன் மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே"

என்பதற்கு ஏற்பவும்,

"மெய்யுடை ஒருவன் சொலமாட்டா மையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே"

என்பதற்கு ஏற்பவும் 'தமிழ்' என்பது 'திராவிடம்' என்பதன் வழிவந்த சொல்லே என மேலும் மேலும் அலைத்து ஆர்த்துக் கொண்டே இருந்தது.

"திராவிடம் என்னும் சொல்லினைத் தமிழோடு சம்பந்த முடையதாய் மொழிவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதேயாம்" என்றும்,

"வடமொழி வாடை வீசுமுன்னரே பன்னெடுங்காலமாய் இங்கு நிலைபெற்றிருந்த தமிழைத் திராவிடம் என்பதன் திரிபென்பது மலடிபெற்ற மகவினை ஒக்கும்" என்றும் திருமணம் செல்வக் கேசவராயர் 1931-ஆம் ஆண்டிலே மறுத்தார். (தமிழ் பக். 9) அவரே பின்னும் 1934 இல்,

"உலகின்கண் தாய்தந்தையர் தாம்பெற்ற பிள்ளைகளுக்குத் தாமே பெயரிட்டழைக்கக் கண்டாமன்றிப் பிறநாட்டுள்ள ஒருவர்

அப்பிள்ளைக்குப் பெயரிட்டழைக்கக் கண்டிலமாகலானும், தமிழர் தம் பாஷையைத் தமிழெனவழங்கியபின்பே ஆரியர் அப் பாடையைக் குறித்தற்குத் திராவிடம் எனப் பெயரிட்டு வழங்கினரே யன்றித் தமிழர் தம் பாடைக்குப் பெயரிட்டு வழங்குமுன்னர் ஆரியர் அப் பாடைக்குத் தம் பாஷை மொழியில் பெயரிட்டு வழங்கினரென்றல் சிறிதேனும் பொருந்தாது'' என மறுத்தார். (தமிழ்மொழியாராய்ச்சி)

மறுப்புக்கு மறுப்பு :

செல்வக் கேசவரும் பிறரும் ,திரமிளத்தில் இருந்து தமிழ் வந்ததன்று; தமிழ் என்பதே வடமொழியாளரால் திரமிளம் என வழங்கப்பெற்றது' என்று மறுத்த மறுப்புரையை 1936 இல் பின்னங்குடி சா. சுப்பிரமணிய சாத்திரியார், தாம் இயற்றிய தமிழ் மொழி நூலில் மறுத்து எழுதினர்! நல்லவேளையாகத், 'திரமிள மொழிநூல்' என்னமல் 'தமிழ்மொழி நூல்' என்று பெயரிட்டு விட்டார்!

''ஒருமொழிக்குப் பெயர் அயலார் வைத்தல் இயலாது; ஆகலின், தமிழ் என்ற பெயர் தமிழ்நாட்டாரே வைத்தனர் எனக் கூறுவர்.

"தனக்குத்தானே ஒருவனும் பெயரிட்டுக்கொள்ளாமையானும் அவ்வாறு இட்டுக்கொள்ளாதது இகழ்ச்சிக்கு இடனாகக் கருதப்படாமையானும், தான் வழங்கும் மொழிக்குத் தானே பெயரிட்டுக்கொள்ளுதல் இன்றியமையாதது எனக் கூறுதல் இயலாமையானும் தமிழ்நாட்டில் தமிழ் மக்கள் வழங்கும் மொழியைப் பிறர் தமிழ் என வழங்கினர் எனக் கொள்ளினும் குற்றமாகாது'' என்றார்.

மறுப்பின் மறுப்புக்கு மேல்மறுப்பு :

தனக்குத்தானே ஒருவனும் பெயரிட்டுக்கொள்ளாமை ஒரு பெரிய கண்டுபிடிப்பாகும்! பிறந்த குழந்தை பேசத் தொடங்கவே ஓராண்டுக்குமேற்படும். அதுவும் சிலச்சில

ஒலிகள்; சொற்கள் அளவிலே தொடங்கி வளர்கின்றன. அக் குழந்தையே அதற்குப் பெயர்சூட்டிப் பெருமை கொள்ளட்டும் என எவரும் காத்திருப்பது இல்லை. அதன் பெற்றோர்கள் அதற்கொரு பெயர் சூட்டி—தாம் விரும்பும் தகவமைந்த இனிய நல்ல பெயரைச் சூட்டி—பல்காலும் சொல்லிச் சொல்லி மகிழ்வர். அதனை, அடுத்தவர் சூட்டி அழைக்கும் அளவுக்குப் பெற்றோர்கள் மூங்கையாக—மூடமாக—இருப்பார்கள் என்று கூறினால் எவர் தாம் நகைக்கமாட்டார். ஒருவேளை பெற்றோர் எவருமே இல்லாத—தாயிலி தந்தையிலியாம் குழந்தை எனின் உரிமை பாராட்டி ஒருவர் பெயர்வைக்க இல்லாமல் அயலார் பெயர் சூட்டி அழைக்கத்தக்க பரிவுமிக்க நிலை ஏற்படலாம்.

ஒருவர்க்குப் பெயர் அவரவர் உறவினரே சூட்டுதல் என்பது பழியொடு பாவம் படர்ந்தது போலல்லவோ பேராசிரியர் கருது கின்றார்! அவர் பார்வைப்படி எவருக்கும், எம்மொழிக்கும், எந்நாட்டுக்கும் அவரவரே—அவரவர்க்கு அல்லது அதனதற்கு—உரிமைப்பட்டவர் பெயர்சூட்டிய வழக்கே இல்லை என்றல்லவோ உறுதியாகின்றது! முழுமையாக மொழிகளையெல்லாம் இப்படிப் படுகுழியில் தள்ளும்வழி அவர்க்கு எப்படித்தான் தோற்ற மாயிற்றோ அறியோம்.

இனிச் சாத்திரியார் தம் கொள்கையை நிறுவுதற்கு ஒரு காரணம் கூறுகிறார். கருநாடகரும் தெலுங்கரும் மூகமதியரும் தமிழை 'அரவம்' என்றும், தமிழரை 'அரவர்' என்றும் வழங்கினர். அப்படி அயலார் அழைத்ததுபோலத் 'திரமிளம்' என்று அயலார் வழங்கியதே தமிழ் ஆயிற்று என்கிறார். 'அரவம்' என்பதற்கும் பொருள் விளக்கப் புகுந்தார்.

'ரவம்' என்ற சொற்குச் சத்தம் என்பது பொருள். அரவம் என்ற சொற்குச் சத்தமில்லாத எழுத்துடையது எனப் பொருள் கொளல்தகும். சத்தமுள்ளவை ஐவர்க்கத்தினும் இரண்டு நான்கு ஆகிய எழுத்துகளே, இவை தமிழில் இல்லாமையால் அரவம் என்கிறார் என்பது அவர் கூறும் விளக்கம்.

அயன் மொழியாளர்கள் கூடி அறிஞர் கால்டுவெலார் போல ஓர் ஒப்பிலக்கண நூல் வரைதற்கு ஆய்ந்து தமிழ்மொழி ஒலிக்கும்

பிறமொழிகளின் ஒலிக்கும் உள்ள வேற்றுமையை நுணுகிப் பார்த்து ஒருமுகமாக 'அரவம்' என முடிவு செய்தனரா? அந்நாளில் போலப் பாங்கறிந்தேறித் தருக்கமிட்ட பட்டிமண்டபத்தில் காய்தல் உவத்தல் அகற்றிய முனைவரொருவர், சமன்கோல் போல் அமைந்து அறுதியிட்டுக் கூறினரா? போர்க்களத்தில் தமிழ வீரர்க்கு அஞ்சி ஓடும் அயன்மொழிப் படைவீரர் அவ்வஞ்சிய அஞ்சுதலால், அச்சுறுத்தியவர்களை 'அரவர் அரவர்' என்றனர் என்றால், மொழியாய்வில் தலைநின்று சொல்லும் சொல்லாக இருக்குமா? நிலையழிந்து குலைபதறித் தலைதெறிக்க ஓடுவோர் சொல்லும் சொல், ஆய்வின்பாற் பட்டதாக இருக்குமா? 'அரவர்' என்பதில் அச்சப் பொருள் அன்றோ அமைந்து கிடத்தல் வேண்டும்?

'அரவம்' என்பது ஒலி. 'அரவமில்லாமல் இரு' என்று கூறுவதை அறியார் யார்? பாம்பு செல்லுங்கால் ஒலி செய்தலை - ஒலி எழுப்புதலைக் - கொண்டு தானே 'அரவம்' எனப் பெயர் சூட்டினர்! 'ஆடும்போதே இரையும்' என்றாரே காளமேகப் புலவர். இரைச்சல் அரவம் தானே.

'பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும்' என்னும் பழமொழி புதுவது அன்றே. 'அரவம் ஆட்டேல்' என்றாரே ஔவையார். அதியமான் படைவீரர் ஆண்மையை, அடிக்கும் கோலுக்கும் அஞ்சாமல் எதிர்த்து மண்டும் ஆடரவத்திற்கு ஒப்பாக்கிக் கூறினாரே சங்கச் சான்றோருள் ஒருவராகிய ஔவையார். இவற்றையெல்லாம் நோக்கப் புலப்படுவது என்ன?

தமிழ வீரர் பாம்பென வருத்துவதாக அயன்மொழிப் படைவீரர் கருதினர். அதனால் அவர்கள் தமிழ் வீரர்தம் போர்க்கு ஆற்றாமல் அஞ்சி ஓடுங்கால் 'அருவர்' 'அருவர்' என்றனர் என்க. "ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்; உடலின் நிழலினை ஓட அஞ்சினர்; அருவர் வருவரென இறைஞ்சினர்; அபயம் அபயம் என நடுங்கியே" என்பது கலிங்கத்துப் பரணி (போர் 49.)

அரவர் என்பது தமிழ்ச் சொல்லே யன்றோ; அயன்மொழியாளர் கூறியதென்ன எனின், அவர் மொழி, தமிழ் மொழி வழிப்

பட்டதேயன்றே! "கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாள மும் துளுவும் உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்" என்பது பேராசிரியர் சுந்தரனர் பாட்டேயன்றே!

படை வீரரையே 'அரவர்' என்றதும் 'அரவாளு' என்றதும், பின்னேதான் அவர் பேசிய மொழிககு [1]'அரவம்' எனப் பெய ராயதும் இவண் நோக்கத் தக்கனவாம். 'அரவம்' என்ற ஒப் பீட்டுக் குழறுபடையே இவ்வாருயின், 'திரமிள' ஆய்வைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லையாம்!

இத் 'திரமிள' 'தமிழ்' ஆய்வுபற்றித், தமிழ் வரலாற்றில் இரா. இராகவ ஐயங்கார் குறிப்பிடுகிருர்: "வடநூலார் பெயரிடு வதற்கு முன் தமிழர்க்கும் தமிழுக்கும் பெயரே இல்லை எனல் சிறிதும் பொருந்தாது. வடமொழியாளர் தமிழரையும் தமிழையும் கண்டு அவருடன் பயின்று அவர் மொழிப் பெயரை அவர் வாயாற் கேட்டு அவர் சொற்ற தொன்றைத் தம் மொழி வழக்கிற்குரிய ஓசையில் வைத்து 'த்ரமிளர்' என வழங்கினர் எனத் துணியலாம். தாம் வழங்கிய மொழிக்குப் பெயரே இடாமல் பலகலைத் துறை களிலும் சிறந்து விளங்கிய நாட்டினர் ஒருவர் இவ்வுலகில் இருந் தனர் என்பது ஆராய்ச்சிக்கு இயைவதன்று. அன்றியும், தமிழ் என்னுஞ்சொல் இயற்றமிழ்ச்சொல் என்பதே பண்டைத் தமிழா சிரியர் துணிபு ஆகும். இதனைத் 'தமிழென் கிளவியும் அதனோ ரற்றே' (தொல். 685) என்னுந் தொல்காப்பியச் சூத்திரத் தான் அறியலாகும். தொல்காப்பியனர் தமிழியற் சொற்களுக்கே புணர்ச்சி விதி கூறுகின்ருரல்லது பிறநாட்டுச் சொற்களுக்கில்லை என்பதை இவ் விலக்கணங்கற்ருர் நன்கறிவர். இதனல் இது தமிழியற் சொல்லே யாதல் ஒருதலை" என்ருர் (தமிழ் வரலாறு முதற்பாகம் 45.)

வடமொழித் 'திரமிளம்' 'வெருட்டப்பட்டது' என்னும் பொருளது. தமிழோ இனிமையும் நீர்மையும் எனப் பொருளமைதி

---

1. வடுகரின் நாட்டைஅடுத்திருந்த தமிழ்ப்பகுதி அருவா வடதலை, அருவா நாடு என்பன ஆகலின் அருவா நாட்டினரை அரவர் என்றனர் என்பார் பாவாணர் தமிழ் வரலாறு. 'இயங்குபடை யரவம்' என்னும் புறத்துறையையும் கருதுக.

யுற்றது. இத்தகைய எதிர்நடைச் சொற்கள் ஒருவழிப்பட்டதா தல் மொழியிலக்கணத்தொடு முரண்பட்டது என்பதைப் பெரும் புலவர் இரா. இராகவர் குறிப்பிட்டார்.

“பொருளொற்றுமையுடைய இருவேறு மொழிகளுள் சிற்சில ஒலியொற்றுமையைக் கண்டு அவற்றுள் ஒன்றை மற்றதன் சிதைவென்றும் திரிபென்றும் மொழிவல்லார் கொள்வர். வெவ்வேறு பொருள்படும் இருவேறு சொற்களுட் சில ஒலியொற்றுமை கண்டு ஒன்று மற்றதன் சிதைவெனக் கொள்ளத் துணியும் மொழியாராய்ச்சியாளர் எங்குமில்லை என்பது தெளிந்ததொன்று” (தமிழ் வரலாறு. 5)

தமிழ் என்னும் சொல்லே வடவரால் ‘த்ரமிளம்’ என வழங்கப்பெற்றது என்பதை அத் தமிழ் வரலாற்றில் சான்று காட்டி விளக்கியுள்ளார் அவர். அவ் விளக்கம் அறியத் தக்க தொன்றும்:

‘கமுகு’ என்பதை வடமொழியாளர் ‘க்ரமுகம்’ என வழங்குவர். இவ்வாறே ‘தமிழ்’ என்பதைத் ‘த்ரமிள’ என வழங்கினர். இவ் வாறு ரேபங் (ரகரங்) கொடுத்துத் தமிழ்ச்சொல்லை வடசொல் லாக்குதல் வடமொழியாளர் வழக்கமாகும் என்பதே அது. (தமிழ வரலாறு 11-12)

இனித் தமிழ் என்னும் சொல்லமைதி பொருளமைதிகள் பலப்பல வகையாகக் கூறப்பெற்றுள்ளன. தமிழ் என்பது தமிழ்ச் சொல்லே எனக் கொண்டாரும் அதன் சொல்லமைதி பொருளமைதிகளில் ஒரு முடிவுக்கு வந்தாரல்லர் என்பது விளக்க மாகின்றது.

**தமிழின் நயம்:**

“தமி என்பது தனிமை; ழகாரம் தமிழ் ஒன்றுக்குமே யுரிய சிறப்பெழுத்து. ழகரத்தாற் றனிச்சிறப்புற்றுத் தனித்து விளங்கு மொழி என்பது தமிழ் என்னுஞ் சொற்குப் பொருளாம். தான் பிறிதொரு மொழிக்கட் பிறவாத தனிமொழியென்பது அதன்

முடித்தபொருளாம்'' என்று ஆ. முத்துத் தம்பிப்பிள்ளை எழுதினர். (செந்தமிழ் 5 : 514).

மாகறல் கார்த்திகேய முதலியார் இன்னும் பல வகையில் 'தமிழ்' என்னும் சொல்லின் நயப் பொருள்களைத் தாம் இயற்றிய மொழி நூலில் விரித் தெழுதினர் :

"தமிழ் என்பது இனிமை; அது இனிமைமிக்க பாழைக்கு ஆயிற்று. பண்பாகு பெயர்."

"தமில் தமிள் தமிழாயிற்று."

"தமிழில் வல்லோசையும் மெல்லோசையும் இடைப்பட்ட வோசையும் சிறந்திருத்தலின் அம்மூவினத்தால் தமிழாயிற் றென்க."

த—வல்லினம்

மி—மெல்லினம்

ழ்—இடையினம்

"முதல் வல்லினமும் பின் மெல்லினமும் அதன்பின் இடையினமும் உண்டானமையின் அம் முறைமையும் அமையத் தமிழாயிற் றென்க.

"தமிழில் பெரும்பான்மை இயற்கைச் சொற்களும் சிறுபான்மை செயற்கைச் சொற்களும் உண்மையின் அவ்விலக்கணமும் அமையத் தமிழாயிற் றென்க.

த, மி இயற்கை எழுத்து உ.

ழ் செயற்கை எழுத்து க.

"தமிழில் ஓரசைச் சொற்கள் மிகுதிப்பட்டிருத்தலின் ஓரசையால் தமிழாயிற் றென்க.

"இயற்கையோசை, செயற்கையோசை, செயற்கையிற் செயற்கையோசை யென்பவற்றுள் தமிழ்ச் சொற்கள் இயற்கையோசை யுடைமையின் இயற்கையோசையால் தமிழாயிற் றென்க.

"பாகதர் செயற்கையோசையால் தமிளே" என்பர்.

"வல்லினமும் மெல்லினமும் சேர்தலாலாய செயற்கை யோசையும் தமிழின்கண் உண்மையின் வன்மைமென்மையால் தமிழாயிற் றென்க.

பக்கம்—ஈண்டுக் ககரம் இயற்கையோசை.

பங்கம்—ஈண்டுக் ககரம் செயற்கையோசை.

"ஆண்பால் பெண்பால் என்னும் இரண்டனுள் தமிழ் ஆண் பால் மொழியாக நிற்றலின் ஆண்பால் எழுத்தாகிய குற்றெழுத் தால் தமிழாயிற் றென்க.

"தமிழ் அமிழ்தம்போல மொழிக்கு மொழி தித்திப்பாக அமைந்திருத்தலின் அமுத எழுத்துகளால் தமிழாயிற் றென்க.

"தமிழ் தெய்வமொழியாக விளங்கி நிற்றலின் தெய்வகதிக் குரிய எழுத்து முதலில் வரத் தமிழாயிற் றென்க.

"தமிழ் கற்கும் மக்கள் தெய்வத் தன்மை அடைதலின் தெய்வகதிக்குரிய தகரத்தோடு மக்கட்கதிக்குரிய மகரமும் பொருந்தத் தமிழாயிற் றென்க.

"தமிழில் தகரவித்தை சிறந்திருத்தலின் தகரவித்தை என்பதன் முதலெழுத் தமையத் தமிழாயிற் றென்க.

"தமிழ் சூரியனால் உண்டானமையானும் தமிழெழுத்து வட்டவடிவாக இருந்தமையானும் தமிழ் மற்றைய பாஷைகளுக் கெல்லாம் நடுவில் நின்று இயற்கைத் தலைமை பெற்றமையானும் வட்ட வடிவாய சூரியனாற் படைக்கப்பட்ட மகரம் நடுவில் நிற்பத் தமிழாயிற் றென்க.

"அங்காத்தல் எளிதாகலின் அங்காத்தலால் ஆய அகரம் முதலில் வரத் தமிழாயிற் றென்க.

"தமிழ், சோதி போலவும், சோதி மின்னல் போலவும், சோதி முத்துப்போலவும் விளங்கலின் சோதி நாளுக்குரிய தகரம் முதலில் வரத் தமிழாயிற் றென்க......... .....

பிறவும் தமிழ்ச் சொல் விளக்கத்துட் காண்க.''

இவையெல்லாம் தமிழ் என்னும் சொல்லைத் தோய்ந்து தோய்ந்து ஆய்ந்துகொண்ட குறிப்புகளேயாம். தமிழ் என்னும் சொல் அமைந்த முறையையும் மொழிநூலில் அவர் விளக்கி யுள்ளார்.

தாமம் என்னும் சொல்லுக்குச் சூரியன் (ஒளி) என்பது பொருள். தாமம் என்பது 'தமம்', 'தமில்', 'தமிள்', 'தமிழ்' ஆயிற்று என்பர். இம் முடிவுக்கு ஏற்பச் 'சுல்' என்னும் சொல்லில் இருந்தே தமிழ்ச் சொற்களெல்லாம் தோன்றின என்பதை மொழி நூலில் அவர் விரிவாக எடுத்துக் காட்டியுள்ளார்.

## தமிழ்ச் சொல்லமைதி :

''தமிழ் என்பது தமி என்னும் பகுதியடியாகப் பிறந்த சொல் என்றும், தமி என்றால் தனிமை, ஒப்பின்மை என்று பொருள் படும். ஆகையால், தமிழ் என்பது தனித்த ஒப்பில்லாத பாஷை எனப் பொருள்படும்'' என்றும் கருணாமிர்த சாகரம் கூறும்.

'தகு' என்னும் முதனிலை இறுதிகெட்டு 'மிழ்' என்னும் ஈறு சேர்ந்து 'தமிழ்' என்று ஆகித் 'தகவுடையது' 'தகுதியுடையது' எனப் பொருள்படும் என்றனர் சிலர்.

தமிழந்தி என்பது ஓரிடப் பெயர்; அவ்விடப் பெயர் வழியாக வந்ததே தமிழ் என்றாரும் இருந்தனர்.

ஆங்கிலேயர் தமிழகத்தில் முதற்கண் வந்தபோழ்தில் தமிழ் என்பதனைத் 'தமுள்' எனக் கூறினராம். அதனைக் குறிப்பிடும் கால்டுவெல் ஐயர், 'தமுள்' என்றது தவறு எனச் சுட்டிக் காட்டினார். ஆனால் அவர் தவறு என்று சுட்டிக் காட்டிய சொல்லே சரியெனச் சிலர்க்குத் தோன்றியது.

''தமுள்மொழி என்னும் சொற்றொடரைப் பிரித்துப்பார்க்கின் அது தப் + உள் + மொழி என்றாய் மக்கள் தப்முள்ளக் கருத்தினைப் பிறருணருமாறு மொழிதல் என்னும் விழுமிய பொருள் கொண் டிருப்பது காணப்படும்'' எனவும்,

"ஆங்கிலமொழியிலும் "Language is the Expression of one's thoughts to others" என்னுமோர் கூற்று வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தமுள் எனும் பெயர் 'மொழி என்பது யாது? (What is a language?) எனும் கேள்விக்குச் சிறந்த விடையிறுக்கு மாற்றல் வாய்ந்த தொன்றென்பதைக் கண்டு கொள்க எனவும் அவர்கள் கூறினர். (தமுள் மொழியின் கடவுட்டன்மை செந்தமிழ்ச் செல்வி 6 ; 209)

'தென்மொழி' என்பது 'தெம்மொழி' என்றாகிப் பிறகு 'தம்மொழி', 'தமிழ்' என்றாயிற்று என்றனர் சிலர்.

அமிழ்தின் இனிய தமிழ்மொழியைத் தமிழர் 'அமிழ்து' எனப் பெயரிட்டார் என்றும் அமிழ்து காலச்செலவில் தமிழ் ஆயிற்றென்றும், அமிழ்து அமிழ்து எனப் பன்முறை யடுக்கிக் கூறின் இயல்பாகவே அமிழ்து தமிழ் ஆகின்றது என்றும் கூறினர் சிலர்.

கிரேக்க நாட்டில் வழங்கிய 'தெர்மிலே' அல்லது 'தெர்மிலர்' அல்லது 'திரமிலர்' என்னும் இனப்பெயரினின்று வந்தது தமிழ் என்று ஞானப்பிரகாசரும், வங்கநாட்டுத் 'தாம்ரலித்தி' என்னும் பெயரினின்று வந்தது என்று கனகசபையாரும், தாமம் (ஞாயிறு) எல்லாம் (ஈழம்) என்னும் சொற்கள் 'தாமீழம்' என்றாகித் தமிழாகியது எனக் கந்தையா பிள்ளையும், 'தமி' என்னும் முதனிலையடியாகப் பிறந்து ஒப்பற்றதெனத் தாமோதரம் பிள்ளையும், 'தம் + இழ்' என்று பகுத்து இழ் என்னும் ஈறு இனிமைப் பொருள்படும் இழும் என்னும் சொல்லின் சிதைவெனச் சீனிவாசையங்காரும் கூறுவர்.

இன்னும், 'த + மிழ்' என்று பிரித்துத் 'தம் மிழற்று' என்று விரித்து தமது இனியமொழி எனப் பொருள் குறித்தாரும் உளர்.

இவற்றுள் பலவும் முழுமையாகவும், சில ஒரு சாராகவும் அவ்வப்போது அறிஞர் பெருமக்களால் மறுக்கப்பெற்றும், ஒரு சில ஏற்கப்பெற்றும் தழுவப்பெற்றும் வந்துள. மறுத்துரைத் தாரும் தம் ஆய்வுத் திறத்தால் தமிழ்ச் சொற்பொருளை நிலை நாட்டவும் முயன்றுள்ளனர். இவற்றை யெல்லாம் முறையே கண்டு தெளிதல் ஒரு முடிவு செய்தற்கு வாய்ப்பாகும்.

**ஏற்புரையும் மறுப்புரையும் :**

தமிழ் என்பது வேறு மொழிகளுக்கு இல்லாத ழகரத்தைத் தன்னுட் கொண்டது என்பது பொருந்துவதில்லை. ழகரம் தமிழ் ஒன்றற்கே சிறப்புரிமை யுடையதென்பது ஏற்கத்தக்கதன்றாம். 'பிரென்சு மொழியில் ழகரம் உண்டு' என்றும், ஆங்கிலத்தில் ழகரம் தனி எழுத்தாயில்லா தொழியினும் 'zh' என்னும் இரண்டு எழுத்துகளால் ழகரம் குறிக்கப்படுகின்றது என்றும், மலையாளத்தில் ழகரம் உண்டு என்றும் துடிசை கிழார் இக்கொள்கையை மறுத்து எழுதினர். (செந்தமிழ்ச் செல்வி. சிலம்பு 1.)

தகு+மிழ்—தமிழ் என்பது "பொருள் கொள்வார் ஏதோ ஒரு பொருளை உளத்தில் வைத்துக்கொண்டு அப் பொருளுக்குத் தக மொழியைச் சிதைத்துப் பொருள் கொள்வதுபோல் தோன்றுகிறது. ஆகையால் இப் பொருள் அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை" என்று இக்கொள்கையையும் துடிசை கிழார் மறுத்தார்

தமிழந்தி என்பது ஓர் இடப் பெயராயின், அப் பெயர் எம் மொழியைச் சார்ந்தது என வினா எழும். அவ் வினாவுக்கு ஏற்ற விடையிறுத்தல் இயலாமையால் இம் முடிவு பொருந்துவதன்று என்றும், தமிழ் மள்ளம், திருத் தமிழ் மள்ளம், திராவிடம், தமிழ் என்பன—'கொக்கின் தலையில் வெண்ணெயை வைத்துக் கொக்கைப் பிடிக்கும் சூழ்ச்சியைப் போல் இருக்கிறது' என்றும் மறுத்தார்.

தென்மொழி என்னும் பெயரே தெம்மொழி, தம்மொழி தமிழ் என ஆயிற்று என்பாரை, "வடமொழி இந் நாட்டிற்கு வந்த பின்தான் தமிழைத் தென்மொழி என்றும் ஆரியத்தை வடமொழி என்றும் வழங்கி வந்தார்கள் என்று கொள்ள இடந் தருகின்றது. வடமொழி வருவதற்கு முன்பு தமிழே இந்தியா முழுவதும் வழங்கப்பட்டு வந்ததால் தென்மொழி என்று வழங்கப் பட வேண்டிய அவசிய மின்று" என்று மறுத்துரைத்தார்.

'தேன்மொழி', 'தென்மொழி' 'தம்மொழி' தமிழ் என ஆயிற்று என்பாரைத் தமிழ் என்னும் சொல்லே இனிமைப்

பொருள் தருதலின் அதனைத் 'தேன்மொழி' என்பது பொருந் தாது என்றார்.

தமிழுக்கு இனிமைப் பொருளுண்டாதலை ஒரு வகையால் திருத்தி எழுதினார் தூ. சு. கந்தசாமி முதலியார். அவர் கருத்து: 'தம் மொழியாம் தமிழ்மொழியின் இனிமை கண்டுவந்து, இனிமைக்கே தமிழ் எனப் பெயரிட்டனர்' என்பது. (செந்தமிழ்ச் செல்வி 2 : 9)

அமிழ்து என்னும் பெயரே காலச் செலவில் தமிழாயிற்று என்பவர் கருத்தை, அமிழ்து 'அமிர்தம்' என்னும் வடசொல்லின் திரிபு ஆதலால் தமிழ் என்பது வடசொல்லின் திரிபு எனக் கோடல் பொருந்துமாதலானும், வடமொழியாளர் கலப்பின் பின்னே தம் மொழிக்குப் பேரிட்டாரென்று கொள்ள வேண்டுமாதலானும் அப் பொருள் பொருந்தாது என அவர் மறுத்தார்.

கிரேக்க நாட்டில் வழங்கிய இனப்பெயரினின்று வந்தது என்பதையும், வங்கநாட்டு நகர்ப் பெயரினின்று வந்தது என்பதையும் தாமீழம் என்னும் சொல்லினின்று வந்தது என்பதையும் பிறவற்றையும் மொழிஞாயிறு பாவாணர் தாம் இயற்றிய தமிழ் வரலாற்றில் ஆய்ந்து மறுத்துரைத்தார் :

"கிரேக்க நாட்டில் என்றேனும் தமிழ் வழங்கியது என்பதற்கோ தமிழர் வாழ்ந்திருந்தார் என்பதற்கோ ஒரு சான்றும் இன்மையானும்; தமிழ்ச் சொற்களும் தமிழர் பழக்க வழக்கங்களும் கிரேக்க நாட்டில் மட்டுமன்றி உலகத்தில் பல இனத்தாரிடையும் காணப்படுவதாலும்; கிரேக்க நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையில் ஒரு திரவிட மொழியும் வழங்காமையானும்; தெர்மில என்னுஞ் சொல்லைத் திர—இல்—அர் என்று பிரித்து, 'கடற்கரையில் குடிகொண்டவர்' என்று பொருள் கூறுவது கேசவக் கிருட்டிணனை ஏசுக்கிறித்து என்று சொல்வதொக்கு மாதலானும்; ஒரே சொல்லின் ஒருபுடையொப்புமை பற்றி ஒரு நாட்டாரை ஐயாயிரம் கல் தொலைவிற் கப்பாற்பட்ட வேறொரு நாட்டினின்று வந்தவராகக் கொள்வது மொழிநூன் முறைக்கு

முற்றும் முரணுவதாகலானும்; தோற்றம் முதல் இதுவரைப்பட்ட வளர்ச்சிநிலையெல்லாம் தொடர்பாகக் காட்டிக்கொண்டு தொன்று தொட்டுத் தென்னாட்டிலேயே தமிழ் வழங்கி வந்திருத்தலானும்; கிரேக்க நாட்டு மூலக் கொள்கை மிகத்தவறான தென்று கூறி விடுக்க.

"வங்க நாட்டில் திராவிடரேயன்றித் தமிழர் ஒருகாலும் வாழ்ந்திராமையானும் இற்றை வங்கமொழி ஆரியவண்ணமாய் மாறியிருத்தலானும் தமிழ் என்னுஞ் சொற்குத் 'தம்ரலித்தி' என்னுஞ் சொல்லோடுள்ள தொடர்பு காசி என்னும் பெயர்க்குக் காஞ்சி என்னும் பெயரோடுள்ள தொடர்பேயாதலானும் தம்ர லித்தி (அல்லது தமிலப்தி அல்லது தமிலூக்) என்னுஞ் சொல் லினின்று தமிழ் என்னும் பெயர் வந்த தென்பது சிறிதும் பொருந்தாது.

"தமிழர் நாகரிகமடைந்த காலந்தொட்டுத் தமிழகம் சேர சோழ பாண்டியராட்சிக்குட்பட்ட முத்தமிழ் நாடாய் இருந்து வந்தமையானும், கி.மு. 7ஆம் நூற்றாண்டினரான தொல் காப்பியரும், "வண்டமிழ் மூவர் தண்பொழில் வரைப்பின் நாற்பெய ரெல்லையகம்'' என்று (தொல். 1336) கூறுதலானும் வரலாற்றுக்காலம் நெடுகலும் இலங்கை அயலாராட்சிக்குட்பட்ட ஒரு குடியேற்ற நாடாகவே கருதப்பட்டு வருதலானும் தமிழ் என்னும் பெயர் குமரிக்கண்டத்திலேயே தோன்றிவிட்டமை யானும் தாமமெல்லாம் அல்லது தாமீழம் என்பது இலங்கையை நோக்கிப் புதுவதாகப் படைத்த பொருந்தாப் புணர்ப்பாதலாலும் அப்புணர்ப்புச் சொல்லினின்று தமிழென்னும் பெயர் தோன்றிற் றென்பது நாட்டுப்பற்றினாலெழுந்த விருப்பக் கருத்தேயன்றி வேறன்று.

"தமிழ் ஒப்புயர்வற்றதென்னுங் கருத்து ஏனைய மொழிகள் எல்லாம் தோன்றியபின் அவற்றோடு தமிழை ஒப்புநோக்கி அதன் உயர்வுகண்டு அதற்குத் தமிழ் எனப் பெயரிட்டனர் என்று அப் பெயரீட்டை மிகப் பிந்திய நிகழ்ச்சியாகக் காட்டுவதால் அதுவும் கொள்ளத்தக்கதன்று.

"மூவினமெய் எல்லா மொழிகட்கும் பொதுவாதலின் தமிழ் என்னும் பெயர் அதுகுறித்துத் தோன்றிற்றென்பதும் தவருனதே.

"எல்லா மொழியாளரும் தத்தம் மொழியே இனியதென்று கொள்வது இயல்பாதலானும், மாடு என்னுஞ் சொற்குச் செல்வம் என்னும் பொருள் தோன்றியதுபோல் தமிழ் என்னுஞ் சொற்கு இனிமை என்பது மதிப்பும் பற்றும்பற்றித் தோன்றிய வழிப்பொருளே யாதலானும் தம் + இழ் (இழும்) என்னும் சொற்பகுப்பில் 'தம்' எனனும் முன்னொட்டுத் தொடர்பற்றும் இழும் என்னும் தலைமைசொல் ஈருகக் குன்றியும் இருக்க வேண்டும் நிலைமை யேற்படுதலானும் இனிமைப் பொருட் கரணியமும் ஏற்றதன்ரும்.

"தனிமையாக ழகரத்தைக் கொண்டதென்னுங் கருத்துப் பொருத்தமுள்ளதாகத் தோன்றினும் அதுவும் ஏனை மொழி களுடன் ஒப்புநோக்குதலை வேண்டுதலின் ஏற்கத்தக்க தன்று. கி.மு. 10,000 ஆண்டுகட்கு முன்னரே குமரிக் கண்டத்தில் தமிழ் என்னும் பெயர் ஏற்பட்டுவிட்டது.

"தமிழ் என்னுஞ் சொல்லைத் த + மிழ் என்று பிரித்தும் தம் + மிழற்று என்று விரித்தும் நமது இனிய மொழி என்று பொருள் குறிப்பது......ஆர்வக்கோளி (Dative of Interest) என்னும் ஆங்கில இலக்கண அமைதியை ஒருபுடையொத்தது."

**தமிழ் — மேலாய்வு :**

இவையெல்லாம் தமிழ் என்பது பற்றிய பிறர்கோள் மறுப்பாகும். பிறர்கோள் உரைத்தும் மறுத்தும் வரைந்தோருள் து. சு. கந்தசாமி முதலியார் புதுவதாம் ஒருமுடிவைக் கண்டு விரித்துள்ளார். மொழிஞாயிறு பாவாணரும் தம் கருத்தை வெளி யிட்டுள்ளார். அவற்றை அறிந்துகொள்ளுதல் நம் மேலாய்வுக்கு மிக்க துணையாக அமைதல் உறுதியாம்.

"தம் மொழி எனும் இரண்டு சொற்களாலாய சொற்ருெடர் காலச் செலவில் 'தமொழி' 'தமிழி' 'தமிழ்' என்ருயிற்றென்று

கொள்ளல் சாலும். ஆகவே தமிழர்தம் மொழியே தமிழாம் எனவே சிறப்புடைத்தெனத் தோன்றுகிறது.

"தமிழ் மக்கள் வழங்கும் முறைப்பெயர்கள் பலவற்றை நுனித்து நோக்கின் அப்பெயர்களுட் பெரும்பான்மையன தன்மைப்பெயரும் வேறுபெயரும் சேர்ந்து இரண்டும் ஒன்ருய் ஒரு சொன்னீர்மையாய் வழங்குவதைக் காணலாம். எங்ஙன மெனிற் காட்டுதும்:

தம் + ஐயன் = தமையன்
தன் + ஐயன் = தனையன்
தம் + முன் = தம்முன்
தம் + பின் = தம்பின் தம்பி(ன்) தம்பி.

இச்சொல் முதலில் தம்பின் என்றிருந்து பின் தம் என்ற சொல்லை எடுத்து மிக்கொலித்தலான் 'ன்' நலிந்து கேடுற்றுப் பின் தம்பியாயிற்று. 'எம் + பின்'னும் 'உம் + பின்'னும் அங்ஙனமே எம்பி, உம்பியாயின. அங்ஙனமன்றி எம் + தம்பி எம்பியாயிற்றெனக் கோடல் சாலாது அப்படிக் கோடல் தம்பியின் உண்மை வடிவினைக் காணுதார் செய்கையாம். தெலுங்கில் தம்பினுகி என்று வேற்றுமை உருபேற்றவிடத்து வழக்கிலிருப்பதைக் காண்க......

"தாம் உண்ணும் உணவினும் போற்றும் உயிரினும் தம் மொழியைச் சிறப்புடையதாகக் கருதிய தமிழ் நன்மக்கள் தாம் வழங்கும் மொழிக்கு, உரிமையான் 'தம்மொழி'யெனப் பெயரிட்டார்கள் என்றும் தம்மொழியே காலச்செலவில் 'தமிழ்' என்று ஆயிற்று என்றும் கூறுதல் தகும்.

—இவை துா. சு. கந்தசாமியார் கூறும் 'தமிழ் மொழியாக்கம்' குறிப்புகளாகும். (செந்தமிழ்ச் செல்வி 3 : 10-11)

**மேலாய்வின் மேலாய்வு:**

தமிழ் என்னும் சொல்லாய்விலே தலைப்படும் பாவாணர் முதற்கண் சில வரன்முறைகளைத் திட்டப்படுத்திக்கொண்டு

அதன்மேல் தம் ஆய்வை ஓடவிடுகிருர். தம் ஆய்வைத் தாமே எதிராய்வும் செய்கிருர்; தம் ஆய்வும் மேலும் ஆய்வுக்குரியதே என்றும் நிறுத்துகிருர். முறையே அவை வருமாறு :

"ஒரு நாட்டில் ஒரு மொழி வழங்குமாயின் அதற்குச் சிறப்புப் பெயர் தோன்ருது. பேச்சு அல்லது மொழி என்னும் பொதுப் பெயரே அதற்கு வழங்கும். ஓர் ஊரில் ஒரே ஓர் ஆறிருப்பின் அதை ஆறென்று பொதுப் பெயராலேயே குறிப்பர். இங்ஙனமே மலை, குளம், மரம் முதலிய பிறவும் ஒன்றேயொன்ருயிருப்பின் பொதுப் பெயராலேயே குறிக்கப்பெறும். ஒரு மொழி ஆயிரங் கல் தொலைவிற்கு அப்பால் படரின், பல்வேறு கரணியம்பற்றித் திரிதல் இயல்பு. அத் திரிபு திடுதிப்பென்று தோன்ருது மெல்ல மெல்லப் படிப்படியாகத் தோன்றும். அது மொழிபெயர்தல் எனப்படும். தொன்றுதொட்டுத் தமிழையடுத்து வடபால் வழங்கும் திரவிடமொழி தெலுங்கே. அதனுல் அதைத் தமிழர் வடகு என்றனர். அது பின்பு உயிரிசைவு மாற்றத்தால் (Hormonic Sequenca of Vowels) வடுகு எனத் திரிந்தது......

தமிழ வணிகர் வடக்கிலுள்ள மொழிபெயர் நாட்டிற்குச் சென்றிருந்தபோது அந்நாட்டார் அவ்வணிகர் பேச்சைத் தம்மில் (தம் + இல்) மொழி என்று குறித்திருக்கலாம், இல் என்பது வீட்டையுங் குடியையும் ஊரையும் உணர்த்தும். இற்பிறந்தார் (குறள். 915) குடிப்பிறந்தார்.

அன்பில் கிடங்கில் பொருந்தில் என்பன ஊர்ப்பெயர்கள். ஊர் நாடு என்பன ஒன்றையொன் றுணர்த்தலுமுண்டு. நாட்டாண்மைக்காரன் என்பவன் ஊராண்மைக்காரன். ஆண் மறை நாடு, உரத்தநாடு, பைங்கா நாடு என்பன ஊர்ப் பெயர்கள்.

தம் இல் மொழியாவது தம் வீட்டில் அல்லது நாட்டில் பேசும் மொழி. தம்மில் என்பது தமில் எனத் தொக்குத் தமிழ் எனத் திரிந்திருக்கலாம். வெய்யில் என்பது வெயில் எனத் தொக்கு வழங்குதலை நோக்குக.........

இனித் தன்மானம் தமர் என்னும் சொற்களில் தன், தம் என்பன படர்க்கை சுட்டாது, சொந்த என்ற பொருள் படுதல்

போல் 'தமில்' என்னும் சொல்லிலும் 'தம்' என்பது சொந்த என்று பொருள்படுமாறு தமிழரே அப்பெயரைத் தம் மொழிக்கு இட்டுக்கொண்டனர் எனக் கொள்ளலும் ஒன்று.........

"இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் என்னும் பெயருக்குக் கூறப்பட்ட பொருட் காரணியங்கள் எல்லாவற்றுள்ளும் தனியாக ழகரத்தையுடையது, தந்நாட்டு மொழி என்னும் இரண்டே பொருத்தமானவை என்றும் இவற்றினும் சிறந்தது தோன்றும் வரை இவையே கொள்ளத்தக்கனவென்றும் எண்ணிக்கொள்க."

தமிழ் என்பது பற்றிய பலர் கருத்துகளையும் அறிந்தோம். அக் கருத்துகளைத் தடைவிடை ஆய்வால் ஏற்பன ஏற்று விலக்குவன விலக்கிக்கொண்டவர்கள் எழுத்துகளையும் படித்தோம். எனினும் தமிழ் என்பதற்கு முற்ற முடிந்த ஒரு கருத்துப் புலப்படாமல் வழுவிக் கொள்ளுதலை நம் உள்மனம் ஒப்புக்கொண்டே இயலக் காண்கிறோம். ஆகலின் இன்னும் ஆய்வு வழியில் சென்றோர் தடம்பற்றி மேலே செல்ல வேண்டியவர்களாகவே உள்ளோம் என்பதையே உணர்கிறோம். நம் ஆய்வின் மேல் ஆய்வு வேண்டத்தக்கதே என்பதையும் ஒப்பியே இப் பகுதியில் அடி வைக்கிறோம்.

**தம்முரிமைத் தனிப்பற்று :**

ஒருவர் தாம் பிறந்த மண்ணின்மேல் பற்று வைத்தலும், பிறந்த குடியின்மேல் பற்று வைத்தலும், தம் பெற்றோர் மக்கள் சுற்றம் இவர்மேல் பற்று வைத்தலும், தாம் பேசும் மொழியின் மேல் பற்று வைத்தலும் இயற்கையானவை. முற்றுந்துறந்த துறவியராலும் விலக்க வொண்ணாப் பற்றுகள் இவை என்பதை வரலாறுகள் காட்டுகின்றன; இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன.

அறம் பாட வந்த திறவோராம் வள்ளுவர், "தம்பொருள் என்ப தம் மக்கள்" என்றார் (63). 'தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ் அமிழ்தினும் சிறந்தது' என்றார் (64). தம் மக்கள் மழலை மொழியே குழலினும் யாழினும் இனிதெனக் குறித்தார் (66).

தம்மினும் தம்மக்கள் அறிவுடைமையே மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இன்பம் செய்யுமென மொழிந்தார் (68). தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய் ஈன்ற பொழுதினும் இன்புறுதலை இயம்பினர் (69). இவையெல்லாம் 'மக்கட்பேறு' என்னும் ஒருபத்துப் பாடல்களுக்குள்ளேயே!

தம் இல்லத்திலே இருந்து தாம் தேடியதை உண்பதைத், தம் அன்புக் காதலியுடன் இன்புற வாழ்தலுக்கு ஒப்பாக இணைத்துப் பொருட்பாலிலும் பேசுகிறார் (1107). தம் சுற்றம் (584) தம் குடி (1024) தம் மனையர் (720) தங்குடை (1034) என்பன வெல்லாம் பேசப் பெறுகின்றன. 'தமர்' என்பது பயில வழங்கப்பெறுகின்றது. 'தம்மொடு கொள்ளாத கொள்ளாது உலகு' என்பது உரிமைப் பொருளுக்குப் பேருரிமையுடையது போலும்! "தம்மானை விரும்பாத சாதியார் உளரே?" என்னும் துறவோர் வாக்கு எவ்வளவு துலக்கமிக்கது என்பது 'தம்முரிமை' பற்றி எண்ணுவாரால் உணரக் கூடியதே!

'தம்' என்னும் உரிமை—சொந்தங் கொண்டாடும் உரிமை—மக்களுக்கு—தமிழ்மக்களுக்கு — எத்தகைய இயல்பானது என்பதை அவர்கள் வழங்கும் முறைப் பெயர்கள் நன்கு வலியுறுத்தும். அதனைத் தூ சு. கந்தசாமியார் எண்ணியெழுதியதை முன்னர்க் கண்டுள்ளோம்.

## முறைப்பெயர் முறைமை:

'ஆய்' என்பது பெற்றவளைக் குறிக்கும் பெயர். அப் பெயருடன் தம் என்னும் கெழுதகை யுரிமை யெய்தத் தம் + ஆய்—'தாய்' ஆகி வழங்குகிறது. ஆயும் தாயும் வழக்கில் உள்ளனவே.

அப்பன் என்னும் பெயர் தம் என்னும் உரிமையுடன் செறிந்து 'தம் + அப்பன்—தமப்பன்' (தகப்பன்) ஆகியது.

தந்தை என்னும் பெயர் தமப்பனைக் குறித்து வருதல் அறிந்ததே. ஒரு காலத்தில் 'அந்தை' என்னும் பெயர் இருந்து தம் முரிமைச் சொல் தழுவத் தந்தையாகி இருத்தல் வேண்டும்

எனத் தெளியலாம். தம்+அந்தை—தந்தை எனக் கொள்ளல் தகும்.

முறைப் பெயர்கள் உணர்ச்சிக் குறிப்புகளாக வருதல் கண் கூடு. அப்பா, அப்பப்பா, அப்பே, அப்பப்பே, அப்பப்போ, ஐயா, ஐயையா, ஐயையே, ஐயையோ, அச்சா, அச்சோ, அச்சச்சோ, அத்தா, அத்தே, அத்தை, அத்தத்தோ இன்ன வாறாக உணர்வுக் குறிப்புகளாய்ச் சொற்கள் வழங்குதல் இருவகை வழக்கிலும் காணப்படுபவையே. அந்தோ (ஐயோ) என்னும் உணர்வுக்குறிப்பு மிகத் தொன்மையது. 'அநதீற்று ஓவும் அன்னீற்று ஓவும்' தொல்காப்பியத்துச் சுட்டப்பெறும் சிறப் பின. அந்தீற்று ஓ—அந்தோ; அன்னீற்று ஓ—அன்னோ, இவ்விரண்டும் தந்தை தாயர் பெயர்களின் வழி வந்த உணர்வுச் சொற்களேயாம். அன்னோவுக்கு மூலம் அன்னை எனின் தெளிவு. அந்தோவுக்கு மூலம் அந்தை என்பதாக இருந்திருக்கும் என உணரலாமே! அந்த 'அந்தை' என்னும் முறைப் பெயர் தொல் காப்பியர் காலத்திற்கு முற்படவே வழக்கிழந்துவிட்டது எனக் கொள்ளலாம். சாத்தந்தை, கொற்றந்தை, கீரந்தை, ஆந்தை, பூந்தை முதலிய சொற்களின் புணர்ப்பெல்லாம் சாத்தன்+ தந்தை=சாத்தந்தை; கொற்றன்+தந்தை=கொற்றந்தை முத லியனவாக இடர்ப்பட்டுச் செறிக்க வேண்டியதில்லையாம். சாத் தன்+அந்தை=சாத்தந்தை கொற்றன்+அந்தை = கொற் றந்தை என்பன போல இயையத் தக்கவாய்ப் புணர்ப்புற்றிருக்கும் என்க. ஆகலின், அந்தை என்னும் பெயர் தம் என்னும் உரிமை தழுவப் பெறுதலால் தந்தையாக நிலைத்தது எனக் கண்டு கொள்க.

அக்கை என்பாள் உடன் பிறந்த மூத்தாள் அல்லளோ! அவள், 'தம்' என்னும் உரிமை செறிதலால் தமக்கையாயதும், அங்கை என்னும் இளையாள் தம்முரிமையால் தமங்கையாய்த் 'தங்கை'யாய் மரூஉப் பெற்றதும் தெளிவேயாம்.

இனித் தம் முன்னும் பின்னும் உளரே! அவர் தம்முன், தம்பின், தம்பி என்பனவாக வழங்கப் பெறுகின்றனர் அல்லரோ! ஐயன் என்பது அண்ணனையும் குறிக்கும். அவ்

வையன் முன் 'தம்' என்னும் உரிமை இணையத் தமையனுக வழங்குகின்றது. தமர், தமன், தமள், தம்மோன், தம்மோள், தம்மோர், தம்மான், தம்மாமி, தம்மாய், தம்மோய் என்பனவெல்லாம் 'தம்' என்னும் சொந்தங்காட்டி வந்த சொற்களாதல் தெளிவேயாம்.

**தம்முரிமைத் தமிழ்மொழி:**

தம் என்னும் உரிமைப் பெயர் தழுவிய இம் முறைப் பெயர்களையும் அரும்பொருட் பெயர்களையும் போலவே, 'தமிழ்' என்பதும் சொந்தங் குறித்து வந்த சொல்லேயாம். 'தம்' என்பதே அதன் முதற் சொல்லாம். அடுத்துவரும் சொல் யாதெனத் தெளிவோம்.

கழகக் காலப் புலவர்களுள் கீரனுர் பெயர் பெற்ருேர் பலர். அவருள் ஒருவர் 'இம் என் கீரனுர்' என்பவர். அவர் பாடிய அகப் பாடலுள் 'இம்'மென்னும் சொல்லை அமைப்புறப் பெய்துள்ள அருமை நோக்கி 'இம்' என் கீரனுர் எனப் பெற்ருர் (அகம். 398).

'இம்' எனல் இன்னேசை; அன்றியும், மெல்லோசை; வண்டுகளின் முரலுதல் 'இம்' என்னும் ஒலிக் குறிப்பால் உரைக்கப்பெறும். வண்டினம் முரலுதல், "தேம்பிழி மகர யாழின் வண்டுகள் இனிதுபாட" எனக் கம்பரால் குறிக்கப்பெறும். இம்மெனும் ஒலிக்குறிப்பு, இனித்தலையும் குறிக்கும். அப்பொழுது, 'இமிழ்' ஆகும். வண்டினம் மலரூதுதல் 'இமிர்தல்' ஆகும். இமிர்தல், இமிழ்தல், இமிழ் என்பவை இசைபோலும் மெல்லிய ஒலி, தேன்போலும் இனிமை என்னும் பொருளுக்கு உரியவாய்ப் பின்னர்ப் பிற பொருள்கள் சில தழுவி விரிந்தன. நிற்க.

இமிழ் என்னும் இனிமைச் சொல், தம் என்னும் உரிமைச் சொல் முற்படச் செறிய அமைதலால் தம் + இமிழ் = தமிழ் ஆயிற்ரும். தம் இமிழ் என்பதன் பொருள் என்னை? 'தமக்கு இன்பம் தருவது' என்பதாம்.

தம் மொழியை வழிவழியாகப் பேசியும் கேட்டும் இன்புற்ற மக்கள் அவ்வின்பச் சுவை கருதித் 'தமிழ்' என்றனர். 'தம்மிமிழ்,

என வரவேண்டியது தமிழ் எனத் தொகுத்துவருமோ எனப் பயிற்சியுடையவர் ஐயுறுர். 'தம் + அவர் = தம்மவர்' என்பது 'தமர்' எனவும்' 'தம் + அங்கை = தம்மங்கை' என்பது தங்கை எனவும் வருதலை அறிபவர் எளிதில் அறிவர்.

'தமக்கு இன்பந்தருவது' தம்மொழியேயன்றிப் பிறிதொன்றுண்டோ? பிறிதொன்று இன்பஞ் சேர்ப்பினும் அவ்வின்பத்தை எய்த வழிவகையும் மூலமுமாய் இருப்பது தம்மொழியே யன்றோ! எவ்வகையானும் எய்தும் இன்பத்திற்கெல்லாம் மூலமும் முதலுமாய் இருப்பதை 'இன்பம்' என்று வழங்குதல் இயல்பேயன்றோ! ஆகலின், 'தம் இமிழ்' என்பதே தமிழாயிற்று என்க.

**இழுமும் இமிழும் :**

இனித் 'தம் + இழ்' தமிழ் எனக் குறித்தார் உளரே; அதனை ஏற்றல் கூடுமே எனின், அறிவாம்.

'இழ்' என்பதை 'இழும்' என்னும் சொல்லின் ஈறுகுறைதலாகக் கொண்டு, 'இழ்' என்றனர். 'இழுமென் மொழியான் விழுமியது நுவலல்' என்பர் (தொல். 1494). "இழுது என்பதற்குத் தேன், நெய், இன்பம் முதலிய பொருள்கள் உண்டு; ஆகலின், இழ் என்பதும் இன்பப் பொருட்டேயாய் நின்றது. இழும் என்பது இழ் என நின்றது" என்று சொற்கேடு காட்டுவதினும் இமிழ் என்பது இழ் ஆயது என்று புணர்ச்சிக் கேடு காட்டுவது இயல்பானதாம். இழும் என்பது உம் ஈறு கெட்டு 'இழ்' என நின்றதுடன், 'தம் + இழ்' என்பதும் தம்மிழ் என்ருகி மகர ஒற்றுங் கெட்டுத் தமிழ் எனப் புணர்ந்தது என இருவகைக் கேடு எய்தவேண்டியதும் உள்ளதாம்.

'இழும்' என்னும் சொற்குறிப்பு, பேரொலியைச் சுட்டுவதாகவே சங்கச்சான்றோர் பாடல்களில் பயில வந்துளது. கடல் முழக்கம், (அகம் 277; குறுந். 351) வான் முழக்கம் (அகம் 159) அருவி முழக்கம் (அகம் 399; முருகு 316; சிலப் 24 : 2 : 4) வாய்த்தலை, கழிவாய்த்தலை முழக்கம் (அகம் 176; குறுந். 345) முரச முழக்கம் (புறம் 3; 93; அகம் 334) ஆகிய பேரொலிகளை

இமூம் என்னும் ஒலிக்குறிப்பால் வழங்கப்பெற்றுள்ளன! இமூம் என்பதன் பேரிரைச்சலை,

''மாடோர் உறையும் உலகமும் கேட்ப
இழுமென இழிதரும் பறைக்குரல் அருவி''

எனப் பதிற்றுப் பத்து (70) நன்கு தெளிவாக்குகிறது.

இனி, 'இழுது' என்பதோ வெண்ணெய், நெய், புலவுக் கொழுநிணம், மை என்பவற்றைக் குறிக்கும் சொல்லாகச் சங்கச் சான்றோர் பாடல்களில் வந்துளது. ஆங்கு இனிமைப் பொருட்டதாய் அமைந்திலது. 'இழுது' (புறம். 65) 'இழுதின் அன்னவானிணக் கொழுங்குறை' (புறம். 150) 'மையிழுது' (புறம் 181) 'உடும்பிழுது' (புறம். 325) 'வெண்மை வெள்ளிழுது' (குறுந். 277) 'இழுதின் அன்ன வானிணம்' (மலைபடு. 244) என்பவற்றைக் கருதுக.

'இமிழ்' என்பது கடலொலி, அருவியொலி, முழவொலி முதலியவற்றை (நற். 91; அகம். 352; குறுந் 365)க் குறித்து வருதலுண்டேனும், அதன் இனிமை, இசை, மென்மை முதலியவை தனிச்சிறப்பினவாம். இமிழிசை (முருகு. 240) இன்பல் இமிழிசை (முல்லை. 88) இன்னிசை இமிழியம் (அகம். 172) இயந்தொட்டிமிழிசை (மதுரை. 363) அம்பணை இமிழிசை (அகம். 124) கோடுமுழங்கிமிழிசை (பதிற். 50) யாழ்கொண்ட இமிழிசை (கலி. 29) என்பவையெல்லாம் இனிமைப் பொருளவாய்த் திகழ்தல் கண்டுகொள்க.

இனி, 'இமிழ்' என்பது 'ஒலி'யடியாக எய்திய இனிமைப் பொருட்டது. இழும் (இழ்) என்பதோ 'இழுது' 'வழிப்பட்டு' 'விழுமியது' என்னும் பொருட்டது. ஆகலின், முன்னதின் இயைபு பொருந்தியதாம்.

தம் + இல் (தமில் — தமிள்) தமிழ் ஆயிற்று என்பதும் எண்ணத்தக்கதே. 'தம்மில்' என வடுகர் வழங்கினும், தமிழரே வழங்கினும் ஆகட்டும்! அது பொருந்துவது அன்றாம். வழி வழியாக வழங்கப்பெற்றுவரும் இனிமைப் பொருள் 'இல்'

லென்பதில் இல்லையாம்; இல்லென்பது இல்லம் என்னும் இடப் பெயராய், அடபெயர் அங்கு வாழ்வார் பெயராய், அப்பெயர் அதன் பின்னர் அவர்தம் மொழிப்பெயராய் வரும் நிலை ஏற்கத்தக்க தாகாது. மொழிப்பெயர் இடத்திற்கும், மக்களுக்கும், அவர்தம் வாழ்வியல் நெறிக்கும் கலைக்கும் பிறபிறவற்றுக்கும் வருதலே இயல்பாகும். தமிழ் என்னும் சொல்லின் பொருள்பற்றிக் கூறிய முற்பகுதியைக் கண்டு முறைப்படுத்திக் கொள்க.

இனித் 'தமுள்' என்பதோ, 'தம் உள்ளக்கருத்தை வெளி யிடுதல்' என்னும் பொருட்டதாகக் குறித்து, மொழியின் இலக்கணம் அமைந்திருக்கும் தன்மையை வெளிப்படுத்தி வலியுறுத்தப்பெற்றதாம். எல்லா மொழிகளுக்கும் பொதுவாக அமைந்த இவ்விலக்கணத்திறமே ஒருதனி மொழிப்பெயராக அமைந்தது என்பதும் தம் உள்ளக்கருத்துக்கு ஏற்பக் கோடலாகவே முடியும். அன்றியும் முறையாய் ஒலிக்க முடியாத அயன் மொழியார் மொழிந்த கொச்சை நடையைச் செவ்விய நடையாகக் கொண்டு, செந்தமிழ்ச் சொல்லை வழுப்படுத்திய தாகவே முடியும். எந்நூலிலேனும், எத்தமிழர் வழக்கிலேனும் 'தமுள்' என வழங்கிய சான்றும் உண்டோ? முந்தை நூன் முறை ஏழியப் பின்றை நூல்களிலும், உலக வழக்கிலும் இல்லாத ஒன்றைக் கொண்டு, வழிவழிப்பட்ட வாயுரையை எளிமையாக விலக்கி ஈதே பொருளெனல் ஏற்காததாம் என்க.

**முத்தமிழ்:**

இனித், தமிழ் முக்கூறுபடப் பண்டுதொட்டு இயங்கி வருதலான், 'முத்தமிழ்', 'தமிழ் மூன்று', 'மும்மைத் தமிழ்' என வழங்கலாயிற்று.

தொல்காப்பியர் இயற்றமிழ் இலக்கணமே வகுத்தார் என்பது வெளிப்படை. அவர், 'இசையொடு சிவணிய நரம்பின் மறை' எனச் சுட்டுகிறார் (33). நாடக வழக்கையும் நவில்கின்றார் (999). 'நாட்டிய நன்னூல்' என்னும் ஒரு நூலை இளங்கோவடிகள் இயம்புகின்றார் (3:40). முச்சங்க வரலாற்றைக் கூறும் இறையனார் களவியலும், சிலப்பதிகாரமும் முத்தமிழ் நூல்களையுங்

குறித்தல் வெளிப்படை. சிலப்பதிகாரமோ, 'முத்தமிழ்க் காப்பியம்' எனவும், 'இயலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச் செய்யுள்' எனவும் வழங்கப்பெறுதல் தமிழின் கூறுபாட்டை நன்கு விளக்கும்.

சிலப்பதிகார நூற்சிறப்புப் பாயிர வெண்பா, "செஞ்சொல் குடக்கோ முனிசேரன் தண்டாவுரை முத்தமிழ்" என்றும் அரங்கேற்று காதையில் (45) வரும் தமிழ் என்பதற்கு அருஞ்சொல்லுரையாசிரியர் "தமிழாவது - வடவெழுத்து ஒரீஇ வந்த எழுத்தானே கட்டப்பட்ட வாக்கியக் கூறுகளும் இயலிசை நாடகங்களும் என்று சொல்லப்படா நின்ற மூன்று தமிழ்களும்" என்றும், அதே காதையில் (158-9) "முத்தமிழ் வகையும்" என்றும் கூறியவை முத்தமிழ்க் குறியீட்டை விளக்குவனவாம். முத்தமிழ் என்னும் பாகுபாடு முன்னரே உண்டெனினும் அதனைக் குறியீடுதந்து பயில வழக்குக்குக் கொணர்ந்தது சிலப்பதிகார நூலும் உரைகளுமேயாம். அதற்குப் பிற்பட்ட நூல்களில் 'முத்தமிழ்' என்னும் வழக்குப் பெருக ஊன்றியது.

உலக வழக்கு செய்யுள் வழக்கு என்னும் இருவகை வழக்குகளினும் உரையும் பாட்டுமாக வழங்குவனவெல்லாம் இயற்றமிழ்; அவ்வியற்றமிழ். இசையோடு (பண்ணோடு) கலந்து தாளத்துடன் நடைபெறுமாயின் இசைத் தமிழ்; இசைத் தமிழுடன் ஆடலாகிய கூத்தும் இணைந்தது நாடகத் தமிழ் ஆகலின், ஒன்றன் வளர்ச்சி ஒன்றாகவும், ஒன்றனோடு ஒன்று இணைந்த சிறப்பினதாகவும் முத்தமிழும் திகழ்ந்துவருவனவாம்.

இயற்றமிழே கற்பிப்பாரும், இசைத் தமிழே கற்பிப்பாரும், நாடகத் தமிழே கற்பிப்பாரும் எனத் தனித்தனி வல்லாளரும் பண்டுதொட்டே இருந்துளர். முத்தமிழும் ஒருசேரவல்லாரும் சங்கத்தார் காலத்திலேயே இருந்துளர் என்பதும் அவர்கள் பெயரைக் கருதிய அளவானே புலப்படுகின்றது.

பாட்டு தொகைகளில் இடம்பெற்ற பாடல்களை இயற்றியவர்கள் அனைவரும் இயற்றமிழ் வல்லாரே. பரிபாடல் பாடினார் பெயரும் இசையமைத்தார் பெயரும் நோக்க இயலிசைகளில்

தனித்தனி வல்லாளர் இவரெனல் புலப்படும். மதுரைக் கூத்தனார், மதுரைத் தமிழக் கூத்தனார் இன்ன பெயர்கள் நாடகத் துறை வல்லார் இவரெனக் காட்டும். நாடகத் தமிழ் வல்லார் முத்தமிழும் வல்லார் என்க. ஏனெனில், இயலும் இசையும் இணையாமல் நாடகத் தமிழ் இல்லையே! இவ்வகையில் முத்தமிழும் கனிந்த முழுத்துறவோராகத் திகழும் இளங்கோவடிகளார் நினைவு கூர்தற்கு உரியவர்.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே இயற்றமிழுடன் இசைத்தமிழ் நாடகத்தமிழ் நூல்களும் இருந்தன எனினும் முத்தமிழ் என்னும் ஒரு பெயரைப் பெற்றிலது என்றே கொள்ள வேண்டியுளது. சங்கச் சான்றோர் நூல்களிலேயே அக் குறியீடு இல்லாத போழ்து அவருக்கு முந்தையோர் அக் குறியீட்டைக் கொண்டிருந்தனர் என்பது ஏற்காததாம். ஆகலின், தொல்காப்பியர்க்கு முற்பட அகத்தியரால் முத்தமிழுக்கும் ஒருங்கே இலக்கணம் செய்யப்பெற்றிருந்தது என்பதும் ஏற்கும் செய்தியன்றாம். ஆனால் தனித்தனியே முத்தமிழுக்கும் இலக்கண நூல்கள் இருந்திருக்க வேண்டும் என்பது வலுவுடைய செய்தியாம்.

முத்தமிழ் என்னும் பெயர் இவ்வாறமையத் தொல்காப்பியர் காலத்தே, தமிழ், 'செந்தமிழ்' என்னும் அடைச்சிறப்பு எய்தியமை குறிப்பிடத்தக்க ஒன்றாம். ஆசிரியர் தொல்காப்பியனார் 'செந்தமிழ்' என்பதை ஆட்சி செய்வதுடன், அவர் நூலுக்குப் பாயிரம் வழங்கிய பனம்பாரனாரும் செந்தமிழ் என்பதை ஆள்வதும் கருதத் தக்கதாம்.

நயத்தகு அடைகளெல்லாம் தொடர நடைபெறும் நற்றமிழ், முதற்கண் பெற்ற அடைமொழி 'செம்மை' என்பதே என அறியக் கிடக்கின்றது. தமிழுக்கு அமைந்த 'செம்மை' என்னும் அடைமொழியின் சிறப்பென்ன?

கால்டுவெல் பெருமகனார் தமிழை 'உயர்தனிச் செம்மொழி' என்றார். பரிதிமாற் கலைஞர் இந் நூற்றாண்டின் தொடக்கத்திலே தோன்றிய "செந்தமிழ்" இதழின் முதல் இதழிலேயே,

'உயர்தனிச் செம்மொழி' என்பதை விளக்கினர். தாம் எழுதிய தமிழ் வரலாற்றிலும் வரைந்தார். தமிழின் அம் முக் கூறுகளையும் தவத்திரு ஞானப்பிரகாசர், தவத்திரு மறைமலையடிகள், மொழி ஞாயிறு பாவாணர் ஆகியோர் நிலைப்படுத்திக் காட்டினர்.

ஒரு மொழியை உயர்மொழி என்பதற்கும், தனிமொழி என்பதற்கும் ஏனை மொழிகள் தோன்றி, அவற்றுடன் ஒப்பிட்டு ஆய்வு நடாத்தித் தீர்மானிக்க வேண்டும். ஆனல், செம்மொழி என்பதற்கு அம்மொழி யொன்றன் தன்மையை ஆய்ந்தே முடிவு செய்தற்கும் ஆகும். ஆகலின், செம்மை அடையே முதல் அடையும் செவ்விய அடையும் ஆதல் தெளிவாகும். 'இது செவ்விது; இது செவ்விதல்லது' என்பது அவ்வொன்றைப் பார்த்த அளவானே புலப்படுவது அன்றே! ஒப்பிட்டுக் காண்டல் நலமே எனினும், கட்டாயமாக ஒப்பீடொன்று வேண்டுவதில்லை யாம்! ஒரு மொழியாய் இருந்த காலத்திலேயே தமிழ் 'செந்தமிழ்' ஆகத் திகழ்ந்தது என்க.

எம்மொழியும் மாந்தரால் படைக்கப் பெற்றதேயாம். மாந்தர் தம் வளர்ச்சி, மூளைக் கூர்ப்பு நிலை ஆகியவற்றுக்கு ஏற்ப மொழி, கட்டுக் கோப்பும் செப்பமும் உடையதாகத் திகழும். கலைவல்லான் ஒருவன் வடிக்கும் சிற்பம் அக்கலைக்கே அளவு கோலாய் அமைந்துவிடுவதுபோல், மொழிவல்லார் படைக்கும் படைப்பு, மொழி இலக்கணமாக அமைந்துவிடும். அந் நிலையைத் தொல்காப்பியனர்க்கு முன்னரே தமிழ்மொழி அடைந்திருந்த மையால்தான் 'செந்தமிழ்' என அப் பழ நாளிலேயே வழங்கப் பெற்றது. ஒரு மொழிக்கு வேண்டும் செவ்விய தன்மைகள் எல்லாம் ஒருங்கே பெற்றிருந்த சீர்மையே தமிழைச் செந்தமிழாக் கிற்றும்.

தமிழ்கூறு நல்லுலகப் பரப்பில் வழங்கும் உலகியல் வழக்கும் செய்யுள் வழக்கும் முழுதுற ஆய்ந்து பழுதறச் செய்யப்பெற்ற நூல் தொல்காப்பியம். தமிழ்நாட்டு மேன்மக்கள் வாழ்வியல் திறமெல்லாம் கண்டுணர்ந்து வெளிப்பட்டது அது. பொது மக்கள் வாழ்வியலில் இருந்தும் கொள்ளுவன கொண்டு, தள்ளுவன தள்ளி யாக்கப்பெற்ற நூல் அது. அதன் முறை

வைப்பும், கட்டுக்கோப்பும், காலத்தை வென்று விளங்கும் காட்சியும் இன்னபிறவும் 'செந்தமிழ்' என்பதன் செம்மைச் சான்றுகள்.

'மரபுநிலை திரியா மாட்சியது நூல்' என்றும், 'மரபுநிலை திரிதல் செய்யுட் கில்லை' என்றும், 'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்' என்றும், 'மாற்றருஞ் சிறப்பின் மரபு' என்றும் உள்ளுணர்வால் கண்டு ஒள்ளிய வகையால் நூல் யாத்தமையால் தான் பனம்பாரனுர் தொல்காப்பியத்தை 'மயங்கா மரபினது' எனப் பாராட்டினுர். இத்தகைய நிலை இற்றைக்கு மூவாயிர ஆண்டு களுக்கு முன்னரே தமிழ்மொழி எய்தியிருந்தது எனின், அதனைச் செந்தமிழ் எனத் தடையுண்டோ?

இனிச் சங்கச் சான்ருேர் தமிழுக்குப் புதியதோர் அடை தந்து வழங்கினர். அது 'தண்மை' என்பதாம். 'தண்டமிழ்' எனப் பதிற்றுப்பத்தும்(63) பரிபாடலும்(9) புறமும் (35, 51, 198) வழங்கின.

பயில்வார் உள்ளத்தைக் குளிரச் செய்தலால் தமிழ் 'தண்டமிழ்' ஆகியது. மொழி உள்ளங்குளிரச் செய்யுமோ? அன்னைமொழி குளிரச் செய்யாமல், வேறெம்மொழி குளிரச் செய்யும்? மொழியன்னையின் இளங்குழந்தைகள் அல்லரோ, அவ்வன்னை மொழிக்குரிய மாந்தர்கள் அனைவரும். தமிழ்த் தென்றல் திரு. வி. க. கூறுகிருர்:

"தொல்லை நோய்க்கு மருந்துண்டோ? மருத்துவர் என்ன விடை யிறுப்பாரோ அறிகிலேன். எனக்கொரு மருந்து துணை செய்து வருகிறது. அஃதென்னை? அஃது எனது தாய்மொழி; அமிழ்தினும் இனிய தாய்மொழி. என்போன்ருேர்க்கென்று தமிழ்க் கலைகள் தோன்றினவோ என்று யான் அடிக்கடி நினைப்பதும் உண்டு.

"தொல்காப்பியனுர், நக்கீரர், நல்லந்துவனுர், திருவள்ளுவர், இளங்கோ, சாத்தனுர், திருத்தக்கதேவர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், சேக்கிழார், கம்பர் பரஞ்சோதியார் முதலிய தமிழ்

மருத்துவர் யான் நூல் எழுதும் சிற்றறையிலும் வீற்றிருக்கின் றனர். அவர் முன்னே தொல்லை அணுகி எங்ஙனம் நோய் செய்யும்?

'அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்'

'மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு'

'குழலினிது யாழினது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்'

இப் பாக்களின் சொல்லிலும் பொருளிலும் இரண்டுங் கலந்த ஒருமை யிலும் ஒன்றித் திளைக்கும் மனம் எந்நிலை எய்தும்? அம்மனத்தைத் தொல்லை நோய் உறுத்துங் கொல்!'' (திருக்குறள் விரிவுரை; அணிந்துரை)

வாழ்வியலில் உள்ளத்தை வெதுப்பும் கேள்விகள் உண்டு; காட்சிகள் உண்டு; செயல்கள் உண்டு; ஆனால் வெய்யவையும் தண்ணியவாய் உளங்குளிரச் செய்யும் இயல்பு இலக்கியத்திற்கே உண்டு. ஆகலின் இலக்கணக் கட்டுக்கோப்பால் செந்தமிழ் ஆகிய தமிழ், இலக்கிய நயத்தால் தண்டமிழாகக் காட்சி வழங்கியது. இலக்கியப் படைப்பாளிகள் யார்? இலக்கியப் பெருநுகர்வாளிகள் அல்லரோ! கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாய்த் திகழ்பவர் இலக்கியக் காதலர் அல்லரோ! உணர்வாளர்தாமே உணர்வோவியம் படைத்து உவகையுறுத்துவர்! அவ்வகையால் தான் சங்கப் பாடல்களில் தமிழ் 'தண்டமிழ்' ஆகியது.

இனி, இளங்கோவடிகளார் காலம் தமிழின் பொற்காலம்! கலைமணம் கமழ்ந்த கவின் காலம்! மொழி, பயன்கலையாய்த் திகழ்ந்ததுடன், கவின் கலையாகவும் பெருக்கெடுத்த பெருமைமிகு காலம். அவர்க்கு முன்னிருந்த கலைவல்லார் திறமெல்லாம் தட்டியெழுப்ப அவர் கலைமாமணியாகத் திகழ்ந்த காலம். ஆகலின் தமிழ் புகழ்மிக்க அடைமொழிகள் சில பெறுவதாயிற்று. அவை வண்டமிழ் (23 : 63) தென்றமிழ் (27 : 5) அருந்தமிழ் (27:189) என்பனவாம்.

வளஞ்செறிந்தமையால் வண்டமிழ்; அருமையும் நயமும் அமைந்தமையால் அருந்தமிழ்; ஆனல் தென்றமிழ் என்பதன் பொருள் யாது?

வடநாட்டில் வழங்கிய மொழி 'வடமொழி'; இது திசைபற்றித் தென்னுட்டவரால் வழங்கப்பெற்றதேயன்றி அம்மொழிக் குரியாரால் வைத்துக்கொள்ளப்பெற்ற பெயரன்ரும். தென் மொழி என்பதும் தென்தமிழ் என்பதும் தமிழரால் வழங்கப் பெறுவதேயன்றி வடநாட்டவரால் வழங்கப்பெற்றது இல்லையாம். ஆதலால் 'தென்' என்பது திசைப்பெயர் அன்று என முடிவு செய்யலாம். 'தென்தமிழ்' என்பதுபோல் 'வடதமிழ்' என ஒன்றில்லையே! தெற்குத் தெரு, வடக்குத் தெரு, தென்மலை வடமலை என்று வருபவைதாமே திசைப்பெயர்! எனின், 'தென்' என்பதன் பொருள் என்ன? அழகு, வண்டு, தேன், இசை முதலிய பல பொருள்களையுடையது தென் என்னும் சொல். இவற்றுள் வண்டொன்றும் நீங்க மற்றைப் பொருளெல்லாம் தமிழுக்குத் தகவாக அமைதல் கண்டுகொள்க. இவற்றுள் தேன் என்னும் இனிமைப் பொருட்டதாகக் கொள்ளல் தமிழ் என்பதற்கு அமைந்த பொருளுடன் உரிமை பூண்டதாகும்.

இளங்கோவடிகளார் காலத்திற்குப் பின்னர் ஆளுடைய பிள்ளையார் தமிழ் ஞானசம்பந்தராகவே திகழ்ந்தார். அவர் பாடிய தேவாரத் திருப்பாடல்கள் 'தமிழ்கெழு விரகினன் தமிழ் செய்மாலை'யாகத் திகழ்ந்தது. அவர் பாடிய தேவாரத் திருப் பத்துகளின் இறுதியில்வரும் 'கடைகாப்பு'ப் பாடல்களில் தமிழ் கொஞ்சிக் கொஞ்சிப் பாராட்டப்பெறுகின்றது. அத்துணை அடைமொழிகள் அமையத் தமிழைப் பாராட்டினேர் அரியர். 'தமிழியக்கம்' கண்ட பாவேந்தர் தமிழ்க் காதல், தமிழ்ஞான சம்பந்தர் கடைகாப்பில் முருகி நின்றமை அவ் வடைமொழி களாலே அறியக்கூடும்.

முந்தையோர் தமிழுக்கு வழங்கிய அடைமொழிகளை முன்னரே கண்டுளோம். அவற்றையன்றியும், அவற்றைத் தழுவியும் ஞானசம்பந்தர் பதிகங்களில் வரும் அடைமொழிகளின் அடைவு :

ஆரா அருந்தமிழ், இசைமலிதமிழ், இன்புறுந்தமிழ், இன்றமிழ், உருவாரும் ஒண்டமிழ், உரையார் தமிழ், ஏரினுர் தமிழ், ஒண்டமிழ், ஒளிர் பூந்தமிழ், கலைமலிதமிழ், கலைவலதமிழ், குலமார் தமிழ், குற்றமில் செந்தமிழ், குன்ருத்தமிழ், சங்கமலி செந்தமிழ், சந்தநிறை தண்டமிழ், சந்தமார் தமிழ், சந்தமார்ந்தழகாய தண்டமிழ், சந்தமாலைத்தமிழ், சந்தமின்றமிழ், சந்துலாந்தமிழ், சீர்மிகுத்ததமிழ், சீரின்மலிசெந்தமிழ், செந்தண்டமிழ், செறி வண்டமிழ், சொல்லார்தமிழ், ஞாலமிக்கதண்டமிழ், ஞானத் தமிழ், தகைமலிதண்டமிழ், தவமல்குதமிழ், தன்ஞர்வம் செய்தமிழ், திருநெறியதமிழ், துளங்கில்தமிழ், தேனேரார்தமிழ், நல்லவாய வின்றமிழ், நலங்கொள்தமிழ், நற்றமிழ், நிகரில்லன தமிழ், படமலிதமிழ், பண்ணியதமிழ், பண்ணுரும்தமிழ், பந்தமார் தமிழ், பரவார்தமிழ், பரவியதமிழ், பலமிகுதமிழ், பாரிஞர்தமிழ், புகழ்நின்றதமிழ், பேரியல் இன்றமிழ், மருவியதமிழ், மறையிலங்கு தமிழ், மறைவளரும்தமிழ், முடிவிலின்றமிழ், முத்தமிழ், வடமார் தமிழ், விலையுடையருந்தமிழ் என்பன.

இவ்வடை மொழிகளால் தமிழுக்கு இயல்பாய் அமைந்த அருமை, இசைமை, இளமை, இனிமை, எழின்மை, ஒளிமை, கலைமை, சீர்மை, செம்மை, செறிமை, தகைமை, தண்மை, நன்மை, நெறிமை, புகழ்மை, மறைமை, மும்மை, மென்மை, வலிமை, வளமை முதலியவையெல்லாம் அடைவே அறிந்து கொள்ளலாம். இத்தகைய தமிழ் ஞானசம்பந்தர் முதலியோர் பாடிய தேவாரத் திருப்பாடலும் நாலாயிரப் பனுவலும் தமிழ்த் தெய்வத் திருக்கோயிலுக்குள்ளே ஓதி உருகுதற்கும் இட மில்லாமல் ஒழிக்கப்பட்டதும் ஒளிக்கப்பட்டதும் எண்ணி 'அந்தோ! தமிழ்நாடே' என வருந்தலாம். 'தமிழைப்போல் உயர்ந்த மொழி ஒன்று இல்லை; ஆனுல் தமிழரைப்போல் மடவரும் ஒருவர் இல்லை' என்று ஒருவர் நொந்து கூறினுரே! இன்றுவரை, அந்நிலை மாறியிருக்கிறதா ?

ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தின் கடைகாப்புகளில் இத்துணை அடைமொழிகள் உண்டு என்ருல், பிறர் பாடல்களில் தமிழின் தகவு பாடப்பெறவில்லையோ? 'தன்னேரிலாத தமிழ்'

என்ற ஊற்றம். எத்துணை எத்துணை உணர்வாளர் உள்ளங்களில் எல்லாம் தோய்ந்து பெருக்கெடுத்திருக்கிறது! "இருந்தமிழே உன்னால் இருந்தேன்; இமையோர்; விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்றாரும் இருந்தனரே! அவர் தமிழ்க் குழந்தையை எப்படிக் கொஞ்சுகிறார்! குலாவுகிறார்! அரவணைக்கிறார்! (தமிழ்விடுதூது) 'என்றுமுள தென்றமிழ்' என்றிசைத்த கம்பர் தமிழ்க் காதலுக்கு அளவும் உண்டோ? மேலோட்டமாகக் கண்டாலும் எத்தனை எத்தனை அடைமொழிகளைப் புலமையாளர் வழங்கியுளர்!

ஏழிசை இன்றமிழ், ஒண்தீந்தமிழ், சீர்மன்னு செந்தமிழ், செஞ்சொற்றமிழ், ஞாலமளந்த மேன்மைத்தமிழ், தண்ணார்தமிழ், தீந்தமிழ், துய்யதமிழ், தூயதமிழ், தெய்வத்தமிழ், தென்னன் தமிழ், தேக்குறுதமிழ், தேமருதமிழ், நல்லிசைத்தமிழ், பண்ணியல் தமிழ், பண்பட்டசெந்தமிழ், பழுத்தசெந்தமிழ், பூந்தமிழ், பொய்யாத்தமிழ், மூவாத்தமிழ், மேன்மைத்தமிழ், வியன்தமிழ் இன்னன இன்னன!

தனித்தமிழ் :

காலந்தந்த கவின்கொடையாய்த் 'தனித்தமிழ்' என்னும் ஒரு தகவார்ந்த அடைமொழியும் இந்நூற்றாண்டில் வாய்த்தது.

எத்தகு நுண்ணறிவாளர் ஈசான தேசிகராம் சுவாமிநாத தேசிகர்! "நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்" என்பதை நிலைப்படுத்திவிட்டாரே! 'நூலுரை போதகாசிரியர் மூவரும், முக்குண வசத்தான் முறைமறந்தறைவரே" என்ற தம்முரைக்குத் தாமே எடுத்துக்காட்டாகி, "ஈதொரு நூலன்றே" என்று அவையடக்கமாக உரைத்ததை மெய்யாக்கி. "இகமுதல் வழக்கே" என்னும் முடிப்புரையை முடிப்புரையாக்கி, இலக்கணக் கொத்தினை உரையுடன் உலாவ விட்டாரே, அவர்தம் 'செயல்மாண்பே' 'தனித்தமிழ்' இயக்கத்திற்கு எதிர்மறைத் தூண்டல் என்பது தகும்.

[1] "வடநூலைவிட்டுத் தனியே தமிழ்நூல் நடவாதது நியமம்" என்பது ஈசானர் உரை முடிவு. "தமிழ் நூற்கு அளவிலை அவற்றுள், ஒன்றே யாயினும் தனித்தமி ழுண்டோ?" என்பது அவர்தம் செய்யுள் முடிவு! "பல்கால் பழகினும் தெரியா வுளவேல் தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார், மூன்றினும் முழங்கும்" என்றவர், "ஆண்டினும் இலையேல் வடமொழி வெளிபெற வழங்கும் என்க" என்பது அவர்தம் தேர்ச்சியுரை,

*"எழுத் தெனப்படுவ*
*அகர முதல னகர இறுவாய் முப்பஃதென்ப*
*சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே"*

*"அவைதாம்,*
*குற்றிய லிகரம் குற்றிய லுகரம்*
*ஆய்தமென்ற மூப்பாற் புள்ளியும்*
*எழுத்தோ ரன்ன"*

என்று எடுத்த எடுப்பிலேயே முதலிரு நூற்பாக்களில் தமிழ் எழுத்து முப்பத்து மூன்று என முத்திரை குத்தி முகத்தில் பதித்திருக்கவும், "தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்தெண்ணிப் படித்த சுவாமிநாத மூர்த்தி" நாணம் சிறிதும் இன்றி, 'ஐந்தெழுத் தாலொரு பாடையென் றறையவே நாணுவர் அறிவுடை யோரே' என்று மொழிந்து இழிபழிக் குழியின் இருப்பாகிக் கொண்டார்!

வேதங்களிலே தொன்மையானது இருக்குவேதம். அதனுள் புகுந்துள்ள தமிழ்ச் சொற்கள் பல. அவை இந்நாள் வடமொழி வல்லாராலும் விலக்க நினைத்தும் விலக்க முடியாவண்ணம்

---

*1. "தமிழ்ச் சொல்லிற்கு எல்லாம் வடநூலே தாயாகி நிகழ் இன்றமையின், அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்" என்பது வீரசோழிய விளக்கம் (60) கி.பி. 11ஆம் நூற்றாண்டில் புத்தமித்திரரால் செய்யப்பெற்ற வீரசோழியம் தமிழுக்கும் வடமொழிக்கும் ஓரிலக்கணமே என்னும் முடிவில் வடமொழியை வரிந்து கட்டிக் கொண்டு புகுத்திய முயற்சியதாம்.*

ஏற்றுக்கொண்டு எழுதும் நிலைமை மெய்ச்சான்றுகளால் நேர்ந்து விட்டது. ஆனால், "ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ?" என்று உதறுகிறார் தேசிகர்.

தமிழ்ப் பிரயோகவிவேகம் செய்தாரே சுப்பிரமணிய தீட்சிதர்; இவரும் அவரும் ஒரு காலத்தவர்; ஒரு நோக்கர்; ஒரு போக்கர்; தமிழின் பெருமைக்கே, சிறுமை சேர்க்கத் தோன்றிய 'சீராளர்'கள்! இவர்களுக்கும் முன்னோடி பொன்பற்றிப் புத்த மித்திரரும் அவர் இயற்றிய வீரசோழியமும் என்க.

காவடிச் சிந்துக்குத் தந்தை என்னும் தனிப்பெருமைக்குரிய அண்ணாமலையார் தம் இளமைப் பருவத்திலே தம் பெயரைத் தம் ஆசிரியரிடத்துத் 'தமைய பர்வதம்' என்றார். 'மலை'யைப் பார்க்கிலும் 'பர்வத'த்தில் அத்தகைய பற்று! பிள்ளை விளையாட்டு என இதனை விட்டொழிக்கலாம்! ஆனால் மூதறிவாளர் விளையாட்டு அன்றோ தேசிகர் தீட்சிதர் விளையாட்டுகள்! வினையாட்டுகளாக வல்லவோ வாய்த்தன!

பிறந்த மண்ணுக்குப் பெறலரும் பெருமை சேர்த்த பரிதிமாற் கலைஞர் எங்கே! இவர்களெங்கே! சூரிய நாராயண சாத்திரியார், பரிதிமாற் கலைஞரென மாற்றித் தனித் தமிழுக்கு வித்திட்டார். அவருக்கு முன்னரே கால்டுவெல் பெருமகனார் தனித்தமிழ்த் தகவை வெளிப்படுத்தினார்; சுவாமி வேதாசலராக இருந்து தனித்தமிழ் நிறைமலையாகிய மறைமலையடிகள் தனித்தமிழை நிலைப்படுத்தித் தனித்தமிழ் இயக்கம் கண்டார்.

"தமிழ் நூற் களவிலை; அவற்றுள் ஒன்றே யாயினும் தனித் தமிழ் உண்டோ?" என்று வினவிய ஈசான தேசிகர், "தனித் தமிழ் நூலாய் இயற்றுவென் யானே" என்று வீறுபெறக் கூறி நூலாக்கம் செய்திருந்தால் 'செயற்கரிய செய்த' பெரியாராய்ச் சிறப்பெய்தி யிருப்பார். அவர்தாம் 'நகைப்பதற்கன்றோ நற்றமிழ்' கற்றார்! அந் நகைப்பு எள்ளலில் பிறந்தது எனினும், பல ருள்ளகம் தைத்தது உண்மை! உருப்படியான பயன் தந்ததும் உண்மை! "கொடுத்தும் கொளல் வேண்டும் மன்ற அடுத்திருந்து, மாணாத செய்வான் பகை" என்பது பொய்யில் புலவர் பொருளுரையன்றோ!

இன்னிசை இளங்குயிலென நீலாம்பிகைச் செல்வி "பெற்ற தாய்தனை மகமறந்தாலும்" என்னும் வள்ளலார் திருப்பாட்டைத் தேனொழுகப் பாடினார். அவர்தம் அருமைத் தந்தையாராம் மறைமலையடிகளார் உடனிருந்து கேட்டு மகிழ்ந்தார். "நீலா, இவ்வருமைப் பாட்டில் 'தேகம்' என்னும் ஒரு வடசொல் உள்ளது. இவ்விடத்தில் 'யாக்கை' என்னும் அருமைத் தமிழ்ச் சொல்லை அடிகளார் பெய்திருந்தால் எத்துணையினிமையாக இருந்திருக்கும்" என்றார்! அப்பொழுது அத் தீந்தமிழ்த் திருச்செல்வி "நாம் இன்று முதல் வடசொல்லை விலக்கித் தனித் தமிழில் பேசுவதும் எழுதுவதும் புரிந்தால் என்ன?" என வினவினார். அச் செல்வியின் வினா அடிகளார் உள்ளத்தில் தனித்தமிழ் இயக்கமாகக் கருக்கொண்டது. அப்பொழுதில் அச் செல்வியின் அகவை 13. அடிகளார் அகவை 40. ஆண்டு 1916.

தனித்தமிழ் எண்ணம் தோன்று முன்னரே அடிகளார் பன்னூலாசிரியர். அவற்றையெல்லாம் தனித்தமிழாக்கினார்; மறுபதிப்பிட்டார்; 'ஞான சாகரம்' என்னும் தம் இதழை அறிவுக் கடலாக்கினார்! 'சமரச சன்மார்க்க சபையைப்' பொதுநிலைக் கழகமாக்கினார். தம் மக்களுள் வடமொழிப் பெயராளர்களைத் தனித் தமிழ்ப் பெயராளராக்கினார். அவர் தொடர்புடையாரையும் அவ்வாறே ஆக்கினார். அடிகளார் வழியில் ஆர்வலர் பலர் கிளர்ந்தனர். அவருள் தலையாய—மலைக்கும் மலையாய—பெருமகனார் மொழி ஞாயிறு பாவாணர் ஆவர். அவரே தனித் தமிழ் இயக்கத்தின் பாசறை; படைக்கலக் கொட்டில்; வழி நடாத்தும் தனித்தமிழ்த் தானைத்தலைவர்; நெறி காட்டும் ஒளி விளக்கு; அவர்தம் நூல் ஒவ்வொன்றும் தனித்தமிழ் இயக்க மாளிகையின் வெற்றித் தூண்கள்! அவற்றுள் தமிழ் வரலாறும், வடமொழி வரலாறும் நுழைவாயில் முகப்பில் அமைந்துள்ள நிலைப்பெருங் கலைத் தூண்கள்!

மறைமலையடிகளார் போலவும் பாவாணர் போலவும் மற்றை மற்றைப் புலமையாளர் தனித்தமிழ் நாட்டம் கொள்ளாததேன்? முடியாமை சிலர்க்கு! முயலாமை சிலர்க்கு! முடிந்தாலும் கூட வடமொழிச் சார்பில் நிற்றலே வளர்புகழ் என்னும் மயக்கம்

சிலர்க்கு! தேர்ச்சியிருந்தும் தெளிவிருந்தும் தீந்தமிழால் வாழ்ந்திருந்தும் வடமொழி வயப்படலே பிறவி நோக்கெனப் பித்தேறி நின்றமை சிலர்க்கு!

பாட்டும் தொகையும் பதிப்பித்துப் பதிப்பித்துப் பைந்தமிழ் ஊற்றமேறிய பெரும் பேராசிரியர் சாமிநாதையரே தனித்தமிழ் வழியில் நின்ருர் இலர்; நில்லாமை மட்டுமின்றி நின்ருரையும் வெறுத்தும் வந்தார். 'வணக்கம்' என்ருரை வணக்கமென்ன வணக்கம்; 'நமஸ்காரம்' என்று சொல்லுங்கள் என்ருர்; 'சோறு' என்பது தாழ்ந்தோர் வழக்கு என்றும் 'சாதம்' என்பதே உயர்ந்தோர் வழக்கு என்றும் குறித்தார். 'சொற்பொழிவு' என்ருரிடம், 'உபந்யாசம்' என்று சொன்னல் என்ன?' என்று கடிந்தார். தனித்தமிழ் நூல்களின் முன்னுரை, உரைகளிலும் வடமொழியைக் கலந்ததுடன் தமிழ் மரபு கடந்து வடமொழி எழுத்தையும் கலந்து எழுதினர். அவர்தம் அருமை மாணவர் என்பதிலே அளவிலாப் பூரிப்பும் புகழும் எய்திவரும் 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. சகந்நாதனுர் 'கி. வா. ஜகந்நாதன்' என்று எழுதுவதை விட்டார் அல்லர்!

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 7-11-1927 முதல் 21-12-27 வரையில் உள்ள காலத்தில் பத்து நாள்கள் முனைவர் சாமிநாதையர் சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும் என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினர். அப் பொழிவில் வரும் சில பகுதிகளைக் காண்க:

[1] "இவர்கள் (சங்ககாலப் புலவர்கள்) பாடல்களில் ஆணி, கலவம், கோவலர், மேதை, தசம், திசை, பலம், மணி, வாதி முதலிய சில வடசொற்களே காணப்படுதலால், இவர்கள் காலத்தில் வடசொற்கள் பெரும்பாலும் தமிழ்மொழியில் கலக்க வில்லையென்று சொல்லலாம்." (பக்கம் 92)

"வடமொழிச் சொற்களில் சில வேறுபட்டுத் தொன்றுதொட்டுத் தமிழில் வழங்குகின்றன. அவற்றைப் பிழையென்று நீக்காது கொள்ளவேண்டும்; திருத்தலாகாது. அவை ஐராபதம், ஆதவன், தவனன், கோகனகம், மானிடன் முதலியன. அவை

1. இச் சொற்களிலும் ஒருபாதிச் சொற்கள் தமிழ்ச் சொற்களே

தமிழில் 800 வருஷங்களுக்கு முன்னிருந்தே யமகம் திரிபு சிலேடைகளில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அநபாய சோழன் காலத்தில் இயற்றப்பெற்ற தண்டியலங்காரத்தில் 'கோகனகம்' என்ற சொல்லை எழுத்து வருத்தனம் என்னும் சொல்லணிக்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறார். மானுஷன் என்பது தமிழில் மானிடம் என்று உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.''
(பக்கம் 177)

''சங்கத்தமிழ் நன்றாயிருந்ததென்றும் பிற்காலத்தில் வடமொழிச் சம்பந்தத்தால் தமிழ் கெட்டுப்போய் விட்டதென்றும் சிலர் சொல்வர். பிற்காலத்தில் வேறுபாஷைகளின் சம்பந்தம் பெற்றுத் தமிழ் அதிக இனிமை பெற்றிருக்கிறதென்பது பெரியோர் கொள்கை.''
(பக்கம் 184)

நந்தமிழ்த் தாத்தாவின் செந்தமிழ்க் கருத்துகள் இவை. ஐராபதம், ஆதவன் முதலியன அரியபெரிய கண்டுபிடிப்புகளின் வழிப்பட்ட கலைச்சொற்களா? தமிழில் இருக்கும் பொருள் பொதிந்த சொற்களை ஒழித்துவிட்டுப் பொருள் புலப்படாத வேற்றுச்சொற்களைப் புகுத்தி மயக்குவது வேண்டுமாம்! அவை தமிழில் நெடுங்கால வழக்குக்கு வந்துவிட்டனவாம்! பண்டு தொட்டு வழங்கிய பைந்தமிழ்ச் சொற்களை ஒழித்து வேற்றுப் புதுச் சொற்களைப் புகுத்தியதும் வழங்கியதும் குற்றமில்லையாம். அவற்றை விலக்குவதே பிழையாம்.

'சங்கத்தமிழ் நன்றாயிருந்ததென்றும்' என்று எவரோ கூறுவதுபோல் கூறுகின்ற இப்பெருமகனார் தாமே ''இவர்கள் காலத்தில் வடசொற்கள் பெரும்பாலும் தமிழ்மொழியில் கலக்க வில்லை என்று சொல்லலாம்'' என்று கூறினார். அவரே பிறர் கூற்றாகக் கூறுவானேன்? அவரைச் 'சிலர்' என்பானேன்? தங்கொள்கையை மட்டில் பெரியோர் கொள்கை என்பானேன்! இதனால்தானே மறைமலையடிகள் தனித்தமிழ்க் கொள்கை 'சிறியோர் கொள்கை' என்று மறைமுகமாய்க் கூறுகிறார் என மறுத்தார்; கடிந்து எழுதினார். 'தமிழன்பர் மாநாடு' என ஒன்று கூட்டி அடிகளாரை அழைத்தபோது, அவ்வழைப்பிதழில் உள்ள வேற்றுச் சொற்களையெல்லாம் சுட்டிக்காட்டித் ''தனித்தமிழ்

நாட்டமில்லாத எவ்வமைப்பிலும் யாம் கலந்துகொண்டு உரையாற்றேம்" என்று மறுத்தார். ஆயினும் பெரும் பேராசிரியர் கடைப்பிடி கடைப்பிடியாகவே இருந்தது.

தமிழ் தனித்தியங்கும் தன்மையை என்ன அழகாகக் குறிக்கிறார் ஆசிரியர் ஒருவர். வியமிதம் ஏற்படும் வகையிலே விரித்துரைக்கிறார்:

"இதன் திறம் இன்னும் விரிக்க விரிக்க விரியும். நாம் பலபடப் பாரிக்க வேண்டா. இன்றளவும் உள்ள தமிழை மேனாக்காகக் காண்குவம் வம்மின. உழவும் கலப்பையும் காருங் கயிறும் குண்டையும் நுகமும் சாலும் வயலும் வாய்க்காலும் ஏரியும் மடுவும் ஏற்றமும் பிறவும், பயிரும் களையும் நட்டலும் கட்டலும் முதலாய ஏரெழுபதும், தமிழ்மொழிகளான் இயன்றனவே.

"தமிழர்கள் வதிதரும் வீடுகளின் கூறுகளாகிய தலைக்கடையும் புழைக்கடையும் கூரையும் வாரையும் கூடமும் மாடமும் தூக்கும் தூணும் கல்லும் கதவும் திண்ணையும் குறடும் தரையும் சுவரும் மண்ணும் மரனும் மற்றவும் தமிழே.

"தலையும் காலும் கண்ணும் காதும் மூக்கும் மூஞ்சியும் வயிறும் மார்பும் நகமும் சதையும் நாவும் வாயும் பல்லும் மயிரும் மற்றவும் ஆகிய உடற்கூற்று மொழிகள் தாமனை தனித் தமிழன்றே."

"தமிழ்நாட்டிலுள்ள சிற்றூர் சீறூர் ஆரூர் பேரூர் புத்தூர் புற்றூர் சேய்ஞலூர் மணலி நெல்லூர் நெல்லை கொன்றூர் குறட்டூர் என்னும் ஊர்கள் பலப்பல தமிழ்மொழியே புனைந்தன.

"ஞாயிறும் திங்களும் செவ்வாயும் வியாழமும் வெள்ளியும் ஆகின்ற கிழமைகட்குத் தமிழ்ப் பெயரே பெயர்.

[1] "தொண்ணூற்றொன்பதினாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது வரையில் எண்ணப்பட்ட எண்களில் ஒன்றேனும் வடமொழியால் எண்ணப்படுவது இல்லை.

1. இலக்கம் கோடி என்பனவும் தனித்தமிழ்ச் சொற்களையாம்.

"ஆழாக்கு உழக்கு நாழி குறுணி பதக்கு தூணி கலன் என்னும் முகத்தலளவையும், சாண் அடி முழம் என்னும் நீட்டலளவையும், பலம் வீசை மணங்கு என்னும் எடுத்தலளவையும் இன்னும் கீழ்வாயிலக்கமும் மேல்வாயிலக்கமும் அவற்றின் குறியீடுகளும் எல்லாம் தமிழே.

"தமிழர்கள் உண்ணும் சோறும் சாறும் காயும் கறியும் பாலும் பழமும் நெய்யும் தயிரும் உப்பு முதல் ஒன்பதும் பருப்பு முதல் பத்தும் தமிழ்ச் சுவையே உடையனவாய்த் தமிழ் மணமே வீசுகின்றன.

"தமிழர்கள் செவிக்கொள்ளும் உணவான எழுத்தும் சொல்லும் பொருளும் யாப்பும் அணியும் ஆகிய ஏடும் சுவடியும் எடுத்துப் பார்க்குமிடமெல்லாம் தமிழாகவே இருக்கின்றன.

"இவர்களுடைய துணியும் அணியும் தமிழே. இவர்கள் தொழும் கடவுளும் தமிழ் மயமே. தமிழர்களுடைய வீடும் நாடும் காடும் மேடும் எங்கும் புகுந்து பார்த்தவிடமெல்லாம் தமிழ் தமிழாகவே இருக்கின்றன."

இவற்றைப் படிக்கப்படிக்க ஏக்கழுத்தம் எழுகின்றதே! 'என்னே அருமை! என்னே அருமை! சொன்னவர் எவரே' என அவரை அறியத் துடிக்கிறோமே! இவ்வளவு அருமையாக எழுதவல்ல அவர் சறுக்கிய கடுஞ்சறுக்கலைக் காணும்போதுதான் 'தமிழின் தீயூழ்' என நைய வேண்டியுள்ளது!

"தான் பிறிது மொழி விழைபாமல் தன் ஆற்றலே ஆற்றலாக நடந்தேற வல்லதாயின் தமிழ் ஏனை வடதிசைச் சொற்களை முற்றுங் களைந்துவிட்டுக் காரியம் நடத்தலாகாதோ? தமிழ் தனித்தியங்கும் வலிமையுடைத்தென வாளா கூறிக்கொள்வதனால் பயனென்னை? நன்று தமிழ்மொழிவல்ல நாவலரும் பாவலரும் இங்ஙனே செய்ய விரும்பினால் இது செய்யக்கூடாத காரியமன்று. இது செய்யக் கூடுமாயினும், ஒருதலையாக் கொண்டு செய்வது தகுதியன்று என்பது நாம் அறிந்தபடி."

"ஆன்பால் உண்பான் கனியாக, கண்ட சருக்கரையாக, தேனுக அதனுடன் கலத்துண்டலே வேண்டா என்மர் உளரோ?

அவ்வான்பால் தானும் தன்னளவில் மதுரம் மிக்கதேனும் கனி முதலியவற்ருல் தனது இன்சுவை குன்றுதலுடைத்தாமோ? அடையும் காயும் சுண்ணமும் விரவ மென்றவிடத்து அம் மூன்றினும் பிறிதாய சுவையும் நிறமும் தோன்றுமன்றே. அங்ஙனமே தமிழும் திசை வடசொற்களும் தனித்தனியாக நின்றுழித் தோன்றும் ஆற்றலையும் ஓசையின்பத்தையும் காட்டில், அவை தம்முள் விரவ நின்ற விடத்துத் தோன்றும் ஆற்றலும் ஓசையின்பமும் மிகச் சிறந்தனவேயாம். பாகமும் செவ்விதாக இருக்கும். அறுசுவை யுண்டி அடுவார் அதற்குரிய உபகரணங்களின் அளவும் நிறையும் அறிந்து தேர்ந்து அட்டவிடத்து அவ்வுண்டி உரமும் சுவையும் தருதல் போல, தமிழ் நூல் யாப்பவரும் திசை வடசொற்களை இயையும் இடனும் அளவும் அறிந்து வழங்குவராயின் அவர் வாக்கு வளமும் இன்பமும் தருவதாகும்; பாகமும் செம்பாகமாக இருக்கும். இந் நுட்ப மறியாது முற்றும் தமிழையாயினும் பலபட வடதிசைச் சொற்களையாயினும் வழங்கினல் அந் நூலின் நடையானது சிலாபாகம் என்று சிறப்பிழக்கும். நீலமும் மரகதமும் பவழமும் முதலியன இடையிடை விராய முத்து வடமே கண்ணினுக் கின்பந்தருவதல்லது முற்றும் முத்தாறுய முத்துமாலை அவ்வின்பந் தருவதில்லையே. ஆகவே இடையிடையே வடதிசைச் சொற்கள் கலந்து வருவது தமிழுக்கு இனிமை மேல் இனிமையும், பெருமை மேல் பெருமையும் தொடுப்பதாகின்றது.''

இவ்வாறு விரித்துரைப்பதுடன், கலப்பிலாத மொழி, கட்டி வைத்திருக்கின்ற நிலை நீருக்கு இணையாய்க் கெடும் என்றும், வேற்றுமொழிக் கலப்புடைய மொழி ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் யாற்று நீருக்கு இணையாய் நலஞ்செயும் என்றும், 'பல்வேறு குடிகளில் கொள்வதும் கொடுப்பதும் செய்யாத குடி' 'க்ஷீணிப்பது' போல, ''வேறுபாஷா சம்பந்தம் பெருமல் தனித்தியங்கும் பாஷையும் அங்ஙனமே க்ஷீணமடைந்து வளம் குன்றுவதாகும்'' என்றும் விளக்கினர். (தமிழ். 24—6)

மொழித் தூய்மை போற்றத்தக்க திறமும் எழுத்தாற்றலும் புலமைச் சிறப்பும் சங்க நூல் தேர்ச்சியும் கைவரப்பெற்ற இப் பெருமகனர்— திருமணம் செல்வக் கேசவராய முதலியார்—முன்னுக்குப்

பின் முரணுகிச் சறுக்கிய சறுக்கல் அந் நாளைப் பெரும்பாலோர் இயற்கையாகித் தனித் தமிழுக்கு மாசு சேர்த்ததாம்.

தமிழ் தனித்தியங்கவல்லது என்றும், உயர்தனிச் செம் மொழி என்றும் தெளிந்து துணிந்துரைத்த பரிதிமாற் கலைஞர் இயற்றிய நூல்களின் பெயர்கள் தனித்தமிழாக இருந்தனவா? 'ரூபாவதி' 'கலாவதி' 'மானவிஜயம்' இன்னன அவற்றின் பெயர்கள்.

செல்வக் கேசவர் 'தமிழ்' 1906இல் எழுதப்பெற்றது. பரிதி மாற் கலைஞர் 1903இல் மறைந்தார். இவர்கள் காலத்தில் தமிழின் சிறப்பு வெளிப்பட்டதேயன்றி, அதன் தூய்மை—தனித் தன்மை—போற்றப்பெற வேண்டும் என்னும் கருத்து உண்டாக வில்லை. ஓர் இயக்கமாகி உருக்கொண்ட பின்னரும் போற்ரு தவர்தாம்—அறிவுறுத்திய பின்னரும் அழிவழியில் சென்றவரும் செல்பவரும்தாம் — இரங்கத்தக்கவரேயன்றி இத்தகையவர், அக் குற்றத்திற்கு உரியவர் அல்லராம்!

1910 இல் சங்கச் சான்றோர் பாடல்களையெல்லாம் புலவர்தம் பெயர் வரிசையில் (அகர முதலாகப்) பதிப்பித்த பேராசிரியர் வையாபுரியார் காலத்தில், தனித்தமிழ் இயக்கம் காலூன்றி வளர்ந்து நிலைபெற்றும் விட்டது. எனினும் அவர் அவ் வழியை ஏற்ருர் அல்லர். 'எள்ளல்' என நகைச் சுவைக்கு நான்கு மையங்களைச் சுட்டுவாரே ஆசிரியர் தொல்காப்பியர், அவ்வுத்தி யைக் கைக்கொண்டு தனித்தமிழ்ப் பற்ருளர்களை நகைத்து எழுது கிருர் அவர்:

"ஒரு கூத்து ஒரு கூட்டத்தில் நடைபெற்றது. ஒருவர் ஒருமுறை வடமொழிப் பதங்களையெல்லாம் நிர்த்தாட்சண்யமாய் ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம் என்றனர். இவ் வாக்கியத் தில் இருந்தே எவ்வளவு தூரம் வடமொழியை விலக்க முடியும் என்று தெரிகிறது அல்லவா!" என்கிருர்.

(அகராதி நினைவுகள். 18)

இப்படி எள்ளி நகைப்பதால் தம் கலப்புக் கொள்கை வெற்றி பெற்றதாகப் பூரித்துக்கொள்கிருர் பேராசிரியர்! அம்மட்டோ!

"நமது தாய்மொழி தனித்தியங்கக் கூடியது என்ற உணர்ச்சி தவருன அபிமானத்தால் தோன்றி நம்மிற் பலரையும் கூத்தாட வைக்கிறது" என்றும் மாட்டுகிருர் (அகராதி நினைவுகள் 17)

இவ்வளவோடு நிறுத்திவிட்டால் தாய்மொழிக் கேட்டுச் செயலுக்குத் தம் பெயரால் †ஒரு பெயர் (வையாபுரித் தனம்) வாய்த்திருக்க முடியாதே! அதற்கும் வழிவகுத்துக் கொண்டார். எப்படி?

"தூய மொழிக் கிளர்ச்சி பெரும்பாலும் மொழிநூற் பயிற்சி இல்லாதவரால் தொடங்கப்படுகிறது" என்னும் முத்தாய்ப்பு வைக்கிருர்! அது போதாதா? தூய மொழிக் கிளர்ச்சியில் தலைப்பட்டவர்கள் பெரும்பாலும் மொழிநூற் பயிற்சி இல்லாதவராம். மொழிநூற் பயிற்சி இல்லாதவரால் மொழித் தூய்மை எப்படிப் போற்ற முடியும்! கால்டுவெல்லாரும் டரிதிமாற் கலைஞரும், மறைமலையடிகளும், ஞானப்பிரகாச அடிகளும், பா. வே. மாணிக்க நாயகரும், பாவாணரும் மொழிநூற் பயிற்சி இல்லாரா? எத்தகைய தடிப்பில் இருந்து வெளிப்படுகிறது எழுத்து?

"ஐரேனியர் தமது பாரசீக மொழியினின்றும் துருக்கி அராபியச் சொற்களை விலக்க முற்பட்டு வருகின்றனர். செருமானியர் அந்நிய மொழிப் பதங்களைக் கடன் கொள்ளாது அவற்றை மொழிபெயர்த்து வழங்குதலை விரும்புகின்றனர்."

(அகராதி நினைவுகள் 101)

"நூருண்டு யுத்தத்திற்குப் பின் அதன் விளைவாய் எழுந்த தேசிய உணர்ச்சியால் இங்கிலாந்தில் பார்லிமெண்டு நடவடிக்கைகள் முதலியன ஆங்கில மொழியில் எழுதப்பட்டன. அக்காலம் வரையிலும் அவைகள் நார்மன் பிரஞ்சில் எழுதப்பெற்று வந்தன."

(அகராதி நினைவுகள் 103)

இவ்வாறு பிற நாடுகளிலே நடைபெறும் தூயமொழிக் கொள்கைகளை எடுத்துரைக்கும் பேராசிரியர்தாம், 'தூயமொழிக்

---

† காட்டிக் கொடுத்தலை 'எட்டப்பன் வேலை' என்பது போல.

கிளர்ச்சி மொழிப் பயிற்சி இல்லாதவரால் தொடங்கப்படுகிறது என வரைகின்றார்! உறங்குபவரைத்தான் எழுப்பலாம்! உறங்கு வதாக நடிப்பவரை எழுப்ப முடியுமோ? எத்தகைய சீரிய பதிப்பாளர்! அவர் பதிப்புக்கு இணையொன்று சொல்ல முடியுமோ?

'சேர்ந்தாரைக் கொல்லி' என்று நெருப்பைத் திருவள்ளுவர் குறிக்கிறார். அதனை 'ஆஸ்ரயாஸ்' என்பதன் மொழிபெயர்ப் பெனக் கூறுபவர், "ஒரு சில தமிழ் அறிஞர்கள் தமது பெயர் களில் கூட வடசொல் இருத்தல் கூடாது என்று எண்ணி அவற்றையும் மொழிபெயர்த்து வருகின்றனர். மணவழகு (கலியாண சுந்தரம்) மதியழகன் (சோம சுந்தரம்) முதலிய உதா ரணங்கள்" என்று எரிபவர் எப்படி எப்படிச் சொல்லமாட்டார்!

இன்னொரு சாரார் நிலைமை வேறுபட்டது. அவர்கள் தமிழில் வடமொழி கலப்பதுபற்றிக் கவலைப்படவில்லை. எவ்வளவு முடியுமோ அவ்வளவு கலந்து எழுதினர். பாடலிலும் பலபடச் செறித்தனர். ஆங்கிலம் முதலிய பிறமொழிச் சொற்கள் கலப்பதே பிழை எனக் கருதினர். அத்தகையவருள் ஒருவர் எழுத்தைப் பார்ப்போம்:

"மெம்பர் என்பதற்குச் சரியான தமிழ்ச்சொல் எனக்கு அகப்படவில்லை. இது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். 'அவயவி' சரியான வார்த்தை இல்லை. 'அங்கத்தான்' கட்டிவராது. 'சபிகன்' சரியான பதந்தான். ஆனால் பொதுமக்களுக்குத் தெரியாது. யாரேனும் பண்டிதர்கள் நல்ல பதங்கள் கண்டுபிடித்துக் கொடுத் தால் புண்ணியமுண்டு. அரைமணி நேரம் யோசித்துப் பார்த் தேன். 'உறுப்பாளி' ஏதெல்லாமோ நினைத்தேன். ஒன்றும் மனத்திற்குப் பொருந்தவில்லை. என்ன செய்வேன். கடைசி யாக 'மெம்பர்' என்று எழுதிவிட்டேன். இன்னும் ஆர அமர யோசித்துப் பார்த்துச் சரியான பதங்கள் கண்டுபிடித்து மற்றொரு முறை சொல்லுகிறேன்."

பாருங்களேன்; 'மெம்பர்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழ்ச்சொல் ஒன்று வேண்டும் என்று மேற்கண்ட பத்தியை எழுதியவர் பேரார்வம் கொள்கிறார். அதற்காகப் பெருமுயற்சியும்

செய்கிறார். சில சொற்களையும் காண்கிறார். அவை எம்மொழிச் சொற்கள்? தமிழ்ச்சொற்களா? அயல்மொழிச் சொல்லை மொழி பெயர்த்ததும் அயல்மொழிச் சொல்லாகவே இருக்குமானால், அது தமிழ்த் தொண்டுதானா? அது தமிழுக்கு வளர்ச்சியாகுமா? ஆங்கிலச் சொல்லை அகற்றி வடமொழிச் சொல்லைப் புகுத்துவது தமிழுக்கு உண்மையில் ஆக்கம்தானா? கொள்ளையடித்துக் கொண்டு போகின்றவன், கடல்கடந்த அயல்நாட்டுக் கொள்ளையன் ஆனால் என்ன! அடுத்துள்ள உள்நாட்டுக் கொள்ளையன் ஆனால் என்ன! கொள்ளையன் கொள்ளையன் தான்! கொள்ளை போயது கொள்ளை போயதே தான்!

இன்னும் ஒன்றைக் கேட்போம் :

"அ............ன்"

"மேலே காட்டிய குறியின் பொருள் யாது?

"தமிழ்நாட்டில் தேசியக் கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகரமுதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா விவகாரங்களும் தமிழ்மொழியில் நடத்தவேண்டும் என்பது பொருள். ஆரம்பவிளம்பரம் தமிழில் பிரசுரம் செய்யவேண்டும். பாடசாலைகள் தொடங்கினால் அங்கு நூல்களெல்லாம் தமிழ்மொழி வாயிலாகக் கற்பிக்கப்படுவதுமன்றிப் பலகை குச்சி எல்லாவற்றுக்கும் தமிழிலே பெயர் சொல்லவேண்டும். 'சிலேட்' 'பென்சில்' என்று சொல்லக்கூடாது.

மெம்பரைப்பற்றி எழுதினரே அவர்தாம் இதனையும் குறிப்பிடுகிறார். இதனைக்கூடத் தாங்கிக்கொள்ள முடியவில்லை தமிழில் அந்நாளில் கொடிகட்டிப் பறந்த சில பெருமக்களுக்கு! அவர்களுள் ஒருவர் மறுப்புரை :

"கும்பகோணம் காலேஜில் ஒரு தமிழ்ப் பண்டிதர் இருந்தார். அவர் இலக்கணமாகவே பேசுவார். திரிசொற்களைக் கலந்து பேசுவதில் அவருக்கு விருப்பம் அதிகம். பிறருக்கு எளிதில் விளங்கவேண்டும் என்பதை நினையாமல் தமிழ்நாட்டில் வழக்கத்தில் வந்த சிலவேறு பாஷைச் சொற்களை அவ்வாறே

வழங்காமல் மொழிபெயர்த்துக் கூறுவார். பிள்ளைகளிடம் பேசும் பொழுது 'சிலேட்' என்று சொல்லாமல் கற்பலகை என்றே சொல்வார். 'பென்ஸிலை' எழுதுகோல் என்றும் 'ரூல்கழியை' உரூல்கழி என்றும் 'ரயில்' என்பதை இரயில் என்றும் 'பேனா'வை இறகெள்றுமே வழங்குவார். இப்படிப் பேசினால்தான் தம்மைத் தமிழ்க் கலவியிற் சிறந்தவராக யாவரும் கருதுவார் என்பதும் அவரது எண்ணம்: அங்ஙனமே அநேகர் எண்ணி நடப்பதும் உண்டு." (நல்லுரைக் கோவை I. பக். 102)

இலக்கணமாக ஒருவர் பேசுவது தவறுதானா? அதிலும் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சிமிக்க ஒருவருக்கு அது தவறாகத் தோன்றுமா? பிறர்க்கு எளிதில் விளங்கவேண்டும் என்பது கட்டாயமே! வேண்டத்தக்கதே! ஆனால் எடுத்துக் கொண்ட கற்பலகை, எழுதுகோல்—இவை அவ்வளவு புரியா தவையா? ரகரத்தினை முதலாகக்கொண்டு தமிழ்ச்சொல் வருவது இல்லை! வரின், அது வேற்றுச் சொல்லாகும். அச்சொல்லை வழங்குதல் வேண்டுமெனின் அ, இ, உ என்பவற்றை முதலெழுத் தாகக் கொண்டே எழுதவேண்டும் என்பது இலக்கண விதி. அதன்படி 'ரயிலை' 'இரயில்' என எழுதுவது தவறா? இராமன், இலக்குவன், இராமாயணம் என்பவற்றை 'ராமன்' 'லக்குவன்' 'ராமாயணம்' என்று கல்வியில் பெரியவர் குறியாமை குற்றம் தானே? எளிதில் புலப்படாத அல்லது பொருந்தாத குறை இவற்றில் என்ன உள்ளது?

'சிலேட்' என்பதைக் 'கற்பலகை' என்பதால் புலப்படாத குறை நேர்ந்துவிட்டதா? கல்லும் பலகையும் அறியாப் பொருள் களா? தமிழ் வழக்கில் இல்லாப் பொருள்களா? 'கல்லின்மேல் எழுத்தையும் 'சங்கப் பலகையையும்' நினைத்தால் 'கற்பலகை'யின் சிறப்பு நன்கு புலப்படுமே! பின் ஏன் அதனை மறுக்கவேண்டும்? ஊறிப்போன உணர்வுகள்—உள்ளிருக்கும் அழுத்தங்கள்— உரையாக வெளிப்பட்டன என்றுதானே கொள்ளவேண்டும்?

இப்படிப் பிளவுபட்டுக் கருத்துகளை வழங்கிய பெருமக்கள் தமிழுக்கு அளப்பரிய தொண்டு செய்தவர்கள்தாம்! தமிழரால் என்றும் நினைவுகூரத் தக்கவர்கள்தாம்! அவர்கள் உள்ளத்தில்

'தமிழ் ஒன்றே தமிழ், ஏனைய எம்மொழியும் பிறமொழியே' என்னும் எண்ணம் உண்டாகியிருந்திருந்தால், அவர்களே சிறந்த வழிகாட்டியாக இருந்திருப்பார்கள்!

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்"

என்பதுபோல் மறைமலையடிகளுக்குப் புகழ் சேருமாறு அவர்கள் தமிழே தமிழ் என்பதை மறந்தார்கள் போலும்! ஆங்கிலத்தைத் தமிழில் மொழியாக்கம் செய்ய விழைந்தவர் பாவலர் பாரதியார்! அக்கருத்துக்கு முரண்பட்டு எழுதியவர் பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையர். நம்ப முடிகின்றதா? எழுதிய எழுத்தை நம்பாமல் என்ன செய்வது?

பிறமொழிக் கலப்பின் குற்றத்தை நுனித்தாய்ந்த மறைமலையடிகள் 'தமிழிற் பிறமொழிக் கலப்பு' என்னும் கட்டுரையில் விளக்குகிறார்:

"தேனும் பலாச்சுளையும் கலந்து அருந்துவார்க்கு அவற்றிடையே முட்கள் விரவியிருந்து நாவிற் றைத்தால் அஃது எவ்வளவு துன்பத்தினையும் வெறுப்பினையும் தருமோ அது போலவே வேண்டா வழக்காய் உருவு திரியாமல் தமிழில் வரையப்படும் வேற்றுமொழிச் சொற்கள் உண்மைத் தமிழ் அறிஞர்க்குப் பெரியதொரு வருத்தத்தினையும் அருவருப்பினையும் விளைக்கின்றன. எவ்வகைப் பொருளையும் எத்தகைய கருத்தையும் தெரிவித்தற்கு எண்ணிறந்த தமிழ்ச்சொற்கள் இருப்பவும், அவற்றைப் புறந்தள்ளி மற்றைமொழிச் சொற்களை அதன்கட் கொண்டுவந்து புகுத்தலே ஒருபெருங் குற்றமாம்; அதன்மேலும், இயற்கைக்கு மாறாய் வருந்திச் சொல்லவேண்டும் அவ்வயல் மொழிச் சொற்களை இயற்கையொடொத்து மெல்லென நடக்குந் தமிழ்ச்சொற்களினிடையே சேர்த்துக் கூறுதல் அதனினும் பெரியதொரு குற்றமாம். அஃதல்லாமலும் வயிற்றிற்த இடப் பட்ட உணவுப் பொருள்கள் தமது உருவுதிரிந்து உடப்பிற்கு வேண்டும் பாலாக மாறாமல், அவை அங்ஙனமே வயிற்றினுட் கிடந்தால், அவை அவ்வுடப்பிற்குச் சிறிதும் பயன்படாமையோடு

அவ்வுடம்பினையும் பழுதுபடுத்துமன்றோ? அதுபோலவே, தமிழின் தன்மைக்கு ஏற்ப உருவு திரியாமல் எழுதப்படும் வடசொற்கள் முதலியனவும் பயன்படாது போதலொடு தமிழின் அழகையும் சிதைவுபடுத்தா நிற்கின்றன."

மறைமலையடிகளாரின் மொழிக்கொள்கைகள் இப்பகுதியான் நன்கு வெளிப்படுகின்றன. 'தனித்தமிழே தமிழ்' என்னும் ஊற்றமுடைய அடிகளார், வேற்றுமொழிச் சொற்கள் அறவே கலத்தல் கூடா என்றாரல்லர். வேற்றுமொழிச் சொற்களை வேண்டாவழக்காய்க் கலவற்க என்கிறார். 'சாலை' இருப்பவும் 'ரஸ்தாவும்' 'ரோடும்' வேண்டா! திருமணம் இருப்பவும் 'விவாகம்' 'கன்யாதானம்' 'மேர்யேஜ்' இன்னவை வேண்டா! வேண்டிய அளவும் வேண்டத்தக்க நற்றமிழ்ச் சொற்கள் இருப்பவும் அவற்றை ஒழித்துவிட்டு வேற்றுச் சொற்களைப் புகுத்துவதே வேண்டாவழக்காம் என்றாராம்.

இனி, வேற்றுச் சொற்களை வேண்டும் வழக்காகக் கலக்க நேரின் ஏற்கலாம். ஆனால் அக் கலப்பு, தமிழின் இயல்புக்கு ஏற்ப உருவு திரித்து அமைக்கப்பெற்றதாய் இருக்க வேண்டும் என்கிறார். இது மறைமலையடிகளார் தனிக்கோள் அன்று. முந்து நூலாசிரியர் தொல்காப்பியனார் ஆணைவழிக் குறிப்பாம். "வட சொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்பதே அக் குறிப்பாம்.

மேலை நாட்டில் இருந்து 'பைசைகிள்' வந்தது. 'பை சைகிள்' என்னும் பெயரொடு அஃது இறக்குமதியானாலும் தமிழ் நாட்டுப் புலமையர் 'ஈருருளி' என்றனர்; ஏன்? அவருக்கு முன்னரே ஆங்கிலச் சொல்லை வடமொழிச் சொல்லாய்ப் பெயர்த்தலே தமிழ்த் தொண்டும் தமிழ்க் கலைச் சொல்லாக்கமும் எனக் கொண்டிருந்தவர்கள் 'துவிச்சக்கர வண்டி' என்றிருந்தனர். அதனைப் பெயர்த்தே, 'ஈருருளி' யாக்கினர். ஆனால், அதன் பயன்பாட்டையும் இயற்பாட்டையும் உணர்ந்த பொதுமக்கள் 'மிதிவண்டி'யாக்கினர். இன்று மிதிவண்டி நிலைத்துவிட்டதல்லவா!

இரட்டு உடன் பிறந்தார் வானூர்தி கண்டனர். அவர்கள் 'ஏரோபிளேன்' எனப் பெயர் சூட்டினர். ஏரோபிளேன் ஆகவே உலகில் வலம் வந்தது. தமிழ்நாட்டார் 'ஆகாயக் கப்பல்' என்றனர்; 'ஆகாய விமானம்' என்றனர்; தனித்தமிழ் இலக்கிய ஆர்வலர் ஒருவர்க்கு 'விசும்பில் வலவன் ஏவா வானவூர்தி' என்னும் தொடர் நினைவில் முகிழ்த்திருக்கிறது! அவர் 'வானவூர்தி' என்னும் கலைச் சொல்லை எடுத்துத் தந்தார். தமிழுலகம் போற்றிக் காக்கின்றது!

இச் சொற்கள் தமிழில் படைத்த படைப்புகள். பெயர்ச் சொற்களை அப்படிப் பெயர்க்க முடியாதே. அதனைப் பெயர்ப்பின் பிறிது பிறிதாகிப் போமே! 'கிறிஸ்து' 'ஜான்' 'ஜோசப்' என்பவை திருமறையில் வரும் பெயர்கள். இவற்றைத் தனித்தமிழார்வலர் தமிழ் இயல்புக்கு ஏற்ப உருவு திரித்துக் 'கிறித்து' 'யோவான்' 'யோசேப்பு' என்றனர். இவ்வாறு உருவு திரித்துத் தமிழ் இயல்புக்கு ஏற்றவாறு எழுதுதல் மொழிக்காப்பாகும். இன்றேல் வேற்றுச் சொற்கள் புகுவதுடன் வேற்றுமொழி எழுத்துகளும் வரம்பு கடந்து புகுந்து புகுந்து காலஞ் செல்ல அவற்றின் வல்லாட்சியால் தமிழென ஒரு மொழி இல்லாமலே ஒழியும். கண்காணக் கன்னடமும், தெலுங்கும், துளுவும், மலையாளமுமாகத் தமிழ்மொழி மாறிச் சென்றிருத்தல் கண்டும், அறிவாளர்க்கு இன்னும் உணர்வு தோன்றவில்லையே! இப்பொழுது நாளிதழ்களில் வரும் கலப்பு, எழுத்துக் கலப்பு மட்டுமோ? சொல்லும் சொற்றொடரும் உரையாடலும் அப்படி அப்படியே அயன்மொழிச் சொற்களில் அயன்மொழி எழுத்துகளில்! அப்படி எழுதுவதுதான் 'அறிவாளித் தனம்' என்னும் செருக்கு வேறு! அப்படி எழுதினால் தான் உண்மை நிலை—தவறு தவறு—(யதார்த்தம், ரியலிசம்)— என்னும் வறட்டுத்தனம் வேறு' மொழியைக் கட்டிக்காக்க முப்பது அறிஞர்கள் தலைப்பட்டாலும், இப்படி மொழிக் கேடர் மூவர் போதும், அவர்கள் ஆக்கப்பணியை யெல்லாம் அழித்தொழிப்பதற்கு! பண்பாடு நாகரிகங்களைக் கெடுத்து எழுதுபவன் எவனோ அவனே புகழ் வாய்ந்த எழுத்தாளன் என்பது மட்டுமில்லாமல், மொழியியல்பை எவ்வளவு மிததியாகக் கெடுத்து எழுதுவானோ அவனே அவனினும் பெரிய எழுத்தாளன்

என்னும் நிலைமை உண்டாகிவிட்டது! தவத்திரு மறைமலையடிகள் தனித்தமிழ் இயக்கம் கண்டு மொழிஞாயிறு பாவாணர் அதனை ஆலமரமெனப் படர வளர்த்த பின்னர், இந்நாளை எழுத்தாளருள பலர் நிலை ஈது என்றால், "தமிழ்ப் புலமையர், தமிழ்ப் பேராசிரியர், தமிழக அரசு தமிழ் வளர்க்கும் அமைப்புகள் எல்லாம் எல்லாம் செயலற்றுக்கிடக்கின்றன; அல்லது அவ்வவற்றை அவ்வவை மோதித் தாக்கி முட்டிக்கொண்டிருக்கின்றன. பொதுக் கேடரை ஒழிக்காமல் தங்களைத் தாங்களே அழிக்கப்போரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என்பதே பொருளாம்.

தமிழைப் பாதுகாக்க வேண்டிய முறையைப் பரிந்து பரிந்து உருகி உருகி எழுதினார் மறைமலையடிகள். அவர்தம் **தனித்தமிழ் மாட்சி** என்னும் ஒரு கட்டுரையின் ஒரு பகுதி:

"தூய தமிழ்ச் சொற்களை ஒழித்து வடமொழிச் சொற்களைக் கொண்டுவந்து புகுத்தித் தனித்தமிழ்ச் சொற்களை வழங்காமல் தொலைப்பதுதானா நமது அருமைச் செந்தமிழ் மொழியை வளர்ப்பது? அறிவுடையீர், கூறுமின்கள்! இன்னும் இங்ஙனமே எத்தனையோ ஆயிரஞ் சொற்களை வடமொழி முதலான பிறமொழிகளினின்றும் கொண்டு வந்து அவற்றைத் தமிழில் புகுத்தி அதன் தூய தனிச் சொற்கள் ஒவ்வொன்றாக வழக்கு வீழ்ந்து போகுமாறு செய்வதுதானா தமிழையும் பிறமொழிகளையுங் கற்றவர் அதற்குச் செய்யும் உதவி? தான் பிடித்ததை எப்படியாவது நிலைநாட்டிவிட வேண்டுமென்று முன் வந்து தமிழ்மொழியைத் தொலைக்க வழி தேடுவதுதானா தமிழ் கற்று அதனாற் பிழைப்பவர் அதற்குச் செய்யும் நன்மை? தமிழையும் பிறமொழியையுங் கற்கக் கற்கத் தமிழ்மொழிச் சொற்கள் இவை அயல்மொழிச் சொற்கள் இவையென்று நன்குணர்ந்து தமிழில் ஏனையவற்றைக் கலவாமற் பேசுதல் எழுதுதலும் தமிழில் முன்னமே வழக்கு வீழ்ந்த சொற்களையும் திரும்ப எடுத்து வழங்க விடுதலும் அல்லவோ கற்றவர் அம்மொழியைப் பாதுகாத்து வளர்த்தற்குச் செய்யும் நன்முறையாகும்."

அடிகளார் வடமொழியை மட்டுமே வேற்றுமொழி—அயல் மொழி—எனக் கூறி அம் மொழிச் சொற்களைக் கலவாமல்

விலக்குமாறு வலியுறுத்தினாரேயன்றி, ஆங்கிலம் முதலிய வேற்று மொழிச் சொற்களையும் கலவாமல் விலக்கக் கூறினாரோ என்று வினவுவாரும் ஐயுறுவாரும் உளராகலாம். அடிகளார், ஆங்கிலச் சொற்களும் வடமொழிச் சொற்களைப் போலவே புகுதல் கூடாது என்று வலியுறுத்தினாரே யன்றி அதனை ஏற்றார் அல்லர்! அயல் மொழிக் கலவை கூடாது என்றால் ஆங்கிலம் மட்டும் அயல் மொழியுள் அடங்காதா?

'மேல் நாட்டில் இருந்து வந்து இத் தென்னாட்டில் விலையாகும் தெளிவான ஒருவகை மட்பாண்டத்தைக் 'கிளாசு' என்றுங் 'கோப்பை' என்றும் வழங்குகின்றனர்; 'கிளாசு' 'கோப்பை' என்னும் இச் சொற்கள் ஆங்கிலச் சொற்களின் திரிபுகளாகும்; இப் பாண்டங்கள் மேல்நாட்டில் செய்யப் பட்டனவாய்த் தமிழ்நாட்டிற்குப் புதியனவாய் இருத்தலால், இவற்றிற்குரிய ஆங்கிலச் சொற்களைத் தமிழர் தாமும் எடுத்தாளுதல் பொருத்தமேயாம்; இப் பாண்டங்களையுங்கூடத் தமிழறிவு மிக்கவர்கள் 'கண்ணாடிக் குவளை' 'பீங்கான் கிண்ணம்' என்று தமக்குரிய தமிழ்ச் சொற்களாலேயே வழங்குவர். 'எஞ்சின்' 'டிரெயின்', 'டிக்கெட்டு', 'டிராம்', 'ஸ்கூல்', 'கமிஷன் ஏஜெண்டு', 'ஷாப்பு', மார்க்கெட்டு', முதலான ஆங்கிலச் சொற்களைப் பொது மக்கள் விலக்கி, அவற்றிற்கு ஈடாக முறையே 'பொறி', 'வண்டித் தொடர்', 'சீட்டு', 'மின்சார வண்டி', 'பள்ளிக்கூடம்' 'தரகன்', 'கடை', 'அங்காடிக் கடை' முதலான தமிழ்ச் சொற்களையே இட்டு வழங்குவர். கல்வியறிவும் நாகரிகமும் வாய்ந்தவர்கள் இங்ஙனம் பிறநாட்டுச் சொற்களை எடுத்து வழங்க வேண்டிய இடங்களிலும் அவற்றிற்கு ஈடாகத் தமது மொழியிலுள்ள சொற்களையே நடைபெற விட்டு வாழ்வர். இவ்வாறு செய்தல் அவர்க்குள்ள முயற்சியின் திறத்தையும் நாகரிகச் சிறப்பினையும் தமது மொழியில் வைத்த பற்றினையும் வெளிப்படையாகக் காட்டுவதாகும்.''

இப் பகுதியால் கலைச் சொற்களாக வந்து வழங்குபவற்றையும் தமிழ்மொழி இயல்புக்குத் தக வழங்க வேண்டும் என்பதும் அவற்றைத் தமிழ்ச் சொற்களாகவே ஆக்கிக் கொள்ளுதல் கல்வியறிவும் நாகரிகமும் வாய்ந்த மக்கள் கடப்பாடாம் என்பதும் அடிகளார் கருத்தாதல் விளங்கும்.

## வடசொற் கலப்பு :

தொல் பழங்காலத்தில் தமிழ், (கலப்பற்றதாக—தூயதாக—) தனித்தமிழாகவே இருந்தது. உலக முதன்மொழி தமிழே எனின், அதனொடு பிறிதொருமொழி கலந்திருப்பதற்கு இடமும் இல்லையே! அத் தொல்பழங்கால நூல்களுள் ஒன்றேனும் நம்கையகத்துக் கிட்டாமையால் தொல்காப்பியமே நம் பழநூலாய் விளங்க நேர்ந்ததாம். தொல்காப்பியர் கண்ட முந்துநூல்களின் பெயர்கள் தாமும் நம்மால் அறியக்கூடவில்லை. அந்நூல்கள் தனித்தமிழ் நூல்களாக இருந்தனவேயாம் என்பது தொல்காப்பியத்தை நோக்கிய அளவானே புலப்படும்.

தொல்காப்பியர் காலத்திலோ அதற்குச் சற்று முன்னரோ ஆரியரும் தமிழரும் கலந்துறவாடும் நிலைமையுண்டாயிற்று. ஆரியர் கலந்துறவாடல் வகையால் தமிழில் சில சொற்கள் புகநேர்ந்தன. அம்மொழி ஒன்றே அக்காலத்தில் தமிழோடு கலப்புறும் வகையில் அணுக்கமுடையதாக இருந்தமையால் அச்சொல் தமிழில் புகத்தக்க நெறியையும் தொல்காப்பியர் வகுத்தார். அவ் வடமொழியாளர் அன்றியும், அயனாட்டார் சிலர் நெருக்கமும் தமிழர்க்குப் படிப்படியே உண்டாயிற்று. அவருள் 'யவனர்' என்பார், குறிப்பிடத்தக்கவர். யவனராவார், கிரேக்க நாட்டினர் என்க.

யவனர்களைப்பற்றிய குறிப்பு, தொகை நூல்களிலேயுண்டு; பாட்டிலும் உண்டு; சிலம்பு முதலியவற்றிலும் உண்டு. யவனர் இந்நாட்டுக்கு வணிகராக வந்தமையும், போரொடு வந்தமையும், நாடறியும் ஆர்வலராக வந்தமையும் வரலாற்றுச் செய்தி. யவனர் வடபுலத்தில் நாடமைத்துக் கொண்டனர் என்பதும் அறியத்தக்கதே.

> "யவனர் தந்த வினைமாண் நன்கலம்
> பொன்னொடு வந்து கறியொடு பெயரும்"

என்னும் அகப்பாட்டு (149) தமிழர்க்கும் யவனர்க்கும் இருந்த கடல் வாணிகத்தை விளக்கும்.

"வன்சொல் யவனர்ப் பிணித்து"

என்னும் பதிற்றுப் பத்துப் பதிகமும் (2),

"வன்சொல் யவனர் வளநா டாண்டு"

என்னும் சிலம்பும் (:141) யவனர்களால் வடபுலத்தில் ஆளப் பட்டுவந்த நாட்டைச் சேரர் அடப்படுத்திய செய்தியைக் குறிக்கும். யவனத் தச்சரும் இவண் வந்துறைந்தனர். ஆகலின், தமிழிலக்கியங்களில் 'யவனர்' பற்றிய செய்திகள் இடம் பெறலாயின.

கிரேக்க நாட்டினரைத் தமிழரே 'யவனர்' என்றனர். அப்பெயரைக் கிரேக்கரே வைத்துக்கொண்டது இல்லையாம். தமிழியலுக்கு ஏற்பத் தமிழ்நாட்டார் அவருக்கு வைத்த பெயரே அஃது என்க. இவ்வாறு பிறநாட்டவர் தொடர்பு ஏற்படுங்கால் அவர்தம் சொல்லும் கலத்தல் இயற்கையேயாம். ஆகலின் அவ்வாறு புகுந்த சொற்களையும் வடசொல்லுக்கு ஆசிரியர் தொல்காப்பியர் விதித்த விதியின்படியே அமைத்துக்கொள்ளுதல் முறைமையாம். இவ்வமைதியை இக்காலத்துப் புதிது புதிதாக வந்துசேரும் அயன்மொழிச் சொற்களுக்கும் அடைவாக்கிக் கொள்ளுதலும் முறைமையாம். ஆகலின் வடசொல் என்பதை, அயன்மொழிச் சொற்களுக்கு எல்லாம் அமைந்த ஒரு குறியீடாகக் கொள்ளுதல் சாலும்! பின்னூலார் கூறும், 'ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே' (நன்னூல் 358) என்பதை இவண் கருதிக்கொள்ளலாம்.

இனிச் செந்தமிழ் வழங்கிய நிலத்தைச் சூழவும் தமிழ்திரி மொழிகளும் வழங்கலாயின. 'மொழிபெயர் தேயம்' எனத் தொகை நூல்கள் குறிப்பன இத்தகு நிலங்கள் ஆகலாம். இவை தமிழொடு தொடர்புடையவாயினும் செந்தமிழ்ச் சொற்களாக அமைந்தனவல்லவாகலின் அவற்றின் வேறுபாடு விளங்கத் 'திசைசொற்கள்' என வழங்கப்பெற்றன எனக் கொள்ளலாம். "செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலத்தும், தங்குறிப்பினவே திசைச்சொற் கிளவி" என்பது திசைச் சொல்பற்றித் தொல் காப்பியர் கூறும் நூற்பா (883).

திசைச்சொற்கள் செந்தமிழில் இருந்து வேறுபட்டவையாய் இயலினும், எழுத்தமைப்பால் தமிழாகவே இருந்தன. இப்பொழுது நெல்லைத் தமிழும் சென்னைத் தமிழும் வேறுபட இயலினும் எழுத்து அமைதியால் ஒன்றுபட் டியலுதல் போன்றது அது. ஆகலின், "வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" என்று வடமொழி தமிழில் புகுதற்கு இலக்கணம் வகுத்த ஆசிரியர், திசைச்சொல்லின் எழுத்தைப்பற்றி ஒன்றும் கூறாராயினர். நிற்க.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களில் 991 அடிகளால் இயல்கின்றது. இதனுள் ஒரு சொல்தானும் வட சொல் இல்லை. சொல்லதிகாரம் 463 நூற்பாக்களில் 1056 அடி களால் இயல்கின்றது. இதனுள்ளும் வடசொல் ஒன்றுதானும் இல்லை. இறுதிக்கண் நிற்கும் பொருளதிகாரம் 664 நூற்பாக் களில் 1967 அடிகளால் இயல்கின்றது. ஆனால் இப் பொருளதி காரத்துள் வடசொற்கள் உண்டு. அச் சொற்கள் தாம் எத்தனை?

கரகம் (1570) காண்டிகை (1603) ஞாபகம் (1610) சாதி (1563) சூத்திரம் (1425) மூதானந்தம் (1025) வைசிகன் (1578) என்பனவே. இவற்றுள் பெரும்பாலனவும் மரபியலில் உள்ளன. ஆங்குப் பொருந்தாச் சூழ்ச்சிகள் பல நடந்துள்ளமை புலமையாளர்கள் பலரும் கண்டு வெளிப்படுத்தியவையே. முதன்முறையாக மர பியலைக் காண்பார்க்கும் இடைச் செருகல் இவை இவையெனப் பொள்ளெனப் புலப்படுதல் ஒருதலையாம். திட்டமிட்ட வேலை, என்னென்ன திருகுதல்களையெல்லாம் செய்யாது!

'ஆரியர் மிலேச்சர்' என்பது நிகண்டுப் பாடம்! அதனைப் பதிப் பித்தவர் கைச்சரக்காக வெளிப்பட்டது, 'அநாரியர் மிலேச்சர்' என்பது! எவ்வளவு எளிமையாக அறிவுக் கூர்ப்பு வேலை செய்து விட்டது! [1]காரியாரால் செய்யப் பெற்றது கணக்கதிகாரம் என்னும் நூல். ஆனால், 'புராரி அய்யர்' அதனைச் செய்ததாக 'இராக்ஷத ஸூ சித்திரை மீ' (1885) வெளிவந்த பதிப்பில் உள்ளது! அந்

1. புராரி என்னும் பாடமும் உண்டு. உரையிலும் 'புராரி' என்னும் பாடம் வருகின்றது.

நூற் சிறப்புப் பாயிரத்தில், 'புத்தன் புதல்வன் புராரி' என்பவர் நூல் செய்ததாக வருவதால், 'புராரி' என்று தானே இயற்றியோர் பெயர் போடவேண்டும்! 'புராரி அய்யர்' என எப்படி வந்தார்? இவற்றையும், இவைபோல்பவற்றையும் நோக்குவார் மரபியல் இடைச்செருகலை நன்கு உணர்வர். மரபியல் ஆய்வு தனியே வெளிப்படுமாகலின் ஈண்டு அதனை விரித்திலம்!

தொல்காப்பியர் பெயரையே 'திரணதூமாக்கினியா' ராக்கி அவர் தந்தையாரை 'ஜமதக்கினி' யாராக்கி வைக்க வல்லாரும், காப்பியக் குடியைக் 'காவ்ய கோத்திரம்' (கவியாகிய சுக்கிரனது வமிசம் எனக் காட்டவல்லாரும் வாய்த்த இம் மண்ணில், இடைச் செருகல்தானா அரிது' எத்தனை எத்தனை வெள்ளி பாடல்கள் துள்ளிவந்த மண்! எத்தனை எத்தனை கந்தியார் பாடல்கள் வந்தமைந்த மண்! பாரதியார் பாடிய 'மறவன் பாட்டு' வழங்கும் விடுபாட்டுக் காட்சியைக் கண்டாலே 'படித்த கூட்டம்' எதுவும் செய்யும் என்பது நன்ருகப் புலப்படுமே!

செந்தமிழ் வழக்கே செறியத் தனித்தமிழில் ஒப்பிலா இலக்கண நூல் யாத்த தொல்காப்பியனாரை, இவ்வாறு ஆரியப் படுத்திய சூழ்ச்சித்திறம் நகைப்புக்கும் வியப்புக்கும் உரியவாம். தொல்காப்பியப் பொருளதிகார மெய்ப்பாட்டியல் முதல்நூற் பாவுக்கு உரைவிரிக்கும் பேராசிரியர், ''நகைச்சுவைக்குப் பொருளாவன 'ஆரியர் கூறுந் தமிழும்' குருடரும் முடவரும் செல்லும் செலவும், பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந்தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன'' என்கிருர். அதற்கு உரைவிளக்கக் குறிப்பு வரையும் ''புன்னாலைக் கட்டுவன் தமிழ் வித்துவான் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்கள்'', ஆரியர்—வடமொழியாளராகிய ஆரிய தேசத்தவர். அவர் தமிழை எழுத்து நிரம்பக் கூறமாட்டாராதலின் அதுவும் நகைக்கு ஏதுவாயிற்று'' என்ருர்.

தமிழ் நாட்டார் நகைக்குமாறு பேசும் ஆரியத் தோன்றலாம் திரணதூமாக்கினியார் ஆரியச் சொற்கலப்பில்லாத் தூய செந்தமிழ் இலக்கண நூல் ஒன்றனை இயற்றினர் என்ருல், வானப் பூவை வந்தி (மலடி) மகன் கொய்தானும்; அதனைக் கண்ணொளி

யில்லான் கண்டானும்; மூங்கையன் அதற்குச் சான்று மொழிந்தானும்; அதனை முற்றும் செவிடன் கேட்டானும் என்பது போலவே ஆகும்.

ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகள் தமிழரோடு இரண்டறக் கலந்தும், தமக்கெனக் கொண்ட ஒரு நடையை விடாப்பிடியராகப் போற்றி வருபவர், தமிழ் எழுத்திலே எழுதிப் படித்தேனும் வட மொழி மந்திரமே ஓதுவேம் எனப் பிடிவாதமாக இருப்பவர், இந் நாட்டுக்கு வந்த தொடக்க நாளிலேயே செந்தமிழ் நடையில் செவ்விய இலக்கணம் செய்து மொழிநலம் காத்தனர் என்பது ஏற்கக் கூடுமோ? தொல்காப்பியர் வடமொழி வழிப்பட்டவரே எனின், 'வடவெழுத் தொரீஇ' எனவும் நூல்யாப்பரோ? வடக்கின் கண் வழங்கப்பெறும் மொழி வடமொழி என்பது உண்மையாகவும் இந்நாளில் 'கங்கை'யை ஒழுகவிடும் பகீரதனர் 'வடு அல் மொழி' வடமொழி; எத்தகைய குற்றமும் இல்லாத மொழி எனப் 'புத் தாய்வு' செய்து போற்றுகின்றார் என்றால், அந்நாள் திரணதூ மாக்கினியார் என்ன போடு போட்டிருப்பார்?

'சமதக்கினியார்', 'திரணதூமாக்கினியார்' என்று 'சரடு' விட்டவர்கள், பனம்பாரனர்க்கு எத்தகைய பழியை ஆக்கி யுள்ளனர். தொல்காப்பியப் பாயிரம் பாடிய அவர் 'சமதக்கினி யாரை'ச் சொல்லாமல்விட்டதும் 'திரணதூமாக்கினியார்' என்னும் பெயரை மறைத்ததும் ஆகிய குற்றங்களைச் செய்துள்ளார் என்று அவரைப் பழிக்கு ஆட்படுத்துகின்றனர் அல்லரோ!

தொல்காப்பியனர் தம்மைப்பற்றிய குறிப்பை வெளிப்படுத்து தற்கு நாணி ஒதுங்கினர் எனினும், பாயிரம் பாடுபவர் செய்யத் தக்க கடமை அஃதன்றோ? எடுத்த எடுப்பிலேயே, 'ஆக்கியோன் பெயர்' கூறுதல் அன்றோ பாயிரத்தின் இலக்கணம்! அவ்விலக் கணம் அக் காலத்தில்லை எனின் விடுக்க. பனம்பாரனர்க்கும் தொல்காப்பியனர்க்கும் ஆசிரியர் அகத்தியரேயாமாயின் அவர் பெயரையேனும் பாயிரத்தில் கூறியிருக்க வேண்டுமே! கூருமைக் கும் ஒரு கதை கூறி இல்லாத அகத்தியர்க்கும் பொல்லாத பழியை மாட்டிவைப்பார் நச்சினர்க்கினியர். அக் கதையே ஆசிரியர் இனத் துக்கும் மாணவர் இனத்துக்கும் மாரு வசை! தீராப்பழி! காட்டு

விலங்காண்டி வாழ்வில் கூடக் காணமுடியாத புல்லிய புனைவுகள்! ஆகலின் பின்னுள்ளோர் விரித்த விரிப்பும் திரித்த திரிப்புமே யல்லாமல் இப் புனைவில் உண்மையில்லையாம். இப்பொழுது அச்சிலே காணக்கிடைக்கும் 'பேரகத்தியத் திரட்டு' என்னும் நூலைப் பார்த்த அளவானே—'ஊறிப்போன பொய்' என்னும் உண்மை புலப்படுகின்றதே! நிற்க.

தொல்பழநாளில் ஆட்சி புரிந்த மூவேந்தர் பெயர்கள் எப்படித் தனித் தமிழாக இருந்தன! நிலந்தரு திருவிற்பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி இன்னன பாண்டியர் பெயர்கள்; சோழன் கரிகாற் பெருவளத்தான், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன், சோழன் நலங்கிள்ளி இன்னன சோழர் பெயர்கள். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன், சேரன் செல்வக் கடுங்கோவாழியாதன் இன்னன சேரர் பெயர்கள். வேள்பாரி, வல்வில் ஓரி, மலையமான் திருமுடிக்காரி இன்னன வேளிர் பெயர்கள். இடைக்கால பிற்கால வேந்தர்கள் குறுநில மன்னர்கள் பெயர்கள் என்னவாயின?

கோச்சடையன் ரணதீரன், சடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் பராக்கிரம பாண்டியன், இராசராச சோழன், இராசேந்திர சோழன், குலோத்துங்க சோழன் எனப் பாண்டியர் பெயரும் சோழர் பெயரும் மாறின. சேரர் ஆட்சியோ கேரளர் ஆட்சியாக மாறியது. பல்லவர்களோ வடமொழி வழிப்பட்டவர்கள். தமிழ்வேந்தர் நிலையே இப்படித் தலைகீழாக மாறிய பின்னர்ப் பல்லவரையும் பிறரையும் பற்றிக் கூறவேண்டுமோ? முழுமையாக வடமொழிப் பெயர் தாங்கியதுடன் அம் மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதே பிறவிப் பயனாகக் கொண்டனர். ஆகலின் இடைக்கால பிற்காலங்களில் வடமொழிக் கலப்பு வெள்ளமாகப் பெருகித் ததும்பலாயிற்று.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவன் தெள்ளாறெறிந்த நந்திவர்மப் பல்லவன் என்பான். நந்திக் கலம்பகத்தின் பாட்டுடைத் தலைவன் அவனே. பெருந்தேவனார் என்னும் புலவரைப் புரந்த வண்மையாளனும் அவனே. அப் பெருந்தேவனாரால்

பாடப்பெற்றது பாரத வெண்பா. முன்னும் பின்னும் சிதைவுற்ற அந்நூலின் 'உத்தியோக பருவ' முதல் வெண்பா,

> ''மாலென்ப தாம்பின்னை மால்வரையான் மால்விசும்பின்
> மாலின் புயல்காத்த மால்வண்ணன்—மாலரவப்
> பேரோத மேனியான் பேரோத நீர்கடைந்தான்
> பேரோத மேனியான் பேர்''

என்பது. இப் பாடலையடுத்தமைந்துள்ள பழைய உரைநடைப் பகுதி வருமாறு :

''ஆதிவேதமும், மகாலோகமும், அண்டரண்டமும், அவனி தலமும், வேத வியாகரணமுள்ளிட்ட நான்கு கலைகளும் நான் முகனோடுந் தனது திருநாபிக் கமலத்தே பிறப்பித்த பதுமநாபன், விக்கிரமமாயன், சக்கரபாணி, தேவதேவன், நாராயணசுவாமி ஸ்ரீபாதங்களை நமஸ்கரித்தோ மென்றவாறு''

பாடலின் போக்கென்ன? உரைநடையின் போக்கென்ன? ஒன்பதாம் நூற்றாண்டளவிலான இந் நூலுக்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டளவில் தோன்றிய உரைநடை விளக்கம் எப்படி மாறுபட்டுவிட்டது! மணற்சோற்றிலே அரிசியைத் தேடி எடுக்கும் முயற்சிபோலல்லவோ வடமொழிச் சொற்களின் ஊடே தமிழ்ச் சொல்லைத் தேடவேண்டியுள்ளது!

கலந்த கலவைக்குக் கலைப்பெயரொன்றும் படைத்துக் கவின்முடி சூட்டுமல்லவோ நடாத்தினர்? தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் செம்பாதியாக அமைக்கப்பெற்ற நடை மணிப்பவழ (மணிப் பிரவாளம்) நடையாம்! மணி, தமிழ்; ப்ரவாளம், வடமொழி: கலவை நடையை அதன் பெயரிலேயே காட்டிவிட்ட திறம் கைவந்த திறமேயன்றோ! மணியும் பவழமும் செறிந்த அணிகலம் போல அழகுநடையாம்! தமிழன்னையின் எழில் முகத்திலே வார்க்கப்பெற்ற அம்மைத்தழும்பு போன்ற நடைக்கு இப்படியோர் அழகிய பெயர்!

> ''பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
> பல்கோடி நூறாயிரம்

மல்லாண்ட திண்தோள் மணிவண் ணாவுன்
செவ்வடி செவ்வி திருக் காப்பு''

என்பது பெரியாழ்வார் பாடிய திருப்பல்லாண்டு. இப் பாடலில் ஒன்றேனும் வடசொல் உண்டோ? இது முதலாகக் கிளந்த நாலாயிரத் திருப்பனுவலுக்கு வாய்த்த முதல் விளக்க உரை ஆறுயிரப்படி. அதனை இயற்றியவர் திருக்குருகைப்பிரான் பிள்ளான். அவர் அன்று வைத்த 'மணிப்ரவாளத்,'தீ' முப்பத்தாருயிரப் படிவரை வளர்ந்தது. குருபரம்பரா பிரபாவத்து' த்ததும்பியது. சமணர்களது ஸ்ரீ புராணத்து விரிந்துகிடந்தது. தாயுமானவர், அருணகிரியார், வள்ளலார் ஆகியவர்களிடத்தும் ஆட்டமிட்டது!

"அன்பைப் பெருக்கியென தாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே''

"அன்பர் பணிசெய்யவெனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே''

என எளிமையாய் இனிமையாய் உள்ளம் உருகி ஊற்றெடுக்கப் பாடிய தாயுமானப் பெருந்தகையின்,

"நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
நிர் விஷய கைவல்ய மா''

எனத் தொடங்கும் பதினான்கு சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத் தத்தில் ஐந்தாறு தமிழ்ச் சொற்களை அரும்பாடுபட்டுத்தானே காணவேண்டியுள்ளது!

"உனைத்தி னந்தொழு திலனுன தியல்பினை
உரைத்தி லன்பல மலர்கொடு னடியிணை
உறப்ப ணிந்தில னொருதவ மிலனுன—தருள்மாரு''

எனப் பாடிய அருணகிரியார் தாமே,

"நாத விந்து கலாதி நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞானபண் டித சாமீ நமோநம—வெகுகோடி''

எனப் பாடினர்.

வள்ளலார் பாட்டிசைக்க வாயூறித் தேன்பிலிற்றுமே! "கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த குளிர் தருவே" என்பது முதலிய பாடல்களில் கொஞ்சும் தமிழ் திருவடிப்புகழ்ச்சியிலும் அருட்பெருஞ்சோதி அகவலிலும் செம் பாதிக்கு மேலும் வடமொழியாகிவிடுகின்றதே! இத்தகைய கலப் புத்தானே கற்றறிந்த தமிழரையும் தீரா அடிமையராய்த் திறவா விழியராய் இந்நாள்வரை வைத்துக் கொண்டுள்ளது?

தொல்காப்பியர் காலத்தும், பாட்டு தொகை யாத்த சங்கச் சான்றோர், திருவள்ளுவர் ஆகியோர் காலத்தும், விரல்விட்டு எண்ணத்தக்க அளவில் புகுந்த வடசொல், சிலப்பதிகார மணி மேகலை சிந்தாமணி சூளாமணி தேவாரம் நாலாயிரப்பனுவல் கம்ப ராமாயணம் வில்லிபாரதம் திருப்புகழ் என்பவற்றில் ஒன்றன் மேல் ஒன்றாய்ப் பெருகிப் படை படையாய்த் தடையறப் புகுந்தன. இந்நிலையில் வரலாற்றுப் புகழ்வாய்ந்த இடங்களின் பெயர்களுக் கெல்லாம் வடமொழிப் பெயர்சூட்டி வைத்தனர். திருக்கோயிலை யும் கோயிலில் குடிகொண்ட தெய்வப் பெயர்களையும், வழிபாட்டை யும் வடமொழி கொள்ளை கொள்ளையாய் வாரிக்கொண்டு வல்லாட்சி செய்யலாயிற்று; இந்நாள் வரை அவ்வாட்சியை விடாது தொடர்ந்து நடாத்தியும் வருகின்றது. 'கொண்டான் துணையிருந்தால் குதித்துக்குதித்து ஆடலாம்' என்பது பழமொழி! அந்நாள் அரசுகளை ஆரியம் தன் அடிமைப்படுத்திவிடவே அறிவாளரும் பிறரும் ஆட்டு மந்தையென அவர்வழி நின்றனர்; அவர் வழியே சென்றனர். அதன் விளைவே இந்நாளை அறி வாளருடன் அரசும் முனைந்தாலும் அகற்றமுடியாத அருநோயாய் வாட்டி வருகின்றது.

திருமறைக்காடு, 'வேதாரணியம்' ஆகியது; ஐயாறு 'பஞ்ச நதம்' ஆகியது. மயிலாடுதுறை 'மாயூர'மாய், குரங்காடுதுறை 'கபிஸ்தலமாய்' ஆகின. இடைமருது 'மத்தியார்ச்சுன'மாய், குடமூக்கு 'கும்பகோண'மாய் மாறின. அம்மட்டோ? தனித் தமிழ்ப் பெயர்களாலே குறிக்கப்பெற்றுப் பாடுபுகழ் அடைந்த இத் திருப் பெயர்கள்தாமும் வடமொழிச் சொற்களின் பெயர்ப்பென்றே பறையறைந்தனர். இன்றும் அதே பணியை விடாமல் செய்து வருகின்றனர்.

'நிலம்பக வீழ்ந்த சிலம்பாறு' 'நூபுரகங்கை' ஆக்கப்பெற்றது. தண்பொருநை, 'தாமிரவருணி' ஆக்கப்பெற்றது; யாழைப் பழித்த மொழியம்மை, 'வீணாகான விதூஷணி' ஆனாள்; அகல் நெடுங்கண்ணி 'விசாலாட்சி'யானாள்; செம்பொன்பள்ளியார் 'சுவர்ணபுரீசுவரர்' ஆனார்; ஆலங்காட்டடிகள் 'ஊர்த்துவ தாண்டவ'ரானார். இப்படி இப்படி வடமொழிப்படுத்திவிட்டமை யால் மொழிக்கேடு மட்டுமன்றி, தமிழ் வழிபாட்டுரிமையும் வட மொழிக்கே போயிற்று. அதனினும் கேடு, "வழிவழி வந்த உரிமை வடமொழி வழிபாட்டுரிமையே; தமிழில் மலர்வழிபாடு செய்தல் மரபுரிமைக்கேடே" என்னும் இறுமாப்பும் ஏக்கழுத்தமும் உண்டாகிவிட்டன. தமிழ் வழிபாட்டை அரசே நினைத்தும்கூட, அதனைத் தடைப்படுத்தி அறமன்றம் முறை வழங்கும் நிலைமை! கொடுமை! இப்படியொரு நிலைமை தன்னுரிமை மொழிக்கும் நாட்டுக்கும் வருமோ? வரவும், அம்மொழியுடையாரே மடிதட்டி மார்தட்டி வரவேற்று வழிவழி அடிமையராய் வாழ்வரோ? ஆனால் இவையெல்லாம் தமிழ்மண்ணில் தட்டின்றி நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன.

**ஆங்கிலக் கலப்பு :**

வடமொழியின் வல்லாட்சி இவ்வாறிருக்க, இந்நாள் 'கதைப் பாளர்' மொழிநடையோ மொழியை முடமாக்கி, முகத்தை வடு வாக்கி உருத்தெரிய ஒண்ணாவகையில் சிதைப்பதாகவே அமைந் துள்ளது!

சான்றாக ஓர் எழுத்தாளர்; இன்றைக்குப் புனைகதையுலகில் புகழ்க் கொடி நாட்டிவருபவர்; செயல் திறம்வாய்ந்த பொறியியல் அறிஞர்; நல்ல மூளைக்கூர்ப்பு; எழுத்தாற்றல்; சுவைத் திறம் எல்லாம் கூடியவர். பெண் பெயரைத் தமக்குப் புனைபெயராய் வைத்துக் கொண்டுள்ளவர்; பெயர் 'சுஜாதா'.

அவரைப் பற்றி ஒரு கேள்வி :

"ஒரே நேரத்தில் இத்தனை தொடர்கதைகளைச் சுவை குன்றாமல் எழுதும் சுஜாதாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

அதற்கு 'ஜுனியர்' பதில் :

"அவர் ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியர் என்றுதான் அறிந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. கம்ப்யூட்டர் எழுத்தாளர் என்பதை இப்போது உணருகிறேன்" (கல்கண்டு 9-9-82)

தாம் எழுத்தாளர் ஆகியது பற்றிச் சொல்கிறார் சுஜாதா :

"எழுத்துங்கறது ஒரு கலை. இந்தக் கலை எல்லோருக்கும் கைவந்துடறதில்லை. சிலர் ஸ்போர்ட்ல இன்ரஸ்ட்டா இருப்பாங்க. சிலர் பேசறதுல, சிலர் நடிக்கிறதுல, நடனத்துல, கைத்தொழில்ல. இப்படி ஒவ்வொரு துறையிலும் சிறப்பாகச் செய்யறவங்க இருக்காங்க.

'எழுத்தைப் பொறுத்தவரை சாதாரணமா எல்லோராலயும் எழுத முடியாது. அதுக்குன்னே பொறந்து வந்திருக்கணும் பாங்க. இரத்தத்தோட ஊறியிருக்கணும், பரம்பரையா எழுதறவங்களுக்குத்தான் எழுதவரும்னு இன்னும் சிலர் சொல்வாங்க.

"நீ என்ன பெரிய இவன்? ஒன்றுட்டம் டயம் கிடைச்சா நானும் எழுதுவேனுக்கும்" என்பார்கள் வேறு சிலர்.

என்னைக்கேட்டா, எழுத்தாளன் என்பவன் பெரிய 'இவன்' இல்லைதான். ஆனா அதுக்குன்னு ஆர்வம் திறமை, சாதுர்யம் எல்லாம் இருக்கிறவங்கதான் எழுத முடியும்னு நினைக்கிறேன்.

இந்தத் திறமை தானா வந்துடறதில்லை. நாமா வளர்த்துக்கறதுதான்.

என்னையே எடுத்துக்குங்க. நான் எழுத வந்ததே ஆக்ஸிடெண்டாதான். எனக்கு ஆரம்பகாலத்துல எழுதறதுல அவ்வளவு ஆர்வம் இருந்ததில்லை. படிக்கும்போதுகூடப் பாடமா இருந்த சில சிறுகதைகளை ரசிச்சுப் படிச்சு, நாமும் அதுபோல எழுதணும்னு நினைச்சிருக்கேன். ஆனா எழுதினதில்லை.

சொல்லப்போனா நான் தமிழ் படிச்சதே சமஸ்கிருதத்தையும் அந்த வாத்தியாரின் அடியையும் கண்டு பயந்துதான்!

(பூவாளி 5-9-82

கொச்சி முத்தமிழ்ச் சங்கத்தில் சுஜாதா பேசக் கேட்டு 'என். சி. மோகன்தாஸ்' எழுதிய சுஜாதா சொல்கிறார் என் பதில் வரும் ஒருபகுதி இது. 'சுஜாதா' எழுதுகிறார் பாருங்கள் :

'விடிவதற்குள் வா' என்பது கல்கியில் அவர் எழுதிவரும் தொடர்கதை. அதில் ஆறும் தொடரின் தொடக்கம்:

''ராசவல்லி புரத்துக்குப் பஸ் விசாரித்துக் கொண்டு மெயின் ரோடுக்கு வந்து அரைமணிநேரம் காத்திருந்தான். நாகர்கோயில் பஸ் 'மினிட்டுக்கு மினிட்டு' போகிறது என்று சொன்ன தெல்லாம் பொய்''
(கல்கி 5-9-82)

சாவியில் அவர் எழுதும் 'விருப்ப மில்லாத் திருப்பங்கள்' என்னும் தொடர்கதையின் எட்டாம் தொடர் ''என்னே வீட்டில விட்டுட்டு அம்மாவும் பெண்ணும் பார்ட்டிக்கோ ரிஸப்சனுக்கோ போயிட்டாங்க''
(சாவி. 5-9-82)

''வேண்டாம்! படுத்துக்கங்க. கூத்தடிக்காதிங்க. மேல பேசிஞ அறுவை ஜோக்காத் தள்ளுவேன். பழனிசாமிக்கு எதிர்ப்பதம் என்ன தெரியுமா?''

''நிமிஷா! நிமிஷா! நிமிஷா!

''பழனி டிட் நாட் ஸீ மி! மழை மேகம்?

''இந்த மூன்று நிமிஷாவில் ஏதோ நடக்கப் போவுது''

''மழை மேநாட் கம்'' என்று சிரித்தான்.

''யூ நோ எபவுத் ஷராம் மிராணி

''எஸ்

''தே கில் ஹிம்! வெரி பாட் மர்தர்''

இது சுஜாதா குமுதத்தில் எழுதிவரும் 'மூன்று நிமிஷம் கணேஷ்' என்னும் தொடர்கதையின் பதின்மூன்ரும் தொடரின் இடைப்பகுதிகள் இரண்டு. (குமுதம். 9-9-82) அறிவுக்கு

விருந்தாக அருமையான உத்திகளைக் கையாண்டு அறிவியலையும் கதையாக்கவல்ல சுஜாதா நடை இது!

கதைகளுள் பெரும்பாலனவும் பொழுதுபோக்குப் பயன் கருதி எழுதப்படுபவையே. படிப்பவரும் 'எடுத்தோம் முடித் தோம்' என்ற அளவில் ஓட்டமாகப் படித்து முடிக்கவே விரும்பு கின்றனர். கருத்து மிக்க கதையும், இலக்கியவளமாய் அமைந்த கதையும், மேற்போக்காகவும் பொழுது போக்காகவும் படிப்பவர் களால் விரும்பப்படுவது இல்லை. 'ஒரே போர்' 'ஒரு பாட்டில் தலைவலி மருந்து வேண்டும்', 'வேப்பங்காய்' 'வெண்டைக்காயும் விளக் கெண்ணெயும்' 'கடுக்காய்க் கசாயம்' இப்படி யெல்லாம் அக் கதையின் ஓரங்களில் 'மதிப்புரைகள் வரையும் படிப்பாளிகள் உளர். 'ஒரே குப்பை; தொடவேண்டாம்' என்றெழுதிப் பிறர்க்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளும் பலர்! இந் நிலையில் கதை சுவை யாகவும், எதிர்பார்ப்பும் திருப்பங்களும் உடையதாகவும் இருக்க வேண்டும் என்பதில் இரண்டு கருத்துகள் இருக்கமுடியா! எல்லாத் தரத்தாரும் எல்லாப்படிப்பாரும் எல்லா நிலையாரும் படிக்கும் பொதுப்பொருள் கதை ஆதலால் அஃதெளிமையாய் அமைதலைப் பற்றிக் கூற வேண்டியதே இல்லை. இவற்றைப் போற்றுவது போலவே எழுத்தாளி தன் தகுதியைப் போற்றிக் காத்தலும் கட்டாயம் வேண்டுமன்றோ!

எதைப் பொதுமக்கள் விரும்புகிறார்களோ அதைப்படைத் துத் தருவது எழுத்தாளன் கடமையாகாது. எதைப் பொதுமக்கள் விரும்ப வேண்டுமோ அதைப் படைத்துத் தருவதே தகுதியுடைய எழுத்தாளன் கடமை. இன்னும் சொன்னால், மொழியைக் கெடுக் காமல், நாட்டைக் கெடுக்காமல், பண்பாட்டைக் கெடுக்காமல், இவற்றைத் தன் எழுத்தாற்றலால் ஒரு படியாவது முன்னிருந்த நிலையினும் உயர்த்திக் காட்ட வல்லான் எவனோ அவனே எழுத் தாளன்; அவனே நாட்டின் முதுகெலும்பு போல்வான்!

ஆனால் நடப்பது என்ன? போட்டிபோட்டுக் கொண்டு கொச்சையாக எழுதுதல்! அருவருப்பாக எழுதுதல்! இளைய உள்ளங்களையும் ஏன் வளர்ந்தவர்களையும் கூட வரை துறை யின்றிக் கெடுத்தல்! மொழியைக் குற்றுயிராய்க் குலையுயிராய்

ஆக்கல்! இலக்கம் இலக்கமாக விற்கும் தாள்களின் இதழ்களின்-நூல்களின் நிலைமை இது!

இற்றைக் காலப் புனைகதைகளின் நடை பெரும் பாலனவும் எப்படி இருக்கின்றன? செந்தமிழைக் கண்ட கோடரியால் துண்டு துண்டாக வெட்டிக் குதறுபவை! வடமொழி புகுத்தப் பட்ட அளவினைக் காட்டிலும் வரிந்து கட்டிக்கொண்டு வன் கொடுமையாய்த் திணிக்கும் ஆங்கிலக் கலப்பால் செந்தமிழ் மொழி விரைவில் 'சந்தை மொழி'யாகி விடக் கெடுப்பவை. 'மொழி நலம்' நாடுவோர் அனைவரும் சிந்தித்து ஒரு முடிவு கட்டியாக வேண்டிய நெருக்கடி நிலை இது என்பது தகும்.

காலச் சூழலுக்கு ஏற்ப மொழி கட்டாயம் வளர வேண்டுவதே பழையன கழிதலும் புதுவன புகுதலும் மொழிநலத்திற்கு வேண்டுவனவே. ஆனால் மொழியை அழித்து அலங்கோலமாக்கிக் கொண்டு நான் மொழித் தொண்டு செய்கிறேன் என்பது மயிலின் கொண்டையை அறுத்து அதற்கு ஊட்டி, அதனை வளர்க்கிறேன் என்பது போன்றதாம்.

கதை எழுத்தாளர்கள் ஒன்றை உணர்ந்து பார்க்க வேண்டாவா? குயவனுக்கு ஆறுமாத வேலை; தடிகாரனுக்கு அரை நொடி வேலை! மொழிக்கட்டுக் கோப்பு எத்தனை எத்தனை காலங் காலமாகக் காக்கப்பட்டு வருகின்றது. அதனைக் கொச்சைப் படுத்திக் கெடுப்பதுதான் பிறவிப் பயனா? பட்டமரம் தளிர்த்தாலும் தளிர்க்கும்; பாழ்படுத்தப்பட்ட மொழி, தடமும் இல்லாமல் அழிந்துபோகுமே! நல்ல தாய் பெற்ற பிள்ளை தன் தாய்க்குக் கேடு சூழான்! தாய்மொழிக்குக் கேடு சூழான்! தாய் நாட்டுக்கும் கேடு சூழான்! இது வள்ளுவர் ஆணை! "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப் படும்" என்பது அவர் வாய்மொழி!

ஆங்கிலத்தைத் தமிழ் எழுத்திலே எழுதியோ, ஆங்கில எழுத்திலேயே பத்தி பத்தியாக எழுதியோ பக்கம் நிரப்பும் தமிழ் எழுத்தாளர்கள் பெருமனங்கொண்டு தங்கள் படைப்புகளை ஆங்கிலத்திலேயே எழுதிவிடலாமே! ஆங்கிலந்தான் உலக

மொழி ஆயிற்றே! அப்படி உலகப் புகழ் பெறுவதை விடுத்துக் குறுகிய தமிழ் நாட்டு எல்லைக்குள் தம் பெயரைக் குறுக்கி வைத்துக் கொள்வானேன்? தமிழகமும் இத்தகையவரால் அடையத்தக்க அரும்புகழையும் இழக்க வேண்டுவது இல்லையே! எப்பாலும் நலமாவதை விடுத்துத் தப்பான வழியில் உண்மை—நடைமுறை—ரீயலிசம்—எதார்த்தம்—என்று ஏன் போர்வை போர்த்துத் தமிழைக் கெடுக்க வேண்டும்? புத்தெழுத்தாளர் வீழ்ச்சி நடையால் நன்றாக எழுதியவர்களும் வீழ்ந்து வீழ்ந்து தாழ்ந்து சரிகிறார்களே! முன்னே புலவர் ஒருவர் வருந்திப் பாடினார் :

> ''குட்டுதற்கோ பிள்ளைப்பாண் டியனிங் கில்லை
> குறும்பியளவாக்காதைக் குடைந்து தோண்டி
> எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி யில்லை
> இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு
> வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்த னில்லை
> விளையாட்டாய்க் கவிதைகளை விரைந்து பாடித்
> தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைக ளுண்டு
> தேசமெங்கும் புலவரெனத் திரிய லாமே''

என்று அவர் பாடிய பாட்டில் 'கவிதை'யைக் 'கதை'யாக்கி, 'புலவரை' 'எழுத்தாள'ராக்கி மாற்றிக்கொண்டால் சரியாக இருக்கும். ஆனால், மக்களாட்சியில் நடக்கும் கதையா அது?

கள்ளக் கடத்தல், கலப்படம் இவற்றைத் தடுக்க எத்தனை எத்தனை சட்டங்கள்! தடுப்புக்காவல் நிலையங்கள்! காவல் அலுவலர்கள்! மொழிக்கு அழிவு சூழ்வாரைத் தடுக்க ஓர் அமைப்பு உண்டோ? 'திரைப்படத் தணிக்கை' என ஒன்று உள்ள அளவில்கூட 'மொழித் தணிக்கை' இல்லையே! அரசுக்கு என்று உறைக்குமோ? அறிவாளர்க்கும் நாட்டு நலனில் அக்கறை உடையவர்க்கும் என்று உறைக்குமோ? தனியார் மானக் கேட்டைத் தடுக்கச் சட்டம் இருப்பது போல, மொழியின் மானக் கேட்டைத் தடுக்கச் சட்டம் என்று வருமோ?

''நம்முடைய சட்ட அமைப்பில் சட்டங்கள் உரிமைகள் வாணிகங்கள் முதலியவற்றைக் காக்க மேற்பார்வையாளர்

நியமிக்க விதி இருக்கின்றது. அங்ஙனமே வேற்றுமொழிச் சொற்கள் நம்மொழியில் வந்து கலவாமல் இருக்குமாறு காக்க மேற்பார்வையாளர் நியமிக்கவும் விதிவேண்டும''

இதனைத் தமிழ்ப்பற்றுடைய ஒருவர் கூறினரோ? ஆங்கில மொழிவல்லார், அவ் வாங்கில மொழிக் காவலுக்குக் கூறினர். இந்த இருபதாம் நூற்றாண்டில் கூறினர் அல்லர். 1711 இல் கூறினர். கூறியவர் அடிசனர். கேம்பெல் என்னும் ஆங்கில அறிஞர் ''பிறதுறைகளால் அழிவதைவிட வேற்றுமொழிச் சொற்களால் அழிவது நம் மொழிக்குரிய பெரிய துன்பம்'' என்றார். (பழந்தமிழ். 233) தமிழ்ப்பற்றாளர் ஆர்வலர்கள்மேல் 'பாய்ந்துவிழும்' பரந்தமனப் பெருமக்கள்(!) இவற்றை எண்ணிப் பார்க்க வேண்டுமே!

**தமிழ் எழுத்து :**

''தமிழ் எழுத்துகளா? இருபதா? முப்பதா? இருநூற்று நாற்பத்தேழு எழுத்துகள்! தட்டச்சுக்கு என்ன பாடு? சுருக்கெழுத்துக்கும்தான் என்ன சிக்கல்! ஏன், அச்சுப்போடுதற்குக் கூட எவ்வளவு இடர்ப்பாடு! இக்கால அறிவியல் வளர்ச்சிக்குத் தக்க வகையில் உதவும்படியாகத் தமிழ் எழுத்து அமையவில்லை!'' இப்படி இப்படி—குறைமொழிவார் பலர்: நிறைகாணப் புதுப்புது முயற்சி செய்வாரும் சிலர். குறை கூறிவிட்டாலே போதுமெனக் குளிர்ந்துகொண்டிருப்பவர்களும் உளர்.

தமிழ் எழுத்துகள் ஆங்கிலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்க மிகுதி தாம். ஆனால் அவ்வொன்றனோடு மட்டும் ஒப்பிட்டு ஒரு முடிவுக்கு வருவானேன்? இன்றைய இந்திய ஆட்சிமொழியாகவுள்ள இந்தி என்ன இருபத்தைந்து எழுத்தா? அதன் பாட்டியாம் வட மொழி என்ன இருபது எழுத்தா? சீனமொழியோ சப்பான் மொழியோ விரல்விட்டு எண்ணும் எழுத்துகளைக் கொண்டோ உள்ளன? ஏன் மற்றைமொழிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன?

இந்தி மொழியே இந்திய மொழியாக ஏறத்தாழ ஆகி விட்டது! என்றோ இல்லை; இன்றே அந்த நிலைக்கு வந்து

விட்டது! எழுத்துப் பெருக்கம் அதற்கு ஆட்சிமொழியாகத் தடையாகிவிட வில்லையே! ஏன்? அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது. 'இந்தியே இந்தியா' என்னும் முனைப்பு இருக்கிறது! படை ஏவிக்கூடத் தடைசெய்வாரைத் தகர்க்க வேண்டுமெனும் 'தடித்த உணர்ச்சி' இருக்கிறது. இயலும் வகையிலெல்லாம் நயத்தாலும் அச்சுறுத்தலாலும் பணத்தாலும் பதவியாலும் பரப்ப முடிகிறது! எழுத்துச் சிக்கல் அங்கே இல்லை! இங்கே அடிப்படையே 'ஐயோ' என்றிருக்கிறதே!

ஆங்கில எழுத்து இருபத்தாறு என்கிறோம்! இருபத்தாறு தாமா? பெரிய எழுத்து, சின்ன எழுத்து, சரிவெழுத்து என ஒவ்வோர் எழுத்தும் மூவகையாகி விடவில்லையா! சரிவெழுத்தை விடுத்தாலும் பெரிய எழுத்தும் சின்ன எழுத்தும் கட்டாயம் தட்டச்சிலும் வேண்டும்: அச்சிலும் வேண்டுமே! 26 என்பது ஐம்பத்திரண்டாகிவிட வில்லையா?

ஒவ்வொரு மொழியின் அமைப்பிலும் சிலவகையால் ஒப்புமையும், சில வகையால் வேற்றுமையும் உண்டு. முற்றிலும் முரண்பட்ட மொழிகளிலும் கூடச் சில இணைப்புகள் இருக்கும். எனினும், மொழிகளுக்குள் ஒரு பொது வேறுபாடு உண்டு; அது புணர்ப்பு மொழி, தனிப்பு மொழி என்பது. தமிழ், புணர்ப்பு மொழி; ஆங்கிலம், தனிப்புமொழி. தமிழில் உள்ள மெய்யெழுத்தும் உயிரெழுத்தும் கூடி உயிர்மெய்யெழுத்தாகும். உயிர் என்றும் மெய்யென்றும் இருவகையாம் எழுத்துகளின் புணர்ப்பால் உயிர் மெய்யென்னும் ஒருசார்பெழுத்துத் தோன்றும். இச் சார்பெழுத்து களை எண்ணியே 247 எழுத்து என்கின்றனர். உயிர்-12; மெய்-18; உயிர்மெய்-216, ஆய்தம்-1; ஆக-247 என்பது கணக்கு. ஆனல் உண்மை என்ன?

உயிரெழுத்து 12; மெய்யெழுத்து 18; ஆய்த வெழுத்து!; ஆக-31 எழுத்தென்றே கொள்ள வேண்டும். குற்றியலுகரம், குற்றியலிகரம் என்பவை இன்று தனிவடிவம் பெறுபவை அல்ல. ஒலியளவால் குறுகுவனவேயாம். ஆகலின் எழுத்து முப்பத் தொன்றே.

எழுத்து எண்ணிக்கை தமிழில் கூடினாலும் புணர்ப்பு மொழியாதலால் ஈரெழுத்து ஒரெழுத்தாகச் சுருங்கும். ஆங்கிலம் தனிப்பு மொழியாதலால் ஓரெழுத்து ஈரெழுத்தாகவும் மூவெழுத்தாகவும் விரியும்!

'முருகன்' எனத் தமிழில் நான்கு எழுத்தால் எழுதிவிடலாம். அதற்குப் புணர்ப்புமொழி வாய்ப்பாகின்றது. ஆங்கிலத்தில் ஏழு எழுத்து வேண்டும்; MURUGAN. உயிர்மெய்யென ஒரெழுத்தின்மையால் முன் மூன்று உயிர்மெய்யெழுத்துகளையும் ஆறெழுத்தாக்க நேர்ந்தது. மெய்யெழுத்துமட்டும் ஒன்றாக நின்றது. தமிழ்மொழி இயற்கை இது; ஆங்கிலமொழி அமைப்பு அது!

தமிழில் எழுத்தைக்கூட்டிச் சொல்லிய அளவானே சொல் வந்துவிடும். விரைந்து எழுத்தைப் படிக்கும் குழந்தைகள் ஒலிப்பைக் கேட்டால் எழுத்தே சொல்லாகிவிடுதல் தெளிவாகப் புலப்படும். அ-ப்-பா-அப்பா; அ-ம்-மா-அம்மா; என்றாலே ஒழுங்காகிவிடுகிறது. ஆங்கிலத்தில் அப்படிப் படிக்கமுடியுமா? எழுத்தின் பெயரைச் சொல்லிய முறையால் சொல்லாகிவிடுவது இல்லையே! எழுத்துமுறை வேறு; சொன்முறை வேறுதாமே!

எம் ஒ றி எச் இ ஆர் (MOTHER) என்று எழுத்துக்கூட்டி 'மதர்' என்றல்லவோ சொல்லைச் சொல்ல வேண்டியுள்ளது. எழுத்துக்கும் சொல்லுக்கும் ஒலிப்புமுறை ஒத்துவருகின்றதா? வருவதில்லையே என்று அவர்கள் ஒன்றுக்கும் பற்றாத மொழி—வளர்ச்சிக்கு ஒத்துவராத மொழி என்று ஒதுக்கிப்போட்டார்கள்? உலக மொழியாக்கிவிட்டார்களே!

Shakespeare என்னும் சொல்லின் இறுதியில் உள்ள 'e' என்னும் எழுத்தை ஒலிப்பது இல்லை. அவ்வெழுத்து அச் சொல்லில் இருக்கவேண்டியதும் இல்லை என்று ஆங்கிலப் பேரறிஞர் பெர்னாட்சா என்ன தலைகீழாக நின்றார்! தாம் எழுதுவதில் எல்லாம் 'e' யை விலக்கித்தானே எழுதினார்? ஆங்கில உலகம் கேட்டதா? 'e' யை அசைக்கமுடியவில்லையே! ஆனால் இங்கேயாகட்டும் 'தடியெடுத்தவரெல்லாம் தண்டல்' செய்ய வந்துவிடுவாரே!

நாம் எது ஆங்கிலமொழிக்குக் குறை எனக் காணுகிறோமோ தமிழ்மொழிக்கு நிறை எனக் காணுகிறோமோ—அதையே அசைக்கவும், ஒரு முயற்சி நடைபெறுகிறது; இன்னும் ஓய வில்லை. நடந்துகொண்டுதான் இருக்கிறது! அவரும் அரிய பொறுப்பில் இருந்துகொண்டு—தமிழ் வளர்ச்சித்துறை இயக்கு நராக இருந்துகொண்டு—இத்திருப்பணியில் ஈடுபட்டார்! அவர் கொண்டல் மகாதேவனார். முருகனை, 'முருகன்' என்று எழுதக் கூடாது. 'ம் உ ர் உ க் அன்' என்று எழுதவேண்டும். உயிர் மெய் யென ஒன்றை ஒழித்துவிட்டால் எழுத்தெண்ணிக்கை சுருங்கி விடும்! அறிவியல் வளர்ச்சிமிக்க இக்காலத்திற்கு ஏற்ற எழுத்துச் சீர்திருத்தம் ஈதே என்றார்; எழுதி எழுதித் தள்ளினார்; மேடை களிலும் பொழிந்தார். எழுத்தைத்தான் வார்ப்படம் செய்வார்கள். எழுத்து ஒலியையும், ஒலியால் ஆகிய மொழியையும் வார்ப்படம் செய்வதே சீர்திருத்தம் எனக் கொண்ட கொள்கை ஈது! இருக்கும் அமைப்பில் எழுத்தைச் சுருக்கிக்காட்ட—பயன் பாட்டைப் பெருக்க—வழியென்ன என்பதை ஆய்வதை விடுத்து—அடியோடேயே அழித்துப்போட்டு ஆக்கம் சூழ்வாராய்க் காட்டும் வேலை ஈதாம்!

ஓரிடத்திலே புதிதாக அணையொன்று கட்டவேண்டும் என்று அரசு திட்டமிட்டால் அவ்விடத்தின் ஆய்வுக்கு அரசு எவரை அனுப்பும்? எவரை அனுப்பவேண்டும்? தேர்ச்சிமிக்க பொறியருள் தேர்ந்தெடுத்த சிலரை ஒரு குழுவாக அமைத்துத் திட்டமிட்டுத்தருமாறு அல்லவோ அரசு அனுப்புகின்றது! இலக்கியத்தில் தேர்ந்தவர் இவர்; இவரை அனுப்புவோம் என்று அனுப்புகிறது?

ஐந்தாண்டுத் திட்டம் வகுத்துத் தருவதற்குப் பொருளியல் துறையில் வல்லாரைத் தேர்ந்து ஒரு குழுவாக அமைத்து அல்லவோ செயலாற்ற வைக்கின்றது. வரலாற்றுப் பேராசிரியர் ஒருவரையோ நடனக்கலைவல்ல ஒருவரையோ தேர்வதுண்டா? அவ்வத்துறையறிவு மீக்கூர்ந்தார்க்கல்லவோ அவ்வத்துறைத் திட்டங்களை வரையறுக்க முடியும்? வள்ளுவர் வகுத்த 'வினை செயல் வகை'யை நோக்கவேண்டுமே! அதில் வரும்,

"செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்"

என்பதனையேனும் எண்ணிச் செய்யவேண்டுமே!

எவ்வெவரும் மனம்போன போக்கிலெல்லாம் மொழியைக் கெடுத்துத் தொலைக்கலாம் என்பதுபோலச், சீர்திருத்தம் என்னும் பேர் சொல்லியும் கெடுக்கலாம்! மொழிச் சீர்திருததம் வேணடுமா? எழுத்துச் சீர்திருத்தம் வேணடுமா? கலைச் சொல்லாக்கம் வேண்டுமா? துறை நூல்கள் இயற்ற வேண்டுமா? மொழித்துறையையும் அவ்வத்துறையையுமே தம் முழுவாழ் வாக்கிகொண்டிருப்பவரை விடுத்து, அரசியல் செல்வாக்கு உடையார், குமுகாயச் சீர்திருத்தத்திறவோர், பதவிப்பேறு வாய்த்தவர், மொழிப்பற்று இல்லார், மொழிப்பகைவர் இன்னவர் பொறுப்பில் அவற்றை விடுவது அடுததுக் கெடுப்பதற்குச் செய்யும் வழியேயன்றி, எடுத்து ஏற்றமாக்குதற்குரிய வழியன்றாம்! தமிழ் ஆட்சிமொழி செவ்விதாக நடையுறுத்தப் பெறுகிறதா என்பதறகு மேலாண்மைப் பொறுப்பாளியாகத் தமிழை அறியாதவர் இருந்தால் ஆட்சிமொழித் திட்டத்தைக் கைகழுவி விட வேறொருவர் வேண்டுவது இல்லையே! ஆதலால், மொழியை வேடிக்கைப் பொருளாக்கி விரைவுக்கோலத்தில் 'அறிச்சாட்டம்' காட்டிவிடுதல் வழிவழிக்கேடாகவே அமையும்! மொழிப்பணியை வாணவேடிக்கை காட்டும் விளையாட்டுப் பொருளாக்கிவிடுதல் 'ஏதங்கொண்டு ஊதியம் போகவிடலாகவே' முடியும்!

தமிழில் உயிர் எழுத்து, மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என்பவற்றில் ஈகாரம் ஒழிய ஒரு சீர்திருத்தமும் செய்ய வேண்டியது இல்லை. சீர்திருத்தும் குறைபாடு உடையவாக அவை அமையவில்லை. உயிர்மெய்யெழுத்தில் தகுதியான சில மாற்றங்களைச் செய்யலாம். 'பெரியார் எழுத்து' என்று இந்நாளில் சொல்லப் பெறும் 'சீர்திருத்த எழுத்து' பற்றிச் சிலவற்றைக் கருத வேண்டும்.

'ஆ'வரிசையில் வரும் உயிர்மெய்யெழுத்துகள் அதற்கு அடையாளமாக 'கால்' ஒன்றைப் பெற்றன. வாயிற் கால்

அமைப்பைப் பார்த்தவர்களுக்குக் 'கால்' என்பதன் குறியீடு நன்கு விளங்கக் கூடியது. 'கால்' இல்லாமல் வேறுவகைக் குறியீடு பெறும் எழுத்துகள் மூன்றேயாம். அவை 'ணு, ரு, னு' என்பன. இம் மூன்றையும் 'ணா, றா, னா' என அமைத்து ஓர் ஒழுங்குபடுத்துவதில் சிக்கல் ஒன்றும் நேர்ந்துவிடாது. மொழி யியல்பும் கெட்டுப்போகாது. ஒரு நெறி முறைப் படுத்தியதாகவே அமையும்.

இகர ஈகார உயிர் மெய்யெழுத்துகளில் மாற்றுதற்கு ஒன்று மில்லை. உயிர் இகரத்தைச் சுழித்து 'ஈ'காரம் ஆக்குதல் ஒழுங் காகும். அஃது உயிரெழுத்துத் திருத்தமேயன்றி உயிர்மெய்யெழுத் துத் திருத்தமன்றாம்.

உகர ஊகார உயிர்மெய்யெழுத்துகளைச் சீர்திருத்துவோம் எனக் கை வைத்தால் தமிழ் ஒரு புதுமொழியாகப் போய்விடல் உறுதி. அங்கே எழுத்துச் சுருக்கம் நாடி என்ன செய்தாலும் மொழியியல வடிவு முற்றிலும் மாறியே தீரும் என்பது உறுதி.

எகர ஏகார உயிர்மெய் வரிசையில் கைவைத்துச் சீர் செய் தற்கு ஒன்றுமே இல்லை. செம்மையாகவே அமைந்துள்ளது.

'ஐ' கார உயிர்மெய் வரிசை ஆய்வுக் குரியதேயாம். கை, ஙை, சை, ஞை, டை, தை, நை, பை, மை, யை, ரை, வை, ழை,- றை,- என்பன முறையாகவே அமைந்துள்ளன. இவற்றை ஒழிந்து வரும் ணை, லை, ளை, னை, என்பனவற்றை மற்றைப் பதினான்கு எழுத்துகளும் பெற்றுள்ள இரட்டைச் சுழி அடையாளம் இட்டு எழுதுதல் ஏற்கக் கூடியதே. (ணை, லை, ளை, னை.)

மேலே குறிப்பிட்ட கை முதல் பதினான்கு எழுத்துகளில் ஞ, வ என்பவை சிறு சுழியும் அரைச் சுழியுமாகத் தொடங்கு பவை. எஞ்சிய பன்னீரெழுத்துகளும் வளைவும் சுழியும் வட்டமும் இல்லாதவை. ண, ல, ள, ன என்பவையோ ஒரு சுழி, இரு சுழி முச்சுழிகளைக் கொண்டவை! இச் சுழி யெழுத்துகளின் முன்னே இணைச்சுழி ஒன்றும் சேருமாயின் மூன்றாய் நான்காய் ஐந்தாய்ச்

சுழிகள் ஆகிவிடுமல்லவோ! ஆகலின் ஐகார அடையாளமாம் இணைச் சுழிகளை, எழுத்துடன் இணைத்து ஒரு சுழியை ஏற்றியமைத்து ஒரு சுழியை இல்லாமல் குறைத்துக்கொண்டனர். இந்த இணைப்பாக்க முயற்சியும் ஒரே காலத்தில் திட்டமிட்டு ஒரே வகையாய் நடத்தப்பட்டன அல்ல. சிலர் துணையெழுத்தை இணைத்து எழுதினர்; [1]சிலர் பிரித்தேயும் எழுதினர். படிப்படியே இணைப்பு நிலைபெற்று விட்டது! அச்சுக்கலை அதனை உறுதிப் படுத்தியும்விட்டது.

இந் நான்கு எழுத்துகளையும் ணை, லை, ளை, னை என எழுதுவதால் மொழியியல் மாறிவிடாது. இடைக்காலத்தே ஏற்பட்ட மாற்றத்தை விலக்கி முந்து நிலைக்கு அமைத்ததாகவே ஆகும்.

ஒகர ஓகார உயிர்மெய்களில் மூன்று எழுத்துகளே மாற்றம் செய்ய வேண்டியவை. ணொ, ணோ (ணொ, ணோ) றொ, றோ (றொ, றோ) னொ, னோ (னொ, னோ) என்பவை அவை.

ஔகாரம் உள்ளவாறே அமையும்.

இனி ஐ ஔ என்னும் எழுத்துகள் இரண்டும் வேண்டுவன வல்ல என்றும் 'அய், அவ்' என்றே எழுதிவிடலாம் என்றும் கூறுவாரும் எழுதுவாரும் உளர். சில இடங்களில் போலியாக வரக்கூடுமேயன்றி எழுத்தையே அகற்றிவிடுவது என்பது அடாது. அவ் விரண்டை ஒழிப்பதால் பெறும் பயன் என்ன? ஓரெழுத்தை இரண்டெழுத்தாக்கவா? முப்பத்தாறு எழுத்துகளையும் அவை வரும் சொற்களையும் குழப்பவா?

ஐ என்னும் எழுத்து ஓரெழுத்து ஒருமொழியன்றோ! அழகு, ஐந்து, அண்ணன், தலைவன், அரசன், ஈளை எனப் பல பொருள்கள். 'ஐயை தலைவி, இறைவி, அழகி எனப் பல பொருள்

---

1. விக்கிரமாதித்திய வரகுணர் செப்பேடு ஒன்றில் 'பதினைங்கல வித்துப்பாடு', 'அலைக்கரையும் புலையும்' இதநொடு (இதனொடு) என்னும் தொடர்கள் உள (கவிமணியின் உரைமணிகள்-சாசன ஆராய்ச்சி 108-9)

தரும் சொல். ஐ என்பது இரண்டாம் வேற்றுமை உருபு. இவ் விடங்களிலெல்லாம் 'ஐ' என்பதை அகற்றி 'அய்' என அமைத்தால் அப்பொருள் தருமோ? பனையை என்னும் இரண்டாம் வேற்றுமை விரியை 'பனய்யய்' என்றல்லவோ எழுதநேரும். 'அய்' என்பதில் அகர ஒலி யமைதி விஞ்சுமேயன்றி ஐகார ஒலி யழுத்தம் உண்டோ?

இனி 'ஔ' என்பதை 'அவ்' வாக்கினல் 'அவ்' என்பது சுட்டுப் பெயராகி விடுமே. அவ்வீடு; அவ்வூர் போல அவ்வை என்பது அவ் வை (வைக்கோல்) யாய்ப் பொருள் காணலாமே! 'வைத்தூறு' என்று வழங்குகிருரே வள்ளுவர். மொழித் திருத்தம் தெளிவு நோக்கிச் செய்வதா? குழப்பமாக்கச் செய்வதா?

இங்குக் குறித்த திருத்தங்களையன்றி மனம் போனபோக் கெல்லாம் எழுத்துச் சீர்திருத்தம் செய்யப் புகுவதானல் அதன் விளைவு என் ஆகும்? எண்ணிப் பார்க்க வேண்டுமே!

அச்செழுத்தைப் படித்துப் பழகி விட்டவர்கள் ஏட்டெழுத்தைப் படிக்க இயல்வது இல்லை. ஏட்டெழுத்தைப் படிக்கத் தெரிந்தவர்க்கும் கல்வெட்டெழுத்தைப் படிப்பது அருமை! கல்வெட்டெழுத்தைப் படிப்பதற்குக் காலந்தோறும் எழுத்துகள் மாறிவந்த வரலாற்றறிவு கட்டாயம் வேண்டும்! மனம்போன போக்கிலே எழுத்துச் சீர்திருத்தம் செய்துவிட்டால் அச்சிடப்பெற்ற பழைய நூல்களைப் படிப்பதற்குக் கல்வெட்டுப் படிப்பதற்கு வேண்டிய பயிற்சி போன்ற பயிற்சியே வேண்டும். பழைய முறையில் படித்தவர்கள் புதுமொழி யொன்றைப் படிப்பது போலவே படிக்க நேரும்! அன்றியும், ஒவ்வொரு மொழிக்கும் அமைந்த வடிவமைப்பையும் ஒலியமைப்பையும் சொல்லமைப்பை யும் கெடுத்து அழிக்கவே வழியாகும். வழிவழியாக வரும் கலைகளை அப்படி அப்படியே காத்துப் போற்ற வேண்டும் என்னும் ஆர்வத் துடிப்பு மொழிக்கலையில் மட்டும் ஒதுங்கிக் கொள்வானேன்!

"எழுத்து வடிவம் என்றும் மாருமல் இப்படியேதான் வந்துள்ளதோ? இனி மாற்றமடையவும் செய்யாதோ?" என வினவுதல் கூடும். காலம் காலமாக எழுத்து வடிவம் மாறிக்

கொண்டுதான் வந்துள்ளது. இனி மாறவும் கூடுவதே. ஆசிரியர் தொல்காப்பியர் இன்று வந்து, அச்சிட்ட தொல்காப்பியப்படியைப் பார்த்தால் படிக்கத் திணறுவார்; படிக்க முடியாமலும் தவிப்பார். ஆனால், இயற்றியவர் படிக்க முடியாமல் தவிக்க அவருக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பிற்பட்டு வந்துள்ள நாமோ தட்டுத் தடையின்றிப் படிப்போம். இந்த வியப்பான நிலையைத் தோற்று வித்தது எழுத்தின் வடிவமைப்பு மாறுதலேயாம்! தொல் காப்பியர்க்கு அரிதாய்ப் போகவும் நமக்கு எளிதாய்ப் படிக்க வாய்த்ததன் அடிப்படை படிப்படியே படியெடுத்துத் தந்தவர்களின் கொடைவண்மையேயாம்!

ஓர் இளங்கன்று! அதனைத் தாய்ப் பசுவினிடம் பால்கறப்பதற் காகக் கொண்டு போகும் பொழுதெல்லாம் பால்கறப்பவன் தூக்கிக் கொண்டு போயே விட்டான். அப்படியே பால்கறந்து முடிந்த தும் தூக்கிக் கொண்டு வந்தே கன்றைக் கட்டினன். நாள்தோறும் இப்படியே தொடர்ந்து செய்தமையால் கன்று காளையாகி விட்ட நிலையில் கூட அவனால் அதனைத் தூக்க முடிந்தது! எப்படி? நாள் தோறும் கன்றுக்குச் சற்றே எடை கூடும். அவன் அதனைத் தூக்கித் தூக்கிப் பயிற்சி செய்ததால் அதற்குத் தக இயல்பாக எளிதாகத் தூக்கும் வலுவும் அவனுக் கேறியது, ஆனால், திடு மென்று போய் ஒரு காளையை ஒருவனால் தூக்கிவிட முடியாதே! அதுபோல் தொல்காப்பியர் எழுதிய எழுத்தை அவர் மாணவர் படித்துப் படி யெடுக்க, அவர் எழுதியதை அவர்தம் மாணவரோ ஆர்வலரோ படியெடுக்க, அப்படி அப்படியே அச்சுப் படியெடுக்கும் காலம் வரை தொடர்ந்து வந்துளது. ஆசிரியர் மாணவர் முறை யிலும், படியெடுத்தோர் படித்தோர் முறையிலும் தொடர்ந்து வந்தமையால் இடையே புகுந்த மாற்றங்கள் பொருட்டாகாமல் இயல்பாகப் போய்விட்டன. ஆதலால், எழுத்து வடிவ மாற்றம் இயல்பாக ஏற்படுமாயின் அஃது இடர்ப்பாடாக இராதாம். இல்லை யேல் ஏதோ ஒரு நலங்கருதிச் செய்யும் 'திருத்தம்' பல இடர்ப் பாடுகளை யுண்டாக்குமாம்!

**வேற்றுமொழி எழுத்துகளை விலக்கல்:**

இவ்விடத்திலேயே இன்னொன்றையும் கருதவேண்டும். "சில ஒலிக்குறைபாடுகள் உண்மையால் அயன் மொழிச் சொற்

களை அப்படியே, ஒலிமாறாமல் எழுத முடியாமல் போகிறது. அதனால் வேற்றுமொழி எழுத்துகளையும் வேண்டுமிடங்களில் கையாளவேண்டுவதேயாம்'' என்பது.

இவ் விடர்ப்பாடு, தமிழ்மொழிக்கு மட்டுமே யானதன்று. எம்மொழிக்கும் உரிமையான பொது இடர்ப்பாடேயாம். ஒவ்வொரு மொழியும் அம்மொழி வழங்கும் இடம், பருவநிலை, மக்கள் பயிற்சிநிலை, பழக்கவழக்கம் ஆகியவற்றுக்கு ஏற்ப அமைகின்றது. ஒரு மொழியில் வழங்கும் ஒலிகளையெல்லாம் மற்றொரு மொழியும் கொண்டிருக்கவேண்டிய கட்டாயம் இல்லை. அக் கட்டாயம் இருந்திருக்குமெனின் முன்னரே அவ்வொலி படைக்கப்பட்டிருக்கும். ஓர் ஒலிக்குரிய எழுத்து இல்லை என்பதற்காக அவ்வொலிக் குறிப்பாக—அடங்கல் வரிசையில் இல்லாத—வேற்றுமொழி—எழுத்தொன்றைப் புகுத்துவது முறைகேடாம். உலகமொழிகள் அனைத்திலுமுள்ள ஒலிகளின் வடிவங்களெல்லாம் ஒவ்வொரு மொழிக்கும் வேண்டுமென்றால் அம்மொழி ஒரு மொழியாகவே இராது. அம்மொழி எழுத்தும் எழுத்தாக இராது. உலகமெல்லாம் கட்டியாண்டு வரும் ஆங்கிலத்தின் அடங்கலில் உள்ள 26 எழுத்துக்கு அப்பால் 27 ஆம் எழுத்தென ஒன்று உண்டா?[1] எல்லா ஒலிகளையும் குறிக்கும் எழுத்துகளும் இவ்விருபத்தாறுள்ளே அடங்கிவிட்டனவோ?

'தமிழ்' என்பதை ஆங்கிலத்தில் எழுத முடிகிறதா? Tamil, Thamil, Thamizh இப்படித்தானே எழுதலாம். இம் மூன்று வடிவமும் 'தமிழ்' என்னும் ஒலியை முற்றாகக் கொண்டிருக்கவில்லை. இல்லை என்பதற்காக எவரேனும் 'Thamiழ்' என எழுதுவதுண்டா? எழுதினால் ஏற்றுக் கொள்வார்களா? இதனை எண்ணிப் பார்க்காமல் படிப்பாளிகளும் கண்ணை இறுக்கமாக மூடிக் கொண்டு விடுகிறார்களே! இக் கண்மூடிச் செயலால்தானே,

1. இலத்தீன் மொழியில் ஐ, ஷ ழ, ற முதலியன இல்லை. கிரேக்க மொழியில் ஐ, ஷ ச, ழ, ற F முதலியன இல்லை. ஆங்கில மொழியில் ழ, ற முதலியன இல்லை. மிகுந்த ஒலிப்பெருக்கமுள்ள சமற்கிருதத்திலும் எ, ஒ, ழ, ற, ன F, Z முதலியன இல்லை.
—பாவாணர். செந். செல்வி 52 : 580

'ஜ, ஷ, ஹ, ஸ, க்ஷ,' முதலிய கிரந்த எழுத்துகளையும் இவற்றின் வருக்கங்களையும் தமிழ் தாங்கியாக வேண்டியதாயிற்று!

மாங்காய், கட்டுமரம், மிளகுதண்ணீர், இஞ்சி, அரிசி என்பனவெல்லாம் ஆங்கிலத்தில் பெற்றுள்ள வடிவம் என்ன? திருநெல்வேலியும், குற்றாலமும், தூத்துக்குடியும், திருவையாறும், கொள்ளிடமும் பிறவுமாகிய பெயர்களெல்லாம் ஆங்கிலத்தில் பெற்றுள்ள வடிவமென்ன? இவ்வாறு ஒரு மொழிக்குத் தக்க ஒலி எழுத்து இல்லாமையோ வடிவு திரித்து எழுதுதலோ குறையாகிவிடுவது இல்லையே! வேற்றுமொழிச் சொற்களை வேண்டுமளவும் கோத்துக்கொள்ளக்கூடிய ஆங்கிலவர்கள், ஓரெழுத்தையும் புதுவதாக இணைத்துக்கொள்ளாமை ஏன்? அடிப்படையைத் தகர்க்க அவர்கள் விரும்பவில்லை. அதுதானே! ஆனால் இங்கே எப்படி?

"எங்கள் குடும்பத்துக்குத் தமிழ் நாட்டோடும் தமிழ் மொழியோடும் மிகப் பழங்காலம் முதலே தொடர்பு இருந்தது. சங்க இலக்கியம் என்று இந்நாளில் வழங்கும் 'எட்டுத்தொகை', 'பத்துப்பாட்டு' என்னும் தொகை நூல்களில் குறிப்பிடப்பட்ட புலவர்களில் இருவர் வடம் வகுப்பினர் என்று சுட்டப்படுகிறார்கள். ஒருவர் 'வடம்—ஓதங்கிழார்.' மற்றொருவர் 'வடம் வண்ணக்கன் தாமோதரனார்.' மேலும் சங்க இலக்கியத்தில் எங்கள் கௌசிக கோத்திரத்தைச் சார்ந்த ஐந்து கவிகள் காணப்படுகிறார்கள். அகர வரிசையில் அவர்கள் 'செல்லூர்க் கோசிகன் கண்ணனார்', 'பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்', 'பெருங்கௌசிகனார்', 'மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்', 'மதுரை இளங்கௌசிகனார்' என்பவர்கள். ஆதலால் எங்கள் தந்தைவழிக் குடும்பம் சங்ககாலம் எனப்படும் காலத்திலேயே வடநாட்டிலிருந்து வெளியேறித் தென்தமிழ் நாட்டில் குடியேறிய குடும்பம். இந்தக் குடும்பத்தினர்கள் வாழ்ந்த வடநாட்டுப் பகுதியில் எந்த மொழியைத் தங்கள் தாய்மொழியாக உடையவர்களாக இருந்துவந்த போதிலும் தென்னாட்டிற்கு வந்து குடியேறிய பிறகு அவர்கள் தமிழ்மக்களோடு இணங்கி வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் தமிழை நன்றாகக்கற்று அதில் மிக்க தேர்ச்சியையும் பெற்றார்கள்.

அதையே தங்கள் தாய் மொழியாகக் கொண்டு அழகிய தமிழ்ப் பாடல்கள் சிலவற்றைப் பாடிப் பச்சைத்தமிழர்கள் ஆகிவிட்டார்கள். அவர்கள் வாழ்ந்த காலம் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்னுள்ள காலமாக இருக்கலாம். ஆதலால் எங்கள் குடும்பம் நல்ல தமிழர்களின் குடும்பம் என்று மார்தட்டிக்கொள்ள எனக்கு உரிமையுண்டு''

[தினமணிகதிர் (10-9-82) நினைவுப்பாலங்கள்-4]

இதனை எழுதுபவர் தமிழில் அறிவியல் கட்டுரைகள் எழுதுவதில் இணையற்ற திறவோர்! எளிமையாய், இனிமையாய், சுவையாய் எழுதவல்லவர். அவர் தம்மைப் 'பச்சைத்தமிழர்' என்று கூறுவதையும் எங்கள் குடும்பம் 'நல்ல தமிழர் குடும்பம்' என்று கூறுவதையும் அறிந்து அவர் மார்தட்டிக் கொள்வது போலவே, நாமும் மார்தட்டி மகிழ்வோம்; தோள்தட்டி ஆர்ப்போம். இத்தகைய 'பச்சைத்தமிழர்' 'நல்ல தமிழர்! தம் பெயரை எப்படிப் பொறிக்கிறார்? விடாப்பிடியாக எப்படிப் பொறித்துவருகிறார்? பெ. நா. அப்புஸ்வாமி என்றுதானே! 'சாமி,' 'சுவாமி' என்பதில் — தமிழ் எழுத்தில் எழுதுவதில் 'சுகம்' இல்லை! 'ஸ்வாமி' என்பது தானே 'சுகம்'!

அவர் சுட்டிய 'வடம்' 'கௌசிகம்' இருக்கட்டும்! அவ்வாய்வு தனிவேறு செய்தி! ஆனால், அவ் 'வடம்' 'கௌசிகம்' புலவர்கள் பாடல்களையெல்லாம் எடுத்துக்கொண்டால் விரிவுறும் என்று அஞ்சி வடமோதங்கிழார் ஒருவர் பாடிய பாட்டினை மட்டும் காண்போம்.

வடமோதங்கிழார் பாடிய பாடல்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று அகப்பாட்டு; (317) மற்றொன்று புறப்பாட்டு (260).

அகப்பாட்டு பாலைத்திணைபற்றியது; தலைமகன் வரவுணர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லிய துறை சார்ந்தது; 24 அடிகளைக் கொண்ட அப்பாட்டில் 129 சொற்கள் உள்ளன. ஒரு சொல் வடசொல் உண்டா?

புறப்பாட்டு கரந்தைத் திணையில், கையறுநிலைத்துறை சார்ந்தது. 28 அடிகளைக்கொண்ட அப்பாட்டில் 139 சொற்கள் உள்ளன. ஒன்றேனும் வடசொல் இல்லை!

வடமோதங்கிழார் வழிமுறை சொல்லிப் பெருமையுறும் பேறு இருக்கும்போது அவர் வழியையும் போற்றுவது பெரும் பேருகும் அல்லவோ!

வடமர்களுக்குக் 'கிழார்' என்னும் பட்டமும் உண்டோ? வேளாண்டொழில் புரிந்தவர்க்கல்லவோ 'கிழார்' பட்டம்! பின்னே வணிகர் சிலர்க்கும் அப் பட்டம் தழுவலால் வாய்த்தது! வடமர்களுக்குக் 'கிழார்' என்னும் பட்டம் இருந்தமையை நினைவு கூரத்தான் வேண்டும்!

பழந்தொண்டைநாட்டுச் சிற்றூர் மாவட்டத்துச் சீகாளத்தி, திருத்தணிகை வட்டத்து 'மாதம்' என்னும் ஊருக்கு பண்டைப் பெயர் 'மோதம்' என்பதாமே! அரசியல் ஏடுகளில் 'மோதம்' என்று இருந்ததாமே! மதுரை மாவட்டத்திலும் 'மோதம்' என்னும் பெயரியதோர் ஊர் இருந்தமையால் தொண்டைநாட்டு 'மோதம்' 'வடமோதம்' என வழங்கப்பெற்றதாமே! மதுரை மாவட்டத்து மோதம் 'மோதக'மாய் வழங்குகிறதாமே! நினைக்கவேண்டுந் தானே! (புறம்-260 ஔவை. சு. து)

ஈதமைக. ஒலிக்குறையை நிறைவு செய்வதற்காக வேற்றெழுத்தைக் கலக்கும் வேலை வேண்டா! அதனை ஏற்பின் வைத்தவர் வரிசையாய் வண்டமிழ் அடங்கல் முறை 'பொல்லம் பொத்திய பொள்ளல் வேட்டி'யாய்ப் போகும்! தமிழில் உள்ள எழுத்துகளைக்கொண்டே உலகத்து மொழிகள் எல்லாவற்றின் எழுத்தையும் எழுதமுடியும் என அறிவியன் முறைப்படி நிறுவிக் காட்டினரே பா. வே. மாணிக்க நாயகர்! அதன்பின்னராவது அதனைக் கண்டுகொள்ள வேண்டாவா?

**தமிழ் நெடுங்கணக்கு :**

தமிழ் நெடுங்கணக்கில் அமைந்துள்ள எழுத்துகள் உயிர், மெய், உயிர்மெய், தனிநிலை (ஆய்தம்) என நான்காம்.

இந்நான்கு குறியீடுகளும், இவற்றின் உட்பிரிவுக் குறியீடுகளும் பிறவும் ஆசிரியர் தொல்காப்பியனார் காலத்திற்கு முற்படவே அமைந்துவிட்டனவாம். அன்றியும் அவை ஓர் ஒழுங்குறு நிலையில் அமைக்கவும் பெற்றுவிட்டனவாம். இக்குறியீட்டுப் பெயர்கள், தமிழ்மக்களது மெய்யுணர்வு மேம்பாட்டுத் திறத்தைக் கைம்மேல் வைத்த கனியெனக் காட்டுவனவாம்.

**உயிர், மெய், உயிர்மெய் :**

உயிரின் தன்மையவாம் எழுத்து உயிரெழுத்து ஆகும். உயிரின் தன்மையாவது யாது? 'உய்' என்பதில் இருந்து பிறந்த சொல் உயிர் ஆகும். 'உய்' என்பது 'உய்த்தல்' எனத் தொழிற் படும். உய்த்தல் என்பதன் பொருள் செலுத்துதல், சேர்த்தல் முதலியவாம்.

"பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்"

என்று தொல்காப்பியரும், (1009)

"அடக்கம் அமரருள் உய்க்கும்"

என்று திருவள்ளுவரும் உய்த்தலை ஆள்வர். உய்த்தல் வினையைத் தொண்டைமான் இளந்திரையன்,

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவற் சாகா [1]டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
[2]உய்த்தல் தேற்றான் ஆயின் வைகலும்
பகைக்கூழ் அள்ளற் பட்டு
மிகப்பல தீநோய் தலைத்தலைத் தருமே" (புறம். 185)

என உவமை வகையால் அருமையாய் விளக்கியதறிக. உடலை இயக்குவதும்—உய்ப்பதும்—உயிர்; நன்னெறிக்கு உய்ப்பதும் உயிர்! இவ்வுயிர்போலவே, உடல்போன்ற எழுத்தை—மெய் யெழுத்தை—உய்ப்பதும் உயிர் எனக் காரணக்குறி பெற்றது.

---

1, 2. உகைத்தலும் உய்த்தலும் நோக்குக.

உயிர்போல்வதாம் எழுத்தை உயிர் என்றதும், அவ்வுயி ரெழுத்தால் இயக்கப்பெறும் எழுத்தை உடல், உடம்பு, மெய் என்றதும் நுண்ணிய தேர்ச்சியாம்.

'க் ங்' முதலிய மெய்கள் எப்படி இயங்குகின்றன? 'க்' என்பதை இகரம் இல்லாமல் (இக்) ஒலிக்க முடியுமா? மெய்யை இயக்க முன்னே உயிர் வந்தேயாக வேண்டியுள்ளது. அல்லது மெய்யின்மேல் உயிர் ஏறி க்+அ=க என்பதுபோல இயக்க வேண்டியுள்ளது.

மூன்று உருளை வண்டியைச் சிறுர் இழுத்து ஓட்டி இன்புறு கின்றனர். பின்னே, தாமே ஊர்திகளில் ஏறி ஓட்டுகின்றனர். இழுத்து இயக்கும் நிலையொன்று; இவர்ந்து (ஏறி) இயக்கும் நிலை மற்றொன்று. இவ்விருநிலைகளிலும் மெய்யை உயிர் இயக்கு கின்றமை அறியலாம்.

உடலை இயக்கும் வினை செய்யும் உயிர், தானே இயங்கவும் செய்யும் அன்றே! அவ்வாறே உயிரெழுத்தும் தானே இயங்கும்; மெய்யெழுத்தையும் இயக்கும். உயிர்ப்பை உடையதால் அதற்கு உயிர் என்று பெயர் வந்தது என்று சிவஞான முனிவர், சிவஞானமா பாடியத்துக் கூறினர். பெருஞ்சொல் விளக்கர் அ. மு. சரவணனர், "தத்துவஞானம் (மெய்யுணர்வு) கைவரப்பெற்ற பின்னரே எழுத்துகளுக்கு உயிர்மெய் என்ற பெயரிட்ட முன்னோர்கள், இறைவன் இந்த உயிரை உடலோடு சேர்த்து இயங்குமாறு செய்ததன் நோக்கம் அந்த ஆன்மாவானது உய்திபெறுதற்கு அதாவது ஈடேறுவதற்குத்தான் என்றறிந்த அவர்கள், 'உய்' என்ற பகுதியின் அடியாக அந்த உயிர் என்ற பெயர் கொடுத் திருக்க வேண்டுமென்று கருதினல் அது தவருகாதன்றே" என்றார். (கட்டுரைப்பொழில். (143)

தானும் இயங்கி மற்றை மெய் எழுத்துகளையும் இயக்குவ தால் உயிர் என்னும் பெயரைப் பெற்றது என்றால், மெய் தனித்து இயங்காததாய், உயிரேறி இயக்க இடந்தருவதாய் அமைந்தது என்பது விளங்குமன்றே! இதனைத்தான், "மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்" என்றும்,

"உடல்மேல் உயிர்வந் தொன்றுவ தியல்பே"

என்றும் கூறினர். எழுத்துகளின் மெய்யுணர்வு விளக்கம் அறிவிப்பான் போலவே "அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்றும் "அகர உருவாகி எங்கும் நிகரில் இறைநிற்கும் நிறைந்து" என்றும், "அகர முதலானை அணியாப்ப னூரானை" என்றும் மெய்யுணர்வாளர் கூறினர்.

"அகரம் தனியே நிற்றலானும் பலமெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதொர் தன்மையை உடைத்தென்று கோடும்; இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல அது 'அ' என்ற வழியும் மூவினங்களில் ஏறினவழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க" என நச்சினார்க்கினியர் தரும் விளக்கத்தான் உயிரின் மெய்யுணர்வுக் கருத்து விளக்கமாகும் (தொல். எழு. 8)

தொல்காப்பியர் கணக்குப்படி தமிழெழுத்து 33 அவ் வெண்ணிக்கை அருமை நோக்கத்தக்கது. மாந்தரையும் விலங்கை யும் பிரித்துக் காட்டும் அல்லது மக்களையும் மாக்களையும் பிரித்துக் காட்டும் வெளிப்படை யடையாளம் நேரே நிமிர்ந்து நடத்தலும், குறுக்கே சரிந்து நடத்தலுமாம். நிமிர்ந்து நடக்கும் வாய்ப்பு முதுகெலும்பால் ஏற்படுவ தென்பது தெளிவு. அம் முதுகெலும்பு எண்ணிக்கை முப்பத்து மூன்றும்! திருக்கோயில் கொடிமரத்தின் வரிகளும் முப்பத்து மூன்றும்! 'ஊனுடம்பு ஆலயம்' என்பராகலின் உடலின் அமைப்பே திருக்கோயில் கொடி மரத்தின் அமைப்பு மாகி மொழியின் அடிப்படை மெய்யுணர்வுக் கோட்பாட்டை விளக்குவதாம்.

உயிர், மெய், உயிர்மெய் என்னும் மூன்றனையும் ஒழிந்த ஓரெழுத்து ஆய்தமாம். 'ஆய்தம்' என்பதை 'ஆயுதம்' என்றே பலரும் மயங்கி வரைந்தனர். 'கேடயம்' என்னும் கருவியமைப் பைக் கருதியது என்றும், சமையற் கருவியாம் அடுப்புக் கூட்டுப் போல்வது என்றும் உவமை காட்டினர். 'ஆயுதம்' 'ஆய்தம்' என்பவை தொடர்பற்றவை.

ஆய்தம் என்பதன் பொருளைத் தொல்காப்பியனாரே விளக்கியுள்ளார். 'உள்ளதன் நுணுக்கம்' என்பதே பொருள். தமிழில் உள்ள எழுத்துகளில் எல்லாம் நுண்ணிய ஒலியமைந்த எழுத்து ஆய்தமே என்பது எவரும் அறிந்ததே. ஒலி குறைந்த அவ்வாய்தமும் அவ்வளவில் குறைந்தும் ஒலித்தலையுடையது என்பதும் இலக்கணவரம்பு. ஆதலால் 'ஆய்தம்' தனியியல்பமைந்த ஓர் எழுத்து என்பதும் விளங்கும். 'நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்' என்பதும் கருதுக (தொல். 1479).

தனியியல்பமைந்த எழுத்தை எப்பெயரிட்டழைப்பது? அதனைத் 'தனிநிலை' என்றனர் முந்தையோர்.

தனிப்பாடல் திரட்டு, தனியன், தன்னந்தனி, தனிமரம் முதலியவற்றை எண்ணும்போது தனி என்பதன் பொருள் விளங்கும். சங்கச் சான்றோருள் ஒருவர் பெயர் தனிமகனார் என்பது அவர்,

"வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே"

என்று உவமைப்படுத்திய தொடரால் தனிமகன் எனப் பெற்றார். இவற்றால் தனி என்பது ஒன்று என்னும் எண்ணுப் பெயராம் என்பது விளங்கும். ஒன்று என்பதைத் 'தனிமையும் ஆகும்' என்று இலக்கணக் குறியிட்டு ஆள்வதும் வழக்கே. ஆகலின் 'தனிநிலை' என்பது 'ஓரெழுத்து' என்றும், 'தனியே நிற்பது' என்றும் பொருள் தரும்.

புள்ளியே வடிவாக வேறொரேழுத்தின்மையால் ஆய்தம் தனிநிலையாயிற்று.

உயிரின் தன்மையாம் தனியே இயங்குதலும், மெய்யை இயக்குதலும் இன்மையால் தனிநிலை ஆயிற்று.

மெய்போல உயிரால் இயக்கப்பெறுதலும், உயிரேற்று உயிர்மெய்யெனப் பெயர் பெறுதலும் போன்ற செய்கை இன்மையால் தனிநிலை ஆயிற்று.

உயிரும் மெய்யும் போல மொழி முதல், மொழியிடை, மொழியீறு என்னும் மூவிடத்தும் வாராமல் மொழியிடை என்னும் ஓரிடத்து மட்டுமே வருதலால் தனிநிலை ஆயிற்று.

பிற பிற மொழி யெழுத்துகளைத் தமிழியல்புக்குத்தக அமைத்துக்கொள்ளத் துணையாகி நிற்றலால் தனிநிலையாயிற்று.

மற்றை மற்றை எழுத்துகள் பிறக்கும் இடத்தைத் தனக்கெனப் பிறப்பிடமாகக் கொள்ளாமையாலும் தனி நிலை யாயிற்று.

தனிநிலை இவ்வாறாக அதற்கு 'முப்பாற் புள்ளி' என்னும் பெயரும் 'அஃகேனம்' என்னும் பெயரும் உண்டு. 'ஒற்று' புள்ளி என்பாரும் உளர்.

"அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால ஐந்தும் இதற்கே"

என்றார் அவிநயனார் (யா. வி. 2)

உயிரெழுத்தில் இருவகை; குறில் நெடில் என்பன. மெய்யெழுத்தில் மூவகை வல்லினம், மெல்லினம் இடையினம் என்பன. இவையெல்லாம் திட்டமிட்ட ஓர் ஒழுங்கு முறையில் அமைந்துள்ளன.

தொல்பழ நாளில் குறில் ஐந்தும் நெடில் ஐந்துமாக உயிர் பத்தெழுத்தாகவே இருந்தன என்பர். பிற்படத் தோன்றியனவே ஐ, ஔ என்றும் கூறுவர். அ இ—ஐ; அ உ-ஔ என்றும் தொல்காப்பிய நாளில் வழங்கியமையும் அறியக் கிடக்கின்றது. தொல்காப்பியனாரே அடங்கன் முறையில் உயிர்வகையில் ஐ, ஔ என்பவற்றை இணைத்தவர் ஆகலாம்.

உயிர்ப்பு வகையில் இரண்டு உண்டு. குற்றுயிர்ப்பு நெட்டுயிர்ப்பு என்பவை அவை. அதுபோலவே குறுமையும் நெடுமையும் ஒப்பீட்டு அளவையில் இடம் பெறுவனவே. ஒலியளவினைக் கருதி எழுத்துகளைக் குறில் நெடில் எனப் பகுத்தனர். இப் பகுப்பின் அருமை பல்வகையானும் பாராட்டுக்குரியதாம். அடு ஆடு; அனை ஆனை; இடு ஈடு; இளை ஈளை குறில் நெடில் வேறுபாட்டால்

எத்தகு பொருள் வேறுபாடு நேர்கின்றது; இவ் வேறுபட்ட பொருளை மயக்கமின்றி வெளிப்படுத்தக் குறில் நெடில் வேண்டுமன்றே! இவ் வேறுபாடு ஆங்கிலம் முதலிய மொழிகளுக்கு இன்மையால் எத்தகைய இடர்ப்பாடுகள் உண்டாகின்றன!

'நாராயணனை' நராயணன்' எனப்பாடினர் கம்பர். அவருக்குப் பின்னேவந்த காளமேகப் புலவர் நாராயணனைக் கம்பர் நராயணன் என்றமையால் நான் இனி 'வார்' என்பதை 'வர்' என்பேன்; 'வாள்' என்பதை 'வள்' என்பேன்; 'நார்' என்பதை 'நர்' என்பேன் 'நன்' என்று நகைத்தார்! இந்நகைப்புக், குறில் நெடில் இல்லா மொழியின் இருக்கையே யல்லவோ? 'நாராயணன்' என்பதை ஆங்கிலத்தில் எழுதினால் 'நாராயணன்' எனவும் படிக்கலாம். 'நராயணன்' எனவும் படிக்கலாம்? ஏன்? 'நரயணன்' என்றும் படிக்கலாம்! நரயாணன், நரயணான் எனப் பிறவாறும் படிக்கலாம்!

மெய்யின் மூவினமும், பிறப்பிடம், முயற்சி, ஒலித்தன்மை ஆகியவற்றைக் கருதி வல்லினம், மெல்லினம், இடையினம் எனப் பெற்றன. ஆழ்கிணற்றில் இருந்து நீர் சுமந்து வருவதற்கும், குளத்திலோ ஆற்றிலோ நீர் எடுத்து வருதற்கும், நிலமட்டத்துத் தொட்டியில் நீர் எடுத்து வருதற்கும் முயற்சி வேறுபாடு உண்டன்றோ! இம் முயற்சியை வலிய முயற்சி, இடை நிகர்த்த முயற்சி, மென் முயற்சி எனலாம்.

வல்லினம் மார்பையும், இடையினம் கழுத்தையும், மெல்லினம் மூக்கையும் இடமாகக் கொண்டு பிறப்பன. ஒலியும் அவ்வாறே வன்மை, இடைமை, மென்மையாய் அமைவன. வன்மை, இடைமை, மென்மைப் பயன்பாடு கருதியும் வழங்கப்பெறுவன. ஊக்கித் தாக்குதலிலே வன்மை; கொஞ்சிக் குழைதலிலே மென்மை; பொது நிலைகளிலே இடைமை; இவை மிகப் பாடுதல் புலவர் வழக்காறும்.

"நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக் கொண் டன்ன துடைத்து"

என நோக்கத் தாக்குதலை வல்லினத்தை அடுக்குதலால் காட்டிய வள்ளுவர் தாமே அதற்குமுன் பாடலில்,

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"

எனப் பாடினார். வல்லின வொற்று இப் பாடலில் ஒன்றுண்டோ?

"உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

என்பதில் இடைமை செறிந்தும் பிறவும் இணைந்தும் வந்தமை காண்க.

இம் மூன்றின எழுத்துகளும் மிக்குவருதல் இன்பங்கருதி அவற்றை வல்லிசை வண்ணம், மெல்லிசைவண்ணம், இயைபு வண்ணம் எனப் பகுப்பார் தொல்காப்பியர்.

'வல்லிசை வண்ணம் வல்லெழுத்து மிகுமே'

'மெல்லிசை வண்ணம் மெல்லெழுத்து மிகுமே'

'இயைபு வண்ணம் இடையெழுத்து மிகுமே'

என்றார். இயைபு வண்ணத்திற்கு,

"வயலுழுவார் வாழ்வாருள் வாழ்வார் அயலுழுவார்
வாழ்வாருள் வாழா தவர்"

என எடுத்துக் காட்டுக் காட்டுவார் யாப்பருங்கல விருத்தியுரையார். இனி இம் மூவின எழுத்துகள் மட்டுமே தனித்தனி வரப் பாடிய பாடல்களும் உள. அவை யாப்பருங்கலவிருத்தியுள் கண்டு கொள்க.

உயிரெழுத்தைக் குறிலும் நெடிலுமாக வைப்பு முறை செய்தவர்கள் மெய்யெழுத்தை எவ்வாறு முறைப்படுத்தினர்? வல்லினம் மெல்லினம், வல்லினம் மெல்லின மென 'கங, சஞ, டண, தந, பம, வைத்து, இடையே 'யரலவழள' என்பவற்றை நிறுத்தி 'றன' என வல்லின மெல்லினமாக நிறைவு செய்தனர். இவ்விணைப்பின் அருமை உன்னுதோறும் இன்பம் பயப்பதாம்; வாழ்வியல் உன்னிப்பில் இருந்து கிளர்ந்த படைப்பெனத் தக்கதாம்.

வன்மை ஆண்மையும், மென்மை பெண்மையும் அமைந்த பெற்றிய என்பது எவர்க்கும் ஒத்த முடிவே. ஆடவரைக் 'கொழுநன்' என்பதும் மகளிரைக் 'கொடி' என்பதும் கருதத்தக்கதே.

'பெருமையும் உரனும் ஆடூஉ மேன'

'அச்சமும் நாணும் மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப'

என்பவற்றையும்,

'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப.'

என்பதையும் இணைத்து நோக்கவல்லார் வன்மை மென்மை இணைப்பின் அருமை அறிவார்.

ங், ஞ், ண், ந், ம், ன் என்பவைதாமே மெல்லினம்? இவ்வெழுத்துகள் வரும் வண்ணம் அமைந்த சொற்கள் சிலவற்றைக் காண்க. தங்கம், மஞ்சள், வண்டி, பந்து, தம்பி, கன்று; இவற்றில் மெல்லின ஒற்றுகளை யடுத்துவரும் எழுத்துகளெல்லாம் வல்லினமாகவே இருக்கக் காண்கிறோம் அல்லமோ! இவ்வாறு மெல்லின ஒற்றை அடுத்து வல்லினம் வாராக்கால் அம் மெல்லினமே வரக் காணலாம். ஆதலால் 'கங' 'சஞ' 'டண' 'தந' 'பம' 'றன' என்னும் ஆறு இணைகளையும் தனித்தனி இன எழுத்துகளாக முந்தையோர் கண்டனர். இடையினம் ஆறு எழுத்துகளையும் இவ்வாறு பகுக்காமல் அவற்றின் ஒத்த இயல் பறிந்து ஓரினமாகவே அமைத்தனர். இவ் வினப்பாகுபாடு அவ்வவ் வெழுத்துகளின் பிறப்பு முயற்சியையும் கருதிய தென்பதை இலக்கண நூல்களில் கண்டு கொள்க. உயிர் எழுத்துகளிலும் இம் முயற்சிப் பிறப்பு வகையால் மூவினப்படுத்தி வைத்தனர். 'அ ஆ' 'இ ஈ எ ஏ ஐ', 'உ ஊ ஒ ஓ ஔ' என்பவை அம் மூவினங்களாம். இவற்றை ஒலித்துப் பார்த்த அளவானே இனம் என்பது இயல்பாய் விளங்கும்.

தமிழுக்குரிய சிறப்பு எழுத்துகளுள் சிறப்பினது ழகரப் ஆகும். இவ்வெழுத்து பிறமொழிகளிலும் உண்டு என்பது இம்பொழுது விளக்கமாகின்றது. ஆனால் இம் மொழிகளெல்லாம்

தோன்றுவதற்கு முற்பட்ட மொழி தமிழ் ஆதலாலும், அம் மொழியில் முற்படக் கலந்த மொழி வடமொழியே ஆதலாலும் அம் மொழியிலும் அதனைச் சார்ந்து வந்த மொழிகளிலும் 'ழ'கரம் இன்மையால் தமிழுக்கே உரியது ழகரம் என்று கொண்டு 'தமி—ழ்' எனப் பிரித்துப் பெருமை கூறி மகிழ்ந்தனர். இதனை முன்னர்க் கண்டுள்ளோம்.

இந்த 'ழ'கரம் ஒலி இனிமையாலும், பொருள் சிறப்பாலும் குறிப்பிடத் தக்கதாம். 'இழுமென் மொழியால் விழுமியது நுவலல்' தோல் என்னும் வனப்பு என்பர். (தொல். 1494) அவ் விழுமியதில் தலையாய மழலை மொழியைக்,

"குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்"

என்று வள்ளுவரும்,

"குழலும் யாழும் அமிழ்தும் குழைத்த
மழலைக் கிளவி"

என்று இளங்கோவடிகளாரும் கூறுவர்.

'அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிரோவியமே'

எனக் குமரகுருபர அடிகள் தெய்வவோவியத் திருக்காட்சிக்குப் பயன்படுத்துவர். இனித் தமிழ் எழுத்தின் வடிவம்பற்றிக் காணலாம்.

### தமிழ் எழுத்து வடிவம் :

எழுத்து என்பது காரணப் பொருட்டது. எழுதலாலும், எழுதுதலாலும் எழுத்தாயிற்று. காற்று எழுந்து முயற்சிவகையால் ஒலியாக எழுவது ஒலி எழுத்து; வடிவு கொண்டு எழுதுதலால் அமைவது வரி எழுத்து. இவ்விரண்டன் பொருளும் ஒருங்கே விளங்குமாறே எழுத்து என்னும் சொல்லை முந்தையோர் படைத்தனர்.

'அஆ இழந்தான் என்றெண்ணப்படும்'—நாலடி. 9

'ஆஅ ஒல்லெனக் கூவுவேன் கொல்'—குறுந். 28

''கூஉக்கூஉ மேவு மடைமைத்தே''—பரிபா. 19.

''ஏயே இவளொருத்தி பேடியோ''—சிந். 652

''ஏஎ எல்லா மொழிவது காண்டை''—கலி. 64

''ஏஎ பாவம்''—சிந். 290

''ஏஎ ஓஒ எனவிளி ஏற்பிக்க
ஏஎ ஓஒ வென் றேலா அவ்விளி''—பரிபா. 19

''ஓஒ உமன் உறழ்வின் றி ஒத்ததே''—களவழி. 36

''ஓஒ கொடிதே''—நாலடி. 88

''ஓஒ... நிலஞ்சேர் ந்தனனே''—புறம். 285

உயிரொலிகள் எல்லாம் உணர்வொலிகள் என்பது இவ்விலக்கிய ஆட்சிகளால் நன்கு விளங்கும். வழக்கிலும், 'ஆஆ! அப்படியா!

''இஈ'...வாங்க''

'ஆ! ஓ! ஐயாவோ'

'உஊ', 'ஓஒ' 'ஐ' 'ஔ' என்பனவெல்லாம் உணர்வுக் குறிகளாக வழங்கிவருகின்றன. இவ்வுணர்வொலிகளே உயிரொலிகளாக அமைந்துள்ளனவாம். இவ்வுணர்வொலிகள் மாந்தர் இனப் பொதுப்பொருள் என்பதை 'அ, இ, உ, எ, ஒ' என்னும் உயிர் எழுத்துகளையும் A, E, I, O, U என்னும் ஆங்கில எழுத்துகளையும் மாறி மாறிச் சொல்லிப்பார்த்த அளவானே புலப்படும். இவ்வொலிகள் விலங்கு, பறவைகளின் கூப்பீடாகவும் உணர்வொலியாகவும் வெளிப்படலும் கண்கூடு.

ஒலிவடிவம் இவ்வாறமைய வரிவடிவம்பற்றிக் காண்போம். எழுத்து இன்னதென்ன அறியா இளங் குழந்தையிடம் எழுதுகோல் ஒன்றைத் தந்தால் வட்டம், வட்டம், சுழி, சுழி, வளையம் வளையமாகவே கிறுக்கித்தள்ளும். நேர்கீற்றுகப் போட இயலாது. வட்டம் என்பது இயற்கை வடிவம். மற்றைச் சதுரம், முக்கோணம், அறுகோணம், நேர்வரி என்பவை செயற்கை வடிவம்.

வளர்ந்தவர்களாலும்கூட நேர்வரியிட ஒரு கோலின் துணையே வேண்டியுள்ளது. அதனை நேர்செய்து நேராய்ப் போடுதற்கும் இயல்வதில்லை. எத்தனையோ வளைவும் திருகலும் ஏற்படுதலே இயற்கை. நேர்கோடு போட்டுப் பழக்கமில்லை என்றே சிலர் கைவிரித்து விடுவர்!

இயற்கை வடிவம் ‘வட்டம்’ என்பது எப்படி?

கதிர், திங்கள், விண்மீன், உலகம் ஆகியவை எவ்வடிவில் உள்ளன?

சூறைக்காற்று எப்படி அடிக்கிறது?

நீர்ச்சுழல் எப்படிச் சுழல்கின்றது?

வானம் எப்படித் தெரிகின்றது?

மலையின் தோற்றம் எப்படிக் காணுகின்றது?

மழைத்துளி எவ்வடிவில் வீழ்கின்றது?

நீர்த்துளியோ எண்ணெய்த்துளியோ துணியில் பட்டால் எப்படிப் பரவுகிறது?

நீரில் கல் விழுந்தால் அலை எப்படி எழுகின்றது?

பறவைகள் எப்படி வட்டமிடுகின்றன?

விலங்குகள் எப்படிப் படுக்கின்றன?

“ஆடையின்றி வாடையில் மெலிந்து கையதுகொண்டு மெய்யது பொத்திக் காலது கொண்டு மேலது தழீஇப்”படுக்கும் மாந்தன் எப்படி முடங்கிக் கிடக்கிறான்? இவற்றுக்கெல்லாம் ‘வட்டம்’ ‘வட்டம்’ என்பதுதானே மறுமொழி! ஆகலின் வட்டம் இயற்கை வடிவம் என்க.

பழங்கால எழுத்துகள் வட்டெழுத்து, கண்ணெழுத்து, கோலெழுத்து, ஓவிய எழுத்து என்றெல்லாம் வழங்கப்பெற்றன. வட்டெழுத்து கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பெற்றமை அறிஞர்களால் கண்டுபிடிக்கப்பெற்றுள. கண்ணெழுத்துப் பற்றி இளங்கோவடிகளார் குறிப்பிடுகிறார். கோல் என்பது திரட்சி. அதுவும்

வட்ட வடிவொடு இயங்கியது என்பது விளங்கும். ஓவிய எழுத்து வடிவ எழுத்தாகும். இன்னும் பலவகை எழுத்துகளை யாப் பருங்கலவிருத்தி வழங்குகின்றது. காலந்தோறும் எழுத்துகள் அமைந்திருந்த வடிவத்தைக் கலைக்களஞ்சியம் காட்டுகின்றது. இங்கே குறிக்கப்பெற வேண்டிய செய்தி ஒன்றே. தமிழ் எழுத்துகள் எப்படி இயற்கை ஒலியால் ஒலிக்கப் பெற்றனவோ, அப்படியே இயற்கைவடிவாம் வட்டத்தில் அமைய எழுதப் பெற்றன என்பதே. கோடு என்பதன் பொருள் வளைவு என்பதே யாம். 'யாழ்கோடு' என்பார் வள்ளுவர். கவடும் கோடும் கண்டனவே! கோடுபோடுதல் என்றாலே வளைவாகச் சுழித்தலைக் குறிக்குமாதலின் 'நேர்கோடு' என்று விளக்கும் நிலைமை உண் டாயதை எண்ணுக.

**பண்டை எழுத்துச் சான்று:**

"உட்பெறு புள்ளி உருவா கும்மே"

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே"

என்னும் தொல்காப்பிய நூற்பாக்கள் (14—16) அக்காலத் திலேயே தமிழ் வரிவடிவம் பெற்றிருந்ததைத் தெளிவிக்கின்றன. அண்மையில் வாழ்ந்த வண்ணச் சரபம் தண்டபாணி அடிகள் 'ஆரு வது இலக்கணம்' என ஒன்று எழுதினார். அதில் அகரம் முதல் னகர விறுதியாம் எழுத்துகள் அனைத்தின் வரிவடிவும் ஒலி வடிவும் தெளிவாக வரைந்தார். அப் பணி பழங்காலத்தே எவர் எண்ணத்தேனும் ஊன்றி உருவெடுத்திருந்தால் அப் பழங்கால எழுத்தின் வடிவு இன்னதெனத் தெள்ளிதின் அறிந்துகொண் டிருக்க வாய்க்கும்; எழுத்தின் வரிவடிவம் மாருமல் இருந்திருக்க வும் வாய்த்திருக்கும்.

"கிளிமுகம் சுழிக்கவேண்டும்; அச் சுழியைக் கீழ் இறக்க வேண்டும்; அவ்விறக்கிய கோட்டை இடப்பால் இழுக்கவேண்டும்; இடைவெளி அமையுமாறு ஏற்றி வலப்பால் அக்கோட்டை இழுக்கவேண்டும். பின்னர், கால் ஒன்றை மேல் இருந்து கீழ்

வரை ஊன்றவேண்டும், இஃது அகர எழுத்தின் வரிவடிவம்; ஆன் இளங்கன்று வாய்திறந்து எழுப்பும் ஒலி, ஒலி வடிவம்; அகரத்திற்கமைந்த காலின் கீழே வலப்பால் சுழித்தால் ஆகாரத்தின் வரிவடிவாம். கன்று பெருக ஒலித்தல் அதன் ஒலிவடிவாம்.'' இது அகர ஆகார எழுத்துகளுக்கு அவர் உரைத்த நூற்பாவின் பொருளாம்.

**வேண்டுகோள் :**

மக்களுக்கு ஆறறிவு உண்டு என்கிறோமே! அவ்வாறறிவுகளும் எவை என்பதை மூவாயிர ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்த தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சிலமொழிகளில் இரு நூறு முந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட நூல்களைப் புரிந்து கொள்வாரும் அரியராகப், புரிந்தவர் அவற்றின் நடைமாற்றிப் புரியச்செய்தல் கண்கூடாக விளங்குகின்றதே! அந் நிலைமை தமிழுக்கு இல்லாமை வழிவழியாக அதன் செம்மையும் சால்பும் கட்டிக் காக்கப் பெற்றுவருவதனாலேயே யாம்.

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே;
இரண்டறி வதுவே அதனொடு நாவே;
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே;
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே;
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே;
ஆறறி வதுவே அவற்றொடு மனனே;
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே''

என்னும் நூற்பாவில் இக்காலத்தில் வழங்காத—புரியாத—சொல் ஏதேனும் உண்டோ? ஓரளவே மொழிப்பயிற்சியுடையாரும் இந் நூற்பாவின் பொருளைத் தாமே படித்த அளவால் புரிந்து கொள்ளக்கூடுமே!

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தர்க்குக் கடனே''

என்னும் மோசிகீரனுர் பாடிய புறப்பாடலின் பொருளை உணர்தற்கு இடர்ப்பாடு உண்டோ? ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட எழுந்த பாடலன்றோ இது?

"அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு அன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச், 'சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா' என்றாள்; எனயானும்
தன்னை யறியாது சென்றேன்; மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு
'அன்னாய்! இவனொருவன் செய்ததுகாண்' என்றேனா;
அன்னை அலறிப் படர்தரத், தன்னையான்
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா; அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்" (கலித்தொகை 51)

என்னும் இக் கபிலர் பாடலில் சிரகம் (செம்பு) தெருமந்திட்டு (மனம்மயங்கி) படர்தர (வர) புறம் (முதுகு) என்னும் சில சொற்களுக்கே பயிற்சி வேண்டுமேயல்லாது, மற்றைச் சொற்கள் பொருள் விளங்கும் எளியவாம். படித்த அளவானே பொருள் புலப்படக் கூடியதுமாம்.

குட்டி, குஞ்சு, மறி, பிள்ளை, கன்று, இலை, தோகை, தளிர், மடல் என்பனவெல்லாம் பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் வழங்கிவரும் சொற்களேயன்றி அருஞ்சொற்கள் அல்லவாம்!

தென்னை, பனை, புன்னை, கொன்றை, வேம்பு, வாகை இன்னவையும், கொக்கு, புறா, நாரை, கிளி, கூகை இன்னவையும், புலி, கரடி, மான், முயல், யானை இன்னவையும், நெல், புல், கரும்பு, அவரை, துவரை இன்னவையும் கற்றாரும் கல்லாரும் பொருளறிந்து போற்றும் சொற்களாகவே இலங்குகின்றன!

இத்துணை நெடுங்காலமாக எளிதாய் இனிதாய் மரபுநிலை மாருமல் இயங்கிவரும் இனிய தமிழ்மொழியை, இரண்டு மூன்று

நூற்றுண்டுகளுள் உலகியல் வழக்கு இலக்கிய வழக்கு ஆகிய இருவகை வழக்குகளிலும் வீழ்ந்துபடுமாறு செய்யவல்ல கொச்சை நடையையும் கலப்புக்கேட்டையும் கட்டாயம் ஒழித்தாகவேண்டும்.

நாகரிகம் பண்பாடு வாழ்வியல் இவற்றுக்கெல்லாம் அடித் தளமாய் அமைந்த அருமைத் தமிழ்மொழியை, அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களே பேணிக் காவாதிருத்தலும், அழிவுக்கு ஆளாக்குதலும் நன்றிகொன்ற செயலாம்; அன்னவர் தமிழ்மக்களே எனினும் தமிழ்ப் பகைவராகவே ஆவர்.

தமிழுக்குத் துறைதோறும் துறைதோறும் தொண்டு செய்யத்தக்க நன்மக்கள் இக்காலத்து இன்றியமையாத் தேவையர். தத்தம் துறைகளில், தம்மைத் தமிழ்மக்கள் என்று சொல்லத்தக்க அளவு தொண்டாற்றுதல் கடப்பாடு. தமிழுக்கு அமைந்துள்ள இல்லாமை போதாமை இயலாமை என்பவையெல்லாம் தமிழர்க் குள்ள இல்லாமை போதாமை இயலாமைகளேயாம். “எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே” என்னும் ஔவையார் மொழியைச் சற்றே மாற்றி, ‘எவ்வழி நல்லவர் மக்கள், அவ்வழி நல்லை வாழிய மொழியே’ என்று அமைத்துக் கொள்ளலாம். அடுத்த மாட்டுக்கும் அயல் மாட்டுக்கும் புல்லும் வைக்கோலும் பிண்ணாக்கும் தவிடும் நாம் போட்டுவிட்டு, நம் மாட்டைப் பட்டினியாகக்கிடக்கவிட்டுவிட்டு—‘வாங்கக்குடம் நிறைக்கும்’ வளமையதாக இஃது இல்லை என்றால் எவரே கைகொட்டி நகையார்?

“நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்ப தன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா ரதுவே” (புறம். 195)

என்னும் மெய்யுணர்வாளரின் மேதக்க வுரையைப் போற்றுதல் எப்பாலும் நலம் செய்வதாம்!

வாழிய செந்தமிழ்!
வாழிய வையகம்!

———

## இணைப்பு

## ஒருமொழி வேறுமொழியாதல்

"ஆரியர் வருமுன் தமிழ் இயற்கையாக எப்படி வழங்கினதோ அப்படி வழங்குவதே தனித்தமிழ். அது உலக முதன் மொழி யாதலால் பிற்காலப் பிறமொழிகளில் எழுந்த வல்லொலிகள் பல அதில் இல்லை. அவை அதற்குத் தேவையல்ல. மக்களின் கருத்தைத் தெரிவிக்கும் மொழிக்கு வேண்டியவை சொற்களே யன்றித் தனியெழுத்தொலிகளல்ல. தமிழர் தம் கருத்தைத் தெரிவிக்க வேண்டிய சொற்களெல்லாம் ஏற்கனவே தமிழில் அமைந்துள்ளன. புதுக்கருத்துகளைத் தெரிவிக்கக்கூடிய புதுச் சொற்களைப் புனைந்துகொள்வதற்குத் தேவையான கருவிச் சொற்களும் கருச்சொற்களும் அதில் உள்ளன. மொழி என்பது உண்மையில் ஒலித்தொகுதியே. மக்கள் அறிவும் கருத்தும் சேய்மையர்க்கும் பிற்காலத்தார்க்கும் பயன்படுமாறு, மொழியின் ஒலியுறுப்புகளைக் கட்புலனாகிய வரிவடிவில் எழுதிக்காட்டுவதே இலக்கியம் என்னும் எழுத்துமொழி. ஆகவே மக்கள் இன்றிக் கருத்தில்லை; கருத்தின்றி ஒலியில்லை; ஒலியின்றி வரிவடி வென்னும் எழுத்தில்லை; எழுத்தின்றி எழுதப்பட்ட இலக்கியம் இல்லை. ஒருமொழி தன் இயல்பிற்கு ஏற்காத ஒலிகளை ஏற்பின் நாளடைவில் அது சிதைந்து வேறுமொழியாகிவிடும். ஆகவே, தமிழ் என்றும் தனித்தமிழாகவே வழங்குதல்வேண்டும்.

—பாவாணர்

(தமிழ் இலக்கிய வரலாறு. 254)

## சொல்லாக்கக்குழு

தமிழ், தூய்மையை உயிர் நாடியாகக் கொண்டிருப்பதனாலும், மென்மேலும் பல அயற்சொற்களை இடைவிடாது மொழிபெயர்க்க

வேண்டியிருப்பதனுலும் தனிப்பட்ட புலவரும் மாணவர் குழாங்களும் அறிஞர் குழுக்களும் ஒருபொருட்கு வெவ்வேறு சொல்லை ஆக்கி வழங்குவதனுலும் அவற்றுள் எதை ஆள்வதென்று தெரியாது பொதுமக்கள் மயங்குவதனுலும், ஏற்கெனவே அரசினுல் அமர்த்தப்பட்ட மொழிபெயர்ப்புக்குழு ஒரு துறைக்கே சிறப்பாக உரியதாய் இருப்பதனுலும், தமிழ் வளர்ச்சிக்கு அவ்வப்போது புனைந்து வழக்காற்றுப்படுத்தற்குப் பல்துறையறிஞரைக் கொண்ட ஒருநிலையான சொல்லாக்கக் குழுவை அரசு ஏற்படுத்துவது நன்றுகும்.

## தமிழ்ப்புலவர் பொறுப்பு

தமிழைக் காப்பது தமிழ்நாட்டரசின் தனிக்கடமை. அது அக்கடமை தவறின் நக்கீரரும் மறைமலையடிகளும் சோமசுந்தர பாரதியாரும் இலக்குவனும்போல் தமிழைப் போற்றிக் காப்பது இற்றைத் தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் தலைமேல் விழுந்த தலையாய கடமையாம்.

மேலையாரியர் தமிழ்ச்சொற்களை ஆண்டவாறே நாமும் ஆள வேண்டும் என்றும் சொல்லாக்கத்தில் அவர் கையாண்ட நெறிமுறைகளையெல்லாம் நாமும் கையாள வேண்டுமென்றும் யாப்புறவில்லை. நம் முன்னேர் மரபைப் பின்பற்றியே நாம் சொற்களை ஆக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

—பாவாணர்

(மண்ணில்விண். 247, 248)

## மூலமொழிகளுள் முதன்மொழி

மொழியானது இந்நாட்டிற் பொதுவாய்க் கருதப்படுகிறபடி இறைவனுற் படைக்கப்பட்டதுமன்று; இயற்கையால் உள்ளதுமன்று; மாந்தனுல் ஆக்கப்பெற்றதே. ஆயின், ஒருவனுல் மட்டுமன்று; கழிபல ஊழிகளாகக் கணக்கற்ற தலைமுறையாளரால் சிறிது சிறிதாய் ஆக்கப்பெற்றதாகும். இங்ஙனம் ஆக்கப்பெற்ற

மொழிகள் உண்மையில் ஒருசிலவே. அச்சிலவே அவற்றின் பல்வேறு நிலைகளில் நிகழ்ந்த திரிபு, சுருக்கம், பெருக்கம், கூட்டு, கலப்பு என்னும் ஐம்முறைகளால் ஏறத்தாழ மூவாயிரம் மொழி களாகக் கிளைத்து உலகமெங்கும் பரவி இருக்கின்றன. அம்மூல மொழிகளுள் முதன்மையானது தமிழே; அது தோன்றிய இடம் மாந்தன் பிறந்தகமாகிய குமரி நாடே.

—பாவாணர்

(மூதல் தாய்மொழி, மூகவுரை)

## இளமைகுன்றா இன்றமிழ்

நமது செந்தமிழ் மொழியோ தனக்கு இயற்கையிலேயுள்ள வளப்பத்தானும் தன்னை வழங்கிவரும் நாகரிக நன்மக்களின் அறிவுமுயற்சியாற் பெரிதும் போற்றப்பட்டு வருதலானும் தனது இளமைத்தன்மை குன்றாது இன்னும் உலவிவருகின்றது. சிலர் இளமையிலேயே மூத்துப்போதலையும், வேறுசிலர் முதுமையிலும் அது தோன்றாமல் புத்திளமையோடும் கட்டழகோடும் விளங்கு தலையும் நீங்கள் பார்த்ததில்லையா? பாதுகாப்பினால் இளமையும் வாழ்நாளும் இவ்வாறு நீண்டுவருதல் போலவே, நமது தனித் தமிழையும் தூயதாக வைத்துப் பாதுகாப்போமாயின் அது மக்கள் உள்ளளவும் இறவாது நடைபெறுதல் திண்ணமன்றோ?

—மறைமலையடிகளார்

(கட்டுரை; தனித்தமிழ் மாட்சி)

## இயற்கையுறுப்பும் செயற்கையுறுப்பும்

இயற்கைச் சொற்களால் அமைந்ததாகிய தமிழிற் பிறமொழிச் சொற்களைப் புகுத்துதல் எதுபோல் இருக்கிற தென்றால் எல்லா உறுப்புகளும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு வேறு மண்ணாலும் மரத்தாலும் செயற்கையாக அவ்வுறுப்புகள்போற் செய்து

அவற்றை அதன்கண் ஒட்டவைத்துப் பார்த்தலுக்கே ஒப்பா யிருக்கின்றது.

—மறைமலையடிகளார்

(கட்டுரை: தனித்தமிழ் மாட்சி)

## புதுமொழித் தோற்றம்

மக்களைவிட்டு மொழியும், மொழியைவிட்டு மக்களும் உயிர் வாழ்தல் சிறிதும் இயலாது. 'எனது விருப்பப்படிதான் யான் பேசும்மொழியைத் திரித்தும் அயல்மொழிச் சொற்களோடு கலந்து மாசுபடுத்தியும் வழங்குவேன்; அம்மொழியின் அமைப் பின்படி யான் நடக்கக்கடவேன் அல்லேன்' என்று ஒவ்வொரு வனும் தனது மொழியைத் தன் விருப்பப்படியெல்லாம் திரித்துக் கொண்டு போவானாயின் சிறிது காலத்தில் ஒரு மக்கட் கூட்டத் தாரிலேயே ஒருவரை ஒருவர் அறிந்துகொள்ள முடியாத வகையாய் ஒவ்வொரு சிறு கூட்டத்திற்கும் ஒவ்வொரு புதுமொழி காலந்தோறும் உண்டாகி அம்மக்களை ஒன்றுசேரவிடாமல் அவர்களைப் பலசிறு கூட்டங்களாகப் பிரித்துவிடும்.

—மறைமலையடிகளார்

(கட்டுரை-தனித்தமிழும் கலப்புத்தமிழும்)

## கலைச் சொல்லாக்கக் குழுவில் ஓர் உரையாடல்

1941 இல் அரசினரால் அமைக்கப்பெற்ற தமிழ்க் கலைச் சொல்லாக்கக் குழுவில் ஓர் உரையாடல்: உறுப்பினர்கள் சேலம் கல்லூரி முதல்வர் இராமசாமிக் கவுண்டர்; பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை

**இரா:** சாஸ்திரம் என்ற சொல்லைக்காட்டிலும், நூல் என்ற சொல்லே மிகப் பொருத்தமாக உள்ளது. ஆதலால், நூல் என்ற சொல்லையே ஏற்றுக்கொள்ள உம்மை வேண்டுகிறேன்.

**வை:** அரிய விஞ்ஞானக் கருத்துக்களைத் தொகுத்தும் விரித்தும் ஒழுங்குபடுத்திச் சிறந்தவகையில் கூறுவது சாஸ்திரம் எனப்படும். ஆனால் நூல் என்பது ஏதேனும் ஒன்றைப் பற்றி எழுதப்பட்ட ஒரு புத்தக வடிவத்தைக் குறிப்பதாகும். ஆதலால் கணிதநூல் என்பதைக் காட்டிலும் கணித சாஸ்திரம் என்பதே அதிகப் பொருத்தமுடையது.

**இரா:** தாங்கள் கூறிய இவ்விலக்கணத்திற்கு எடுத்துக்காட்டு உளதோ?

**வை:** எடுத்துக்காட்டு ஒன்றும் இல்லை. யாமே இவ்வாறு வகுத்துக்கொண்டு அதன்படியே பிறவிடங்களிலும் கையாண்டு வருகின்றோம்.

**இரா:** இது உமது சொந்தக் கற்பனை எனின் சாஸ்திரத்தின் இலக்கணத்தை நூலுக்கும் நூலின் இலக்கணத்தைச் சாஸ்திரத்துக்குமாக மாற்றி அமைத்துக்கொள்ளலாமே! நூல் என்ற சொல்லுக்குத் தாழ்ந்த பொருளும் சாஸ்திரம் என்ற சொல்லுக்கு உயர்ந்த பொருளும் கற்பிக்கப்படுவதன் நோக்கம் யாது?

**வை:** அது உலக வழக்கு.

இரா: நூல் என்பதும் சாஸ்திரம் என்பதும் ஒரு பொருள் குறிக்கும் இரு சொற்களாகவே உலகில் வழங்குகின்றன. வியாகர்ண சாஸ்திரம் என்பதும் இலக்கண நூல் என்பதும் ஒரு பொருளையே குறிக்கின்றன. மேலும் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் பதிப்பிக்கப்பட்ட (Tamil Lexicon) தமிழ் அகராதியில் நூல் என்ற சொல்லுக்கு "Systematic treatise; science; சாஸ்திரம்" என்று பொருள் குறிக்கப் பட்டுள்ளது. இதை ஏற்றுக்கொள்வதா அல்லது தங்களது புதிய பொருளைக் கொள்வதா?

வை: பல்கலைக்கழக அகராதியிலுள்ள பொருள் சரியன்று. அது அவசரத்தால் நேர்ந்த பிழையாகும்.

இரா: தொல்காப்பியத்தில் நூலுக்கு இலக்கணம் வகுக்கப் பட்டுள்ளது.

"ஒத்த சூத்திரம் உரைப்பிற் காண்டிகை
மெய்ப்படக் கிளந்த வகைய தாகி
ஈரைங் குற்றமும் இன்றி நேரிதின்
மூப்பத் திருவகை யுத்தியொடு புணரின்
நூலென மொழிப நுணங்குமொழிப் புலவர்"

என்பது நூலின் இலக்கணமாய் இருக்க உங்கள் விருப்பப்படி யெல்லாம் தமிழர் மரபுக்கு முரண்படப் பொருள் கொள்ளுதல் முறையல்லவே?

வை: நூலும் சாஸ்திரமும் ஒருபொருள் குறிப்பனவாயின் சாஸ்திரம் என்ற சொல்லை நீங்கள் ஏன் ஆட்சேபிக் கிறீர்கள்?

இரா: சாஸ்திரம் என்பது வடசொல். நூல் என்ற தூய தமிழ்ச் சொல்லிருக்க அதே பொருளுடைய பிறசொல்லைப் புகுத்துதல் நீதியன்று; மேலும், இது தமிழ்ச் சொல்லாக்கக் குழுவேயன்றி வடசொல்லாக்கக் குழுவல்ல என்பதை உங்களுக்குப் பணிவுடன் நினைப்பூட்டுகிறேன்.

வை : சாஸ்திரம் என்பதும் தமிழ்ச் சொல்லேயாகும். அது தேவாரம் திருவாசகம் முதலிய சமய நூல்களில் ஆளப் பட்டுள்ளது. தமிழில் இரண்டறக் கலந்த சொல்லெல்லாம் தமிழ்ச்சொல் என்பதே எமது துணிபு.

இரா : உங்கள் கொள்கை எனக்கு வியப்பைத் தருகிறது. சாஸ்திரம் என்ற சொல் சமய நூல்களில் காணப்படலாம். ஆனால், அதனாலேயே அது தமிழ்ச் சொல்லாகாது. ஒரு சொல் தமிழ்ச் சொல்லா அல்லது ஆரியச் சொல்லா என அறிவதற்குப் பலமுறைகள் உண்டு. அவற்றுள் ஒன்றினா லாவது உங்களது கொள்கையை நிலைநாட்ட முடியாது.

வை : அடிப்படையான கொள்கையிலேயே உமக்கும் எமக்கும் கருத்து வேற்றுமையுண்டு. ஆதலால் விவாதத்தை நிறுத்திக்கொள்வோம். கமிட்டித் தலைவர் (திரு. கே. சாமி நாதன்) தீர்ப்புப்படியே தீர்ப்புச் செய்து கொள்ளட்டும்.

இரா : அப்படியே ஆகட்டும். சாஸ்திரம் என்ற சொல்லே இக் குழுவினரால் ஏற்கப்படும் என்பதை நான் அறிவேன். ஆனால் தமிழருக்கும் தமிழ்நாட்டுக்கும் நீங்கள் பெருந்தீங்கு விளைவிக்கிறீர்கள் என்பதையும் பிற்காலத்தில் தமிழர்கள் வீறிட்டெழுந்து சீறுவாராயின் அவர்களுக்குச் சமாதானம் கூறும் பொறுப்பு உங்களுடையதாகும் என்பதையும் உங்கட்கு அறிவிக்கிறேன்.

— — —

தலைமை நிலையம்:

79, பிரகாசம் சாலை (பிராட்வே),
சென்னை-108.

கிளை நிலையங்கள்:

திருநெல்வேலி-6. மதுரை-1.
கோயமுத்தூர்-1. கும்பகோணம்-1.
திருச்சிராப்பள்ளி-2.

அப்பர் அச்சகம், சென்னை-108.